AR
932

தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி

820
1956

...சி.வ. பிரகாசம், நிர்வாகி,
பா...குருகுல வித்யாலயம், விருதுநகர்.

கி.
*
பெ.
*
சி.
*
வ.
*
பிரகாசம்
*
நிர்வாகி.

820

தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி

130

நான்காம் பதிப்பு

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.



கி. பெ. சி. வ. பிரகாசம்,
நிர்வாகி,
பாலகுருகுல வித்யாலயம்,
விருதுநகர்.

1956

பதிப்புரிமை.

விலை ரூபாய் ஒன்று.

முதற்பதிப்பு 1951.
இரண்டாம்பதிப்பு 1952.
மூன்ரும்பதிப்பு 1953.
நான்காம்பதிப்பு 1956.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

சதானந்தா அச்சகம்—மகிழ்ச்சி இல்லம்—விருதுநகர்.

இ 74

PRESENTED BY
V. PR. PL. M. KASIVISVANATHAN
CHETTIAR TO
TIRUVALLUVAR LIBRARY, PAGANERI.

YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION
PAGANERI.

PRESENTED BY:
V. PR. PL. M.
KASIVISWANATHAN CHETTIAR
PAGANERI.

ஒரு பள்ளிக்கூடமானது

குழந்தைகளின்	நந்தவனமாகவும்,
பாலர்களின்	வித்யாலயமாகவும்,
இளைஞர்களின்	உயர்தர தமிழ், இந்தி, முதலிய மொழிப் பயிற்சிசாலையாகவும்,
வாலிபர்களின்	தொழிற்பயிற்சிசாலையாகவும்,
மக்களின்	வாசகசாலையாகவும், தேகப்பயிற்சிசாலையாகவும், இயற்கை வைத்தியசாலையாகவும்

இருப்பதோடு

அது மக்களிடம் காந்தீயத்தை ஒளிரச்செய்யும் குன்றின்மேலிட்ட விளக்காகவும் இருத்தல் வேண்டும்.

பொருளடக்கம்.

பாட எண்கள்.	பாடங்களின் தலைப்புகள்.	பக்கம்.
	எழுத்துக்கள்.	
1.	உயிரெழுத்துக்களும் மெய்யெழுத்துக்களும் (ஐந்து கோடுகளில்)	1
2.	அ—வரி முதல் ம—வரி முடியவுள்ள 143 எழுத்துக்கள் (ஐந்து கோடுகளில்)	2
3.	அ—வரி முதல் ம—வரி முடியவுள்ள 143 எழுத்துக்கள் (ஒரு கோட்டில்)	3
	சொற்கள்.	
	143 எழுத்துக்களில் சொற்கள்.	
4.	இரண்டெழுத்துக் குறில்—நெடில் சொற்கள்	4
5.	மூன்றெழுத்துக் குறில்—நெடில் சொற்கள்	5
6.	குறில்—நெடில் எழுத்துக்களை முதலிற்கொண்ட மூன்றெழுத்துச் சொற்கள்	6
7.	குறில்—நெடில் எழுத்துக்களை முதலிற்கொண்ட நான்கெழுத்துச் சொற்கள்	7
8.	247 எழுத்துக்கள் (ஐந்து கோடுகளில்)	8
9.	247 எழுத்துக்கள் (ஒரு கோட்டில்)	10
10.	உச்சரிப்பு விளக்கப் படங்கள்	12
11.	அழுத்தாமலும், அழுத்தியும், அதிகமாய் அழுத்தியும் உச்சரிக்கவேண்டிய எழுத்துக்கள்.	13
12.	ன—வரி, ண—வரி எழுத்துக்கள்கொண்ட சொற்கள்	14

பாட எண்கள்.	பாடங்களின் தலைப்புகள்.	பக்கம்.
13.	ர—வரி, ற—வரி எழுத்துக்கள்கொண்ட சொற்கள்	15
14.	ல—வரி, ள—வரி எழுத்துக்கள்கொண்ட சொற்கள் இரட்டை இரட்டையாகவும், ழ—வரி எழுத்துக்கள் கொண்ட சொற்கள் தனியாகவும்	16
	247 எழுத்துக்களில் சொற்கள்.	
15.	சொற்களுக்கு முதலில்வரும் எழுத்துக்களைக்கொண்ட மூன்றெழுத்துச்சொற்கள்	17
16.	சொற்களுக்கு முதலில்வரும் எழுத்துக்களைக்கொண்ட நான்கெழுத்துச் சொற்கள்	18
17.	ட், ற் என்ற மெய்யெழுத்துக்களுக்குப்பின் எந்த மெய்யெழுத்தும் வரக்கூடாது; வந்தால் பிழையாகும்	19
18.	ந—வரி எழுத்துக்களையும், ன—வரி எழுத்துக்களையும் கொண்ட சொற்கள்	20
19.	தமிழில்வழங்கும் 65 வடமொழி எழுத்துக்கள்	21
20.	வடமொழிஎழுத்துக்கள்கொண்ட பிறமொழிச்சொற்கள்	,,
21.	பிழையாகவோ, கொச்சையாகவோ உச்சரிப்பதால் பிழையாக எழுதப்படும் சொற்களும், அவற்றின் திருத்தங்களும்	22
22.	சொற்களுக்குமுதலில் அதிகமாக வரக்கூடிய குறில்—நெடில் எழுத்துக்கள்	24
	சொற்களில் பயிற்சி	25
	சொற்றொடர்கள்.	
23.	இயல்புச் சொற்றொடர்	27
	விகாரச் சொற்றொடர்கள்.	
24.	தோன்றல் சொற்றொடர்	28

பாட எண்கள்.	பாடங்களின் தலைப்புகள்.	பக்கம்.
25.	கெடுதல் சொற்றொடர்	29
26.	திரிதல் சொற்றொடர்	30
27.	மெய்யும் உயிருங்கூடிய உயிர்மெய்யெழுத்துக்கள்	31
28.	சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றை முதலெழுத்துக்களால் எழுதுதல்	34
29.	பலவிகாரச் சொற்றொடர்கள் (பல உட்பிரிவுகளுடன்)	35
30.	ஆண்பால்—பெண்பால்	47
31.	நேர்பதம்—எதிர்பதம்	48
32.	ஒருமை—பன்மை	49
33.	வேற்றுமை உருபுகள்	50
34.	வேற்றுமையுருபுகள் சேர்ந்த உதாரண வாய்பாட்டுச் சொற்கள்	51
35.	வேற்றுமையுருபுகள் ஏற்கும்பொழுது விகாரமடையும் சொற்கள்	55
	முன்னால் காட்டப்பட்டுள்ள உதாரண வாய்பாட்டைப் பின்பற்றிய பயிற்சிகள்	56
36.	27 வினைமுற்றுக்கள்	58
	பயிற்சி	70
37.	எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்	72
38.	வினைமுற்றைக்கொண்ட விரிவான வாக்கியங்கள்	77
39.	வேற்றுமையுருபுகள் எல்லாவற்றையுங்கொண்ட வாக்கியங்கள்.	82
40	குறிப்பிட்ட பெயர்ச்சொற்களுக்குரிய குறிப்பிட்ட வினைமுற்றுக்கள்	86
41.	நெருங்கிய ஒலிச்சொற்களை விளக்கும் வாக்கியங்கள்	89

பாட எண்கள்.	பாடங்களின் தலைப்புகள்.	பக்கம்.
	எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றில் டிக்டேஷன்	94
	சரள வாக்கியங்கள்.	
42.	பசு	96
43.	காகம்	97
44.	தென்னை	98
45.	விருதுநகர்	99
46.	பாலகுருகுல வித்யாலயம்	100
	சிறு கட்டுரைகள்.	
47.	பசு	102
48.	காகம்	103
49.	தென்னை	104
	வியாசங்கள்.	
50.	விருதுநகர்	105
51.	பாலகுருகுல வித்யாலயம்	107
52.	கடிதம் எழுதும் முறை	109
	பத்திரிகை வாசிக்கப் பயிற்சி; செய்யுட்களைக் கற்கப் பயிற்சி.	115

முகவுரை.

உலகத்திலுள்ள முக்கியமான மொழிகளை இருவகைகளாகப்பிரிக்கலாம்:

1. எழுத்தொலியும் சொல்லொலியும் ஒன்றாக இருக்கும் மொழிகள்.
2. எழுத்தொலியும் சொல்லொலியும் வெவ்வேறாக இருக்கும் மொழிகள்.

இவற்றுள், தமிழ், முதலிய இந்திய மொழிகள், எழுத்தொலியும் சொல்லொலியும் ஒன்றாக இருக்கும் (Phonetic Language) வகையையும்; ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகள் எழுத்தொலியும் சொல்லொலியும் வெவ்வேறாக இருக்கும் (Unphonetic Language)வகையையும் சேர்ந்தவைகளாம்.

எழுத்தொலியும் சொல்லொலியும் ஒன்றாக இருக்கும் தமிழ் முதலிய இந்தியமொழிகளுக்கு, அவைகளின் எழுத்துக்களைப்பிழையின்றி நன்கு கற்றுவிட்டால், அவைகளின் எந்தச்சொற்களையும், சொற்றொடர்களையும் ஒலிப்படி அப்படியே வாசித்துவிடலாம், எழுதிவிடலாம். உதாரணமாக, ‘பசு’ என்ற சொல்லை ப, சு = பசு என்றும்; ‘பசுமாடு’ என்ற சொற்றொடரை ப, சு, மா, டு = பசுமாடு என்றும் வாசித்துவிடலாம்; எழுதிவிடலாம்.

ஆனால், ஆங்கிலம் முதலிய ஐரோப்பிய மொழிகளின் எந்தச்சொல்லையும் எழுத்துக்களின் ஒலிப்படி வாசிக்கவோ, எழுதவோ முடியாது. உதாரணமாக, ‘பசு’ என்று பொருள்படும் ஆங்கிலச்சொல்லாகிய (Cow) என்பதை, ஸி (c), ஓ (o), டபிள்யூ (w) என்று எழுத்துக்கூட்டி ‘கவ்’ (Cow) என்று எழுத்துக்களின் ஒலிக்கு மாறுபட்டு உச்சரிக்கவேண்டும்;

எழுதவேண்டும். ஆங்கிலச்சொற்களெல்லாம் அநேகமாகஇவ்வாறு எழுத்தொலி ஒன்றாகவும், சொல்லொலி வேறொன்றாகவுமுள்ளவைகளே. இக்காரணத்தால், ஆங்கிலச்சொற்களின் எழுத்து வரிசையையும், உச்சரிப்பையும் (Spelling and Pronunciation) குருட்டுப்பாடமாகக் கற்கவேண்டியதிருக்கின்றது. அப்படிக் கற்றவைகளை மறந்துபோகாமலிருப்பதற்காக மனப்பாடமும் செய்துகொண்டே இருக்கவும்வேண்டியதிருக்கின்றது. ஆங்கிலம் இக்காரணங்களாலும், குறிப்பிட்ட இலக்கண வரம்புகளுக்கு உட்பட்டிராத காரணத்தாலும் அதைக்கற்பது கடினமென்பதை எவராலும் மறுக்கமுடியாது.

மேலேகூறிய குறைகளை நீக்கும்பொருட்டு ஆங்கில எழுத்துக்களை அதிகப்படுத்தியும், சில திருத்தங்களைச் செய்தும், ஆங்கிலத்திற்கும் தமிழைப்போல எழுத்தொலியையும் சொல்லொலியையும் ஒன்றுபோலாக்க உலகப்பேரறிஞர் பெர்னாட்ஷா பாடுபட்டாரென்பது உலகமறிந்ததே! ஆங்கில மொழிக்கு எழுத்துமாற்றம் செய்யப்படவேண்டுவது மிகமிக அவசியமாயிருந்தும், அதைச்செய்து அதற்கு அழிவைத்தேடிக் கொள்ள ஆங்கிலேயர்களில் எவருமே சம்மதிக்கவில்லை.

உலகத்தில், தாளும் அச்சியந்திரசாலைகளும் தோன்றியபிறகே பேச்சுவழக்கிலிருந்துவந்த வசனம் புத்தக வடிவத்திலும், பத்திரிகை வடிவத்திலும் வெளிவரலாயிற்று. அதற்குமுன், செய்யுள்மட்டுந்தான் நூல்வடிவத்திலிருந்துவந்தது.

தமிழில் வசனநடைவேறு; உரைநடைவேறு. தாளும், அச்சியந்திரசாலைகளும் தோன்றுமுன், செய்யுட்களுக்கு உரை அதாவது பொருள் கூறுவதற்காக ஏற்பட்டதே உரைநடையாம். செய்யுட்களுக்குப்பொருள்கூறுவதற்கு ஏற்பட்ட உரைநடை அந்தச்செய்யுட்களைவிடக் கடினமாக இருந்தது. இந்த உரைநடை இன்று அழிந்துவிட்டது. அச்சுயுகத்தில் புத்தகமும், பத்திரிகையும் ஏற்பட்டபிறகு வந்ததுதான் வசனநடை.

வசனநடையில், தமிழ்ப்புத்தகங்களும், பத்திரிகைகளும், கடிதங்களும் வெளிவரத்தொடங்கியவுடன், தமிழ்வசனத்தைக்கற்க, தமிழ்ப்பெரும்புலவர்ஆறுமுகநாவலரவர்கள், 1872ஆம் ஆண்டில் "பாலபாடம்" என்னும் பெயரால் பிரசித்திபெற்ற நான்கு தமிழ்வாசகப்புத்தகங்களைத்தமிழுலகிற்கு வெளியிட்டு உதவினார். அவைகளில் அவர் தமிழ்வசனத்தை எளிதாகக்கற்க, அதை எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் என்றுபிரித்து, முறையே ஒவ்வொன்றாகக்கற்கவேண்டுமென்று திட்டம் வகுத்தார். அன்றியும் தமிழ் 247எழுத்துக்களையும் அரிச்சுவடிப்படி வரிக்கு 13எழுத்துக்கள்வீதம் 19வரிகளில் அமைத்துக்காட்டி, முதலில் முதல்வரியிலுள்ள 12உயிரெழுத்துக்களை நன்கு உச்சரிக்கவும், அதற்கடுத்து உயிரெழுத்து ஒலிகளையேகொண்ட மற்றப்பதினெட்டு வரிகளையும் உடனேசொல்லவும், முதல்வரி உயிரெழுத்துக்களை முதலில்கற்றபிறகே, அடுத்தவரிகளைக் கற்கவேண்டுமெனவும் எளிதான வழிவகுத்துக்காட்டினார். அவர் பாலபாடப் புத்தகத்தில் சொற்களைக்கற்பதற்கு படங்களையும், தெரிந்த சொற்களையும் பாடங்களாகப்போடாமல், சொற்களை எளிதாக எழுத்துக்கூட்டிச்சொல்வதற்கும், எழுதுவதற்கும் உதவியாகஇருக்கும்பொருட்டு ஓரெழுத்துச்சொற்கள், ஈரெழுத்துச் சொற்கள், மூவெழுத்துச்சொற்கள், நான்கெழுத்துச்சொற்கள் எனப்படிப்படியாகப்பாடங்களை அமைத்துக்காட்டியுள்ளார். தமிழில் இருசொற்கள்சேர்ந்த சொற்றொடர்கள்ஏராளமாக இருப்பதால், சொற்றொடர்களைக்கற்காமல், வாக்கியத்தைக் கற்கவே முடியாது. இதற்காக அவர் அப்புத்தகத்தில் சொற்றொடர்களைக்கற்கப் பாடங்களை அமைத்துள்ளார். கடைசியில் வாக்கியங்களையும் சிறியவாக்கியங்களென்றும், நீளமானவாக்கியங்களென்றும் பிரித்து அமைத்துள்ளார்.

'தமிழ்மொழிக்கு முதலெழுத்து முப்பதுதான்' என்பதைத் தெரிந்துகொள்ளாமல், '247எழுத்துக்கள் இருக்கின்றனவே!' என்று பயந்துகொண்டு, சொற்களில் அதிகமாக வரக்கூடிய எழுத்துக்களையோ, அவைகளைக்கொண்ட சொற்களையோ

கற்றுக்கொடுத்தால் தமிழை ஒருபோதும் பிழையின்றிக் கற்றுக்கொடுக்க முடியாது.

ஆங்கிலஎழுத்துக்கள் 26தான். ஆனால், ஒரு எழுத்திற்கு நான்கு வடிவங்கள் வீதம் 104வடிவங்கள் இருக்கின்றன. நம் பிள்ளைகளுக்கு அன்னியமொழியில் 104வடிவங்களைக் கற்றுக்கொடுக்கின்றவர்கள் தாய்மொழியாகிய நம் தமிழ்மொழியின் முதலெழுத்துக்கள் 30 வடிவங்களை, என் கற்றுக்கொடுக்கக்கூடாது?

உயிரெழுத்துக்கள் 12; மெய்யெழுத்துக்கள் 18; ஆக 30எழுத்துக்களுக்குமட்டுந்தான் தனிவடிவமும், தனிஒலியும் உண்டு. 216உயிர்மெய்யெழுத்துக்களுக்கும் தனிவடிவமோ, ஒலியோ கிடையாது. உயிரெழுத்தின் ஒலியும், மெய்யெழுத்தின் ஒலியும் சேர்ந்ததே உயிர்மெய்யெழுத்தின் ஒலியாகும். உயிர்-மெய்யெழுத்துக்கள் 216ம் மெய்யெழுத்துக்கள் 18இன் வடிவங்களிலிருந்து உண்டாக்கப்பட்டவைகளே. இக்காரணங்களால் தமிழ்எழுத்துக்களை எளிதில்கற்கமுடிவதுடன் குறைந்த எழுத்துக்களைக்கொண்ட மொழிகளைப்போல தமிழை விரைவில் 'டைப்' அடிக்கவும், அச்சுக்கோக்கவும் முடிகின்றது. அச்சடிக்க குறைந்த நிறையில் எழுத்துக்கள் போதுமானவை. தமிழில் அதிகமான பிரதிகளுடன் வெளிவரும் 'தினமணி'ப் பத்திரிகையின் எழுத்துக்கள் டைப் அடித்துக்கோக்கப்பட்டு அச்சடிக்கப்படுகின்றன.

திட்டவட்டமானவடிவத்தில் அச்செழுத்துக்கள் ஏற்பட்டு, அவைகளில் இலட்சக்கணக்கானபுத்தகங்களும், பத்திரிகைகளும் வெளிவந்து அவைகளைக்கோடிக்கணக்கான மக்கள் கற்றபிறகு, எழுத்துமாற்றத்துடன் தமிழை அச்சடிப்பதும், எழுதுவதும் தமிழ்மொழியைச்சிதைப்பதாகும்.

நம்நாடு, ஆங்கிலேயருக்கு அடிமைப்பட்டு, இங்கு ஆங்கிலம்ஆட்சிமொழியானவுடன், ஆங்கிலத்தைக்கற்கபலஆங்கில

வாசகப் புத்தகங்களும், அவைகளைக்கற்றுக்கொடுக்கும் முறைகளைப்பற்றிய பல புத்தகங்களும் அரசாங்கத்தாரால் வெளியிடப்பட்டன. அவர்கள் அப்புத்தகங்களிலுள்ள ஆங்கிலச்சொற்களைப் படங்கள் மூலமாகவும், தெரிந்தசொற்கள் மூலமாகவும் ஆண்டிற்கு இத்தனைசொற்கள்தாம் கற்கஇயலுமெனத் திட்டம்செய்தனர். அச்சொற்களுக்குச் சொல்லொலியும், எழுத்தொலியும் வெவ்வேறாக இருப்பதால், அவைகளை ஒவ்வோர் ஆண்டிலும் கொஞ்சங்கொஞ்சமாகத்தான் கற்கமுடியும். அன்றியும் அது இலக்கணவரம்பிற்குள் அடங்காத மொழியாகையால், கற்கின்றவர்களின் மனநிலையை யறிந்துதான் அதைக்கற்றுக்கொடுக்க வேண்டும்.

ஆங்கிலத்தைக்கற்றுக்கொடுக்கும் ஆசிரியர்களுக்கு மாதிரிவகுப்புக்கள்மூலமாக ஆங்கிலத்தை எப்படி மற்றவர்களுக்குக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்பதைக்காட்டுவதற்காகவும், அவர்களுக்கு மனோதத்துவசாஸ்திரத்தைப்போதிப்பதற்காகவும் அரசாங்கத்தாரால் ஆசிரியர் போதனாமுறைப்பள்ளிக்கூடங்கள் பல ஏராளமான பணச்செலவில் ஏற்படுத்தப்பட்டன.

ஆசிரியர் போதனாமுறைப்பள்ளிகளில் படிக்கும் ஆசிரியமாணவர்களில் அநேகருக்குத் தமிழைக் குறில்—நெடில் பிழைகளின்றிக்கூட எழுதவாசிக்கத்தெரியாது. அவர்களுக்குத் தமிழைப்பிழையின்றி எழுதவாசிக்கக் கற்றுக்கொடுப்பதற்குப் பதில், தமிழைக்கற்றுக்கொடுக்கும் பல முறைகளைப்பற்றியும், (Method) குழந்தைகளின் மனோதத்துவசாஸ்திரத்தைப்பற்றியும் பெருஞ்செலவில் இரண்டாண்டுகாலத்திற்குப்போதிப்பது கேலிக்கூத்தாகும்.

இப்போது வார்தாக்கல்வி என்றும், ஆதாரக்கல்வி என்றும், டெல்லிக்கல்வி என்றும் சொல்லப்படும் நூதனக்கல்விமுறையை, சென்னை அரசாங்கம், பள்ளிக்கூடங்களில் பரப்பிவருகின்றது. இம்முறைப்படி கீழ்வகுப்புக்களில் தமிழைக்கற்க

புத்தகமோ, கணக்கைக்கற்கப் புத்தகமோ பெருக்கல்வாய்பாடோ கூடாவாம். தொழில்மூலமாக தமிழையும், கணக்கையும், மற்றவைகளையும் கற்றுவிடவேண்டுமாம். பிள்ளைகள் தக்ளி, இராட்டு. மணை, பருத்தி முதலியவைகளை உபயோகிப்பதன்மூலம் அவைகளின் பெயரைத்தெரிந்துகொண்டு எழுதிவிடவும், வாசித்துவிடவும் வேண்டுமாம். பருத்தியிலிருந்து விதைகளைஎடுத்து, அவைகளை எண்ணுவதன்மூலமாகவும், நூலை வீசனத்தில் சுற்றுவதன்மூலமாகவும், நெய்வதன்மூலமாகவும் கணக்கைக்கற்றுவிடவேண்டுமாம்; வேடிக்கையே!

எழுத்தொலியும், சொல்லொலியும் ஒன்றாக இருக்கும் தமிழ் முதலிய இந்தியமொழிகளுக்கு மேலேகூறப்பட்ட வழிகளும், முறைகளும் வேண்டாதவைகளாகவும், பெருங்கேடுகளை விளைவிப்பவைகளாகவுமிருந்தும் அவைகள் தமிழ்வாசகப்புத்தகங்களிலும், தமிழ்கற்றுக்கொடுக்கும் முறையிலும் புகுத்தப்பட்டு பின்பற்றப்படுகின்றன.

ஆசிரியர்போதனாமுறைப்பள்ளிக்கூடங்கள் தமிழைக்கற்றுக்கொடுப்பதற்குப்பின்பற்றிவரும் தவறானவழிகளையே, அரசாங்கப்புத்தக அங்கீகாரக்கமிட்டியார்களும், கல்விஇலாகா அதிகாரிகளும், ஆசிரியர்களும் நாடெங்கும் பரப்பிவருகிறார்கள்.

மேலேகூறிய தவறானவழிகளைப்புத்தகவியாபாரிகளும் தங்கள்இலாபத்திற்குப்பயன்படுத்திக்கொண்டு, வியாபாரநோக்கத்துடன் தமிழ்வாசகப்புத்தகங்களைப்பலவிதமாகப்புதிதுபுதிதாகவும், அழகழகாகவும்வெளியிட்டு, அவைகளுக்குப் புத்தக அங்கீகாரக்கமிட்டியாரிடம் அங்கீகாரம்பெற்று, பள்ளிக்கூடநிர்வாகிகளையும், ஆசிரியர்களையும் கண்டுபேசி அவர்களுக்கு அவைகளை விற்றுவருகிறார்கள்.

ஆங்கிலத்திற்குத் தமிழைப்போல் சொற்றொடர்கள் இல்லாதபடியால், அதன் சொற்களைக்கற்றவுடன், வாக்கி

யத்தைக்கற்பது சரியே. ஆனால், தமிழுக்கோ, சொற்றொடரைக் கற்றபிறகுதான் வாக்கியத்தைக்கற்கமுடியும். ஏனென்றால், தமிழில் சொற்றொடரில்லாத வாக்கியத்தைக்காண்பதரிது. முதல்வகுப்புத்தமிழ்வாசகப்புத்தகங்களிலேயே, சொற்றொடர்களுடன்கூடிய வாக்கியங்களிருப்பதைக் காணலாம். சொற்களைக்கற்றுக்கொடுக்கப் படங்கள் போடவேண்டுமென்கின்றவர்களால், சொற்றொடர்களைக்கற்றுக்கொடுக்கப்படங்கள்போடமுடியுமா? ‘கதவடை’’ என்ற சொற்றொடரை கதவு+அடை என்று பிரித்து ‘கதவடை: என்று சொல்லிக்காட்டாவிட்டால், பிள்ளைகள் அதை எவ்வாறு எளிதில் விளங்கிக்கொள்ளமுடியும்?

படங்கள், மக்களுக்கு மகிழ்ச்சியூட்டுவதற்கும், பொதுஅறிவை வளர்ப்பதற்கும் உபயோகப்படுமேயன்றி, சொற்களை எழுதவும், வாசிக்கவும், கற்கவும் உபயோகப்படா. மேலும் சொற்களை எழுதவும், வாசிக்கவும், கற்கவும் படங்களை உபயோகிப்பதால், கற்பதற்குப்பெரும்பாதகமும் ஏற்படும்.

தமிழ்வசனத்தை எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் என்று பிரித்துத்தான் கற்கவேண்டுமென்று ஆறுமுக நாவலரவர்கள் காட்டிய வழியை, அனுபவத்தைக்கொண்டு, மேலும்மேலும் அபிவிருத்திசெய்து, புத்தகம்வெளியிட்டு, அதன்படி கற்றுக்கொடுக்காததாலும், தமிழ்மொழியின்அமைப்புக்கே முற்றிலும்மாறுபட்ட புத்தகங்களைக்கொண்டு தமிழைக்கற்றுக்கொடுத்துவருவதாலும், இக்காலத்தில் பத்தாண்டுகளுக்கு அதிகமாகத்தமிழ்கற்றவர்களிலும் “காந்தம்” என்பதைக் “கந்தம்” என்றும்; “கொடுத்தான்” என்பதைக் “கெடுத்தான்” என்றும்; “கேட்டான்” என்பதைக் “கெட்டான்” என்றும்; “போடி” என்பதைப் “பொடி” என்றும் குறில்நெடில் எழுத்துக்களின் பேதங்களைக்கூடத்தெரிந்துகொள்ளாமல் பிழையுடன் எழுதுகின்றவர்களும், வாசிக்கின்றவர்களும் இருக்கக்காணலாம். அன்றியும், “தினமணி” என்பதைத் “திணமணி” என்றும்; “திருக்குறள்” என்பதைத் “திருக்குரல்” என்றும் அழுத்தாமலும்,

அழுத்தியும் சொல்லவேண்டியஎழுத்துக்களைக்கூடத்தெரிந்து கொள்ளாமல் பிழையுடன் எழுதுகின்றவர்களும், வாசிக்கின்றவர்களும் இருப்பதையும் பார்க்கின்றோம்.

தமிழ்வசனத்தைப்பிழையின்றி எழுதுகின்ற, வாசிக்கின்ற சிலருங்கூட, பல ஆண்டுகள் தமிழை ஏராளமாக வாசித்தும், எழுதியும் பிழைகளைத்தாங்களாகவே கண்டுகண்டு திருத்திக்கொண்டவர்களேயன்றி, ''தமிழ்கற்கும்வழி'' புத்தகங்களின் உதவியாலோ, அல்லது ஆசிரியர்களின் உதவியாலோ அத்திறமையை அடைந்தவர்களல்லர். இந்த உண்மைகளை எல்லோரும் தங்கள் தங்கள் அனுபவத்தைக்கொண்டு சிந்தித்தால் தெரிந்துகொள்ளலாம்.

உலகத்தில் தோன்றிய மொழிகளுள், தமிழ்மொழியே முதன்மொழி; மற்றமொழிகள்கலக்கப்பெறாத தனிமொழி; சொல்வளம் நிறைந்தமொழி. அது வளம்பெறுவதற்குப் பிறமொழிச்சொற்கள் தேவையில்லை. இடைக்காலத்தில்தோன்றிய ஆங்கிலம், இந்தி முதலிய மொழிகளுக்குத்தான் பிறமொழிச்சொற்கள்தேவை.

தமிழ்நாட்டில், வடமொழியும், ஆங்கிலமும், இந்தியும் ஆதிக்கஞ்செலுத்திவருங்காரணத்தால், தமிழில் புகுந்துவரும் பிறமொழிச்சொற்களைக்களைந்து அவைகளுக்குச் சரியான தனித்தமிழ்ச்சொற்களை நடைமுறைக்குக்கொண்டுவரப் பாடுபடவேண்டும். தமிழில்கலந்திருக்கின்ற பிறமொழிச்சொற்களை எவரும் எளிதில் தெரிந்துகொள்வதற்கு உதவியாகஇருக்கும் பொருட்டு, பிறமொழிச்சொற்களுக்கு நேரான தனித்தமிழ்ச் சொற்களைக்கொண்ட அகராதிகளை மூன்று, நான்குபிரிவுகளாகப்பிரித்து, சிறுசிறு அகராதிகளாக மலிவானவிலையில் வெளியிடுவதாக இருக்கின்றோம். அவைகளைத் தமிழன்பர்கள் நாடெங்கும்பரப்ப முன்வருவார்களாக!

''தமிழ்வசனத்தை எளிதில்கற்கும்வழி'' என்ற இப்புத்தகம் தனித்தமிழில் எழுதவோ, பேசவோ, கற்றுக்கொடுப்பதற்காக ஏற்பட்டதன்று. சாதாரணத்தமிழ்வசனத்தைப் பிழையின்றி எழுத, வாசிக்கக்கற்றுக்கொடுப்பதற்காகவே ஏற்பட்டதாகும். தமிழில் சொல்வளம்பெற்று தனித்தமிழில் எழுதுகின்ற, பேசுகின்ற சிலரும், தமிழை மக்கள் பிழையின்றிக்கற்கச் செய்ய, முயற்சிஎடுக்காமலிருப்பது மிகவும் வருந்தத்தக்கது. இவர்களை எங்கள்முயற்சிக்கு ஆதரவுகொடுக்கும்படி கேட்டுக்கொள்கிறோம். இன்று தமிழ்நாட்டில் சீத்தலைச்சாத்தனாரைப் போன்றவர்கள் இல்லாவிட்டாலும், மக்கள் தமிழில்விடும் பிழைகளைக்கண்டு மனம் வருந்துகின்றவர்களாவது இருக்க வேண்டாமா?

மக்கள் தமிழைப்பிழையின்றி எழுதவும், வாசிக்கவும் வேண்டுமென்பதற்காக எங்கள் பாலகுருகுல வித்யாலயம் சென்ற பதினாறுஆண்டுகளுக்குமேலாக உழைத்துவருகின்றது. இப்புத்தகம் பலதரப்பட்டவர்களுக்கும் கற்றுக்கொடுத்துப் பார்த்த முதிர்ந்த அனுபவத்தைக்கொண்டு இப்பொழுது நான்காம் பதிப்பாக வெளிவருகின்றது. எனவே இது வெறுந்திறமையால் மட்டும் வெளியிடப்பட்டதன்று.

உலகத்தில் தாளும், அச்சியந்திரசாலைகளும் தோன்றியபிறகுதான், புதிய கல்வியுலகம் ஏற்பட்டிருக்கின்றது. புதிய கல்வியுலகம் ஏற்பட்டதுமுதல், நம் தமிழ்நாட்டில் இதுகாறும் ஆங்கிலம் ஆட்சிமொழியாக இருந்துவந்ததும், இப்பொழுதுங்கூட இருந்துவருவதும் நம் கெட்டகாலமே! இதனால் நம் தமிழ்நாட்டில் இன்னும் புதிய கல்வியுலகம் ஏற்படவில்லை. அநேகருக்கு இன்னும் தமிழ்மொழிப்பற்று ஏற்படவில்லை. தமிழைப்பிழையின்றி எளிதாகவும், விரைவாகவும் கற்கப் புத்தகங்கள்கூட ஏற்படவில்லை. நம் தமிழ்நாட்டிற்கு தாளும், அச்

சியந்திரசாலேகளும் வந்த சிலஆண்டுகளுக்குப்பிறகாவது, நம்நாடு ஆங்கிலேயருக்கு அடிமைப்பட நேர்ந்து, ஆங்கிலம் ஆட்சிமொழி யாகச்செய்யப்பட்டிருந்தாலும், அந்தச்சிறியகாலத்திற்குள் தமிழ் வசனத்தையும், செய்யுளேயும், இலக்கணத்தையும், இசையையும் அவைகளினமைப்புப்படி எளிதில் கற்கப் பலபுத்தகங்கள் ஏற்பட் டிருக்கும்.

வசனநடையில் புத்தகங்களும் பத்திரிகைகளும், கடிதங்களும் ஏற்பட்டுவிட்டபிறகு, வசனத்தைக்கற்றபிறகுதான் செய்யுளேக்கற்கவேண்டும். இரண்டையும் ஏககாலத்தில்கற்க முற்படக்கூடாது. வசனமே தினசரிவாழ்விற்கு அவசியமானது; கற்பதற்கும் எளியது!

நம்தேசத்தில் ஆங்கிலேய ஆட்சி நீங்கியவுடன், இந்தியஅரசாங்கம், இந்தியை இந்தியாமுழுவதற்கும் ஆட்சி மொழியாக்கிக்கொண்டு வருகின்றது. தமிழ்நாட்டில், தமிழ் ஆட்சிமொழியாகுமுன், இந்தி ஆட்சிமொழியாகுமானல், அது தமிழுக்கும், தமிழ்நாட்டிற்கும் பெரும்பாதகத்தை உண்டுபண் ணியே தீரும். தமிழ்மாகாணம் ஏற்படுவதும், தமிழ் ஆட்சி மொழியாக வருவதும் தமிழும், தமிழ்நாடும் அழிந்துபோகாமல் வளர்ச்சியடைவதற்கேயாம்.

ஆகையால், தமிழ்நாட்டினர் அனேவரும் தமிழ் மாகாணம் உடனே ஏற்படவும், தமிழைப்பிழையின்றிக்கற்றுத் தமிழை ஆட்சிமொழியாக்கவும் பாடுபடவேண்டும். வெள்ளேக் காரர்கள் தங்களுடைய தாய்மொழியில்மட்டும் கையெழுத்துப் போட்டுத் தேசபக்தியுடனிருப்பதுபோல, தமிழ்நாட்டைத் தாய்நாடாகக்கொண்டநாம், ஆங்கிலத்திலோ அல்லது இந்தி யிலோ கையெழுத்துப்போடாமல் தமிழில் மட்டுமே கையெழுத் துப்போட்டு தமிழ்நாட்டின்மீதும், தமிழின்மீதும் பற்றுள்ளவர் களாகவும், பக்தியுள்ளவர்களாகவும், விசுவாசமுள்ளவர்களாகவும் இருக்கவேண்டும். நாம் தமிழில் கையெழுத்துப்போடாமல் பிற

மொழியில் கையெழுத்துப்போடுஞ்செய்கையானது, நம்அடிமைப் புத்தியைக்காட்டுவதோடு, நம்மிடையே வேரூன்றியுள்ள சுய நலத்தையும் சுட்டிக்காட்டுவதாகும்.

தமிழ்மாகாணம் ஏற்படுவதற்கும், தமிழ் ஆட்சி மொழியாவதற்கும் நாம் பாடுபடுவதையும், தமிழில் கையெழுத் துப்போடுவதையும் மொழிவெறியென்று சிலசுயநலக்காரர்களும், துரோகிகளும் சொல்வார்கள்; ஏமாறவேண்டாம்.

இப்புத்தகத்தின் உபயோகம்.

இப்புத்தகம், தமிழ்வசனத்தைப்பிழையின்றி எழுத, வாசிக்கக்கற்றுக்கொடுப்பதற்காகமட்டுமே ஏற்பட்ட தாகும்; பொதுஅறிவையோ, விஷயஞானத்தையோ கற்றுக் கொடுப்பதற்காக ஏற்பட்டதன்று. ஒருமொழியைக்கற்றுக் கொடுக்கும்போது, அத்துடன்சேர்த்தே பொது அறிவையும், விஷயஞானத்தையும் கற்றுக்கொடுத்துவிடவேண்டுமென்று புத் தகம் வெளியிடக்கூடாது. அவ்விதப்புத்தகங்களே வெளியிடுவது விபரீதப்பேராசையாகும். பிழையின்றி வாக்கியங்களே எழுதவும், வாசிக்கவும் தெரிந்துகொண்டபிறகே, பொதுஅறிவைவளர்க்கக் கூடிய புத்தகங்களேயும், பத்திரிகைகளேயும் வாசிக்கச்செய்ய வேண்டும்.

இப்புத்தகத்தில் பிழையின்றி சொந்தத்தில் கணக் கற்ற வாக்கியங்களேச்சொல்லவும், எழுதவும், வாசிக்கவும் வழி காட்டியுள்ளோம். இப்புத்தகப்படி, தமிழ்வசனத்தைக்கற்றுக் கொடுத்துவிட்டால், பொதுஅறிவுக்கான புத்தகங்களேயும், பத் திரிகைகளேயும் எவரும் தாமாகவே பிழையின்றி வாசிக்கமுடியும். பிழையின்றிவாசித்துவிட்டால், விஷயம் தானே அவர்களுக்கு விளங்கிவிடும். ஒருவர் பிழையுடன்வாசிக்கும்போது, அவருக்கு அவ்விஷயமே விளங்காமலிருப்பதோடு, அவர் விபரீதமான பொருள்கொள்வதற்கும் ஏது ஏற்படுகின்றது. தமிழைப் பிழை யின்றிக்கற்கமுடியாவிட்டால், அதைக்கற்காமலிருப்பதே நலம்!

மொழித்திறத்தால் முட்டறுப்பதே கல்வி; கல்விக்கழகு கசடற மொழிதல். ஆகவே பிழையின்றிப்பேசவும், எழுதவும், வாசிக்கவும் கற்றுக்கொடுப்பதே கல்விக்கு அஸ்திவாரமாகும்.

தமிழ் வசனத்தைக்கற்றுக்கொடுக்க, வகுப்புவாரி வாசகப்புத்தகங்கள் தேவையில்லை. ஆங்கிலத்தைக்கற்றுக்கொடுப்பதற்குத்தான் வகுப்புவாரி வாசகப்புத்தகங்கள் தேவை. தமிழ் வசனத்தைக்கற்றுக்கொடுக்க இந்த ஒரு புத்தகமே மூன்றாவது வகுப்புமுதல் எட்டாவது வகுப்புவரைக்கும் போதுமானது. இப்புத்தகத்திற்கண்ட பாடங்களுக்குரிய மாதிரிக்கேள்விகளை அனுபந்தம் 3இல் பார்க்க.

தபால் (Postal Tuition) மூலம் கல்விகற்கும் காலம் இது. ஆகவே இப்புத்தகத்தை எட்டாம் வகுப்பிற்கு மேல் படித்த எவரும், தாங்களாகவே பலதடவைகள் படித்தும், இதிலுள்ள பயிற்சிகளைச்செய்தும், தமிழ்வசனத்தை வாசிப்பதிலும், எழுதுவதிலும் ஏற்படும் பிழைகளை எளிதில் போக்கிக்கொள்ளலாம். எதிலாவது சந்தேகங்கள் ஏற்பட்டால் எங்களுக்கு எழுதிக்கேட்டு அவைகளைப்போக்கிக்கொள்ளலாம். இப்படிப்பிழையின்றிக்கற்றவர்கள், இப்புத்தகத்தின் உதவியால் மற்றவர்களுக்கும் தமிழ்வசனத்தைப்பிழையின்றி எழுத, வாசிக்க எளிதில் கற்றுக்கொடுக்க முடியும். அவர்கள் ஆசிரியத்தொழிலில் பயிற்சிபெற்றவர்களாயிருக்கவேண்டுமென்பதில்லை. ஆசிரியர்களும் இப்புத்தகத்தை நன்கு படித்து, இதிலுள்ள பயிற்சிகளைச் செய்துபார்த்தால்தான் மாணவர்களுக்குக் கற்றுக்கொடுக்க முடியும்.

ஆசிரியர்கள் இப்புத்தகத்தை நன்கு படித்த பிறகு, தங்களிடம் தனியாகப் (Private Tuition) படிக்கும் மாணவர்களுக்கு இப்புத்தகத்தை வாங்கிக்கொடுத்து, இதன்படி கற்றுக்கொடுத்து நன்மையைக் காணவேண்டும். தங்கள்

சொந்தப்பிள்ளைகளுக்கும், தெரிந்த மாணவர்களுக்கும் கற்றுக்கொடுத்து அனுபவம் பெறவேண்டும். இப்படி அனுபவம்பெற்ற பிறகு, பள்ளியில் இரண்டாவது வகுப்பிற்கு மேற்பட்ட மாணவர்களுக்கு இப்புத்தகத்தை வாங்கிக்கொடுத்து வகுப்புத்தமிழ்ப் பாடநேரத்தில் இதை பிழைநீக்கும் ஓர் அகராதியாக வைத்துக்கொண்டு, சிறிதுநேரம் கற்றுக்கொடுக்கவேண்டும். வகுப்புத்தமிழ்வாசகப்புத்தகங்களை மாணவர்களின் பொது அறிவையும், விஷயஞானத்தையும் வளர்ப்பதற்குப் பயன்படுத்திக்கொள்ள வேண்டும்.

முதல் இரண்டுவகுப்புக்களுக்கு இப்புத்தகத்தை வாய்மொழிப்பயிற்சி (Oral Drill) க்குமட்டும் வைத்துக்கொள்ள வேண்டும். அவ்வகுப்புக்களில் இப்புத்தகத்தில் கூறப்பட்டுள்ளபடி எழுத்துக்களையும், சொற்களையும், சொற்றொடர்களையும், வாக்கியங்களையும் ஆசிரியர் சுத்தமாகச்சொல்லச்சொல்ல, பிள்ளைகளும் சுத்தமாகச்சொல்லும்படி செய்யவேண்டும். சுத்தமாகச்சொல்லத்தெரிந்தவுடன், சொற்களையும், சொற்றொடர்களையும் எழுத்துக்கூட்டிச்சொல்லும்படி செய்யவேண்டும். ஏனெனில், சுத்தமானதமிழ், நாப்பழக்கத்தினால்தான் ஏற்படமுடியும். இவ்வாறு முதல் இரண்டுவகுப்புக்களிலுள்ள பிள்ளைகளுக்குப்பயிற்சியளித்துவிட்டால், அவர்கள் மூன்றாம் வகுப்பிற்கு வந்தவுடன் இப்புத்தகத்தை வெகுஉற்சாகத்துடன் எளிதாகவும், விரைவாகவும் கற்றுவிடுவார்கள்.

எழுதப்படிக்கத்தெரியாத வயதுவந்தோர்களுக்கும் கற்றுக்கொடுக்க இப்புத்தகம் ஒருபெரும் வரப்பிரசாதமாகும்.

“சேமமுறவேண்டுமெனில் தெருவெல்லாந்தமிழ்முழக்கம்
செழிக்கச்செய்வீர்.”

கி. பெ. சி. வ. பிரகாசம்,
நிர்வாகி,
பாலகுருகுல வித்யாலயம்.

விருதுநகர்,
1—5—'56.

குறிப்பு:— இப்புத்தகத்திலுள்ள பாடங்களைக்கற்றுக்கொடுக்கும் விதத்தை அனுபந்தத்தில் பார்க்க.

பாடம் 1

உயிரெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும்.

அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ.

ஒ, ஓ; ஔ. ஃ

க் ங் ச் ஞ் ட் ண் த் ந் ப் ம்

ய் ர் ல் வ் ழ் ள் ற் ன்

ெ ே ை

ஜ் ஸ் ஷ் க்ஷ் ஹ்

குறிப்பு:— எழுத்துக்களைக் கற்றுக்கொடுக்கும் விதத்தை அனுபந்தத்தில் பார்க்க.

பாடம் 2 அ—வரி முதல் ம—வரி முடியவுள்ள 143 எழுத்துக்கள். (5 கோடுகளில்)

அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ ஃ

க கா கி கீ கு கூ கெ கே கை கொ கோ கௌ க்

ங ஙா ஙி ஙீ ஙு ஙூ ஙெ ஙே ஙை ஙொ ஙோ ஙௌ ங்

ச சா சி சீ சு சூ செ சே சை சொ சோ சௌ ச்

ஞ ஞா ஞி ஞீ ஞு ஞூ ஞெ ஞே ஞை ஞொ ஞோ ஞௌ ஞ்

ட டா டி டீ டு டூ டெ டே டை டொ டோ டௌ ட்

ண ணா ணி ணீ ணு ணூ ணெ ணே ணை ணொ ணோ ணௌ ண்

த தா தி தீ து தூ தெ தே தை தொ தோ தௌ த்

ந நா நி நீ நு நூ நெ நே நை நொ நோ நௌ ந்

ப பா பி பீ பு பூ பெ பே பை பொ போ பௌ ப்

ம மா மி மீ மு மூ மெ மே மை மொ மோ மௌ ம்

பாடம் 3 அ—வரி முதல் ம—வரி முடியவுள்ள 143 எழுத்துக்கள். (ஒரு கோட்டில்)

அ, ஆ, இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ, ஒ, ஓ; ஔ, ஃ.

க, கா; கி, கீ; கு, கூ; கெ, கே; கை, கொ, கோ; கௌ, க்.

ங, ஙா; ஙி, ஙீ; ஙு, ஙூ; ஙெ, ஙே; ஙை, ஙொ, ஙோ; ஙௌ, ங்.

ச, சா; சி, சீ; சு, சூ; செ, சே; சை, சொ, சோ; சௌ, ச்.

ஞ, ஞா; ஞி, ஞீ; ஞு, ஞூ; ஞெ, ஞே; ஞை, ஞொ, ஞோ; ஞௌ, ஞ்.

ட, டா; டி, டீ; டு, டூ; டெ, டே; டை, டொ, டோ; டௌ, ட்.

ண, ணா; ணி, ணீ; ணு, ணூ; ணெ, ணே; ணை, ணொ, ணோ; ணௌ, ண்.

த, தா; தி, தீ; து, தூ; தெ, தே; தை, தொ, தோ; தௌ, த்.

ந, நா; நி, நீ; நு, நூ; நெ, நே; நை, நொ, நோ; நௌ, ந்.

ப, பா; பி, பீ; பு, பூ; பெ, பே; பை, பொ, போ; பௌ, ப்.

ம, மா; மி, மீ; மு, மூ; மெ, மே; மை, மொ, மோ; மௌ, ம்.

பயிற்சி: மேலேகண்டபடி 143 எழுத்துக்களையும் பார்த்தும், பார்க்காமலும் எழுதச் செய்க. சில எழுத்துக்களைச் சொல்லி (Dictation) எழுதச் செய்க.

பாடம் 4.

அ—வரி முதல் ம—வரி முடியவுள்ள 143 எழுத்துக்களில் சொற்கள்.

இரண்டெழுத்துக் குறில்—நெடில் சொற்கள்.

குறில்		நெடில்	குறில்		நெடில்
அடி	—	ஆடி	பகை	—	பாகை
அணி	—	ஆணி	படு	—	பாடு
அசை	—	ஆசை	படை	—	பாடை
இடு	—	ஈடு	பசி	—	பாசி
உடை	—	ஊடை	பதி	—	பாதி
உண்	—	ஊண்	பதை	—	பாதை
உதி	—	ஊதி	படி	—	பாடி
உமை	—	ஊமை	புசி	—	பூசி
எடு	—	ஏடு	புண்	—	பூண்
எது	—	ஏது	மசி	—	மாசி
ஒடி	—	ஓடி	மடு	—	மாடு
கடை	—	காடை	மண்	—	மாண்
கதை	—	காதை	மது	—	மாது
கண்	—	காண்	மிசை	—	மீசை
குகை	—	கூகை	மிதி	—	மீதி
குடை	—	கூடை	முடை	—	மூடை
குடி	—	கூடி	கெடு	—	கேடு
சடை	—	சாடை	கொடி	—	கோடி
சிதை	—	சீதை	கொடு	—	கோடு
சுடு	—	சூடு	கொடை	—	கோடை
தடி	—	தாடி	செடி	—	சேடி
தடை	—	தாடை	தொகை	—	தோகை
நகை	—	நாகை	தொடி	—	தோடி
நதி	—	நாதி	தொடு	—	தோடு
நடி	—	நாடி	பெண்	—	பேண்
நடு	—	நாடு	பெடை	—	பேடை
நம்	—	நாம்	பொது	—	போது
நிதி	—	நீதி			

குறிப்பு:— சொற்களைக் கற்றுக் கொடுக்கும் விதத்தை அனுபந்தத்தில் பார்க்க. சொற்கள் பொருள் கற்றுக்கொடுப்ப தற்காக ஏற்பட்டவையல்ல. பிழையின்றி எழுத வாசிக்கக் கற்றுக் கொடுப்பதற்காகவே ஏற்பட்டவையாம்.

பாடம் 5.

மூன்றெழுத்துக் குறில்—நெடில் சொற்கள்.

குறில்		நெடில்	குறில்		நெடில்
அகம்	—	ஆகம்	தங்கு	—	தாங்கு
அங்கு	—	ஆங்கு	தடம்	—	தாடம்
அண்டு	—	ஆண்டு	தட்டு	—	தாட்டு
அண்மை	—	ஆண்மை	தண்டு	—	தாண்டு
அப்பு	—	ஆப்பு	திட்டி	—	தீட்டி
இங்கு	—	ஈங்கு	திட்டு	—	தீட்டு
எங்கு	—	ஏங்கு	திண்டு	—	தீண்டு
எச்சு	—	ஏச்சு	துண்டு	—	தூண்டு
ஒட்டு	—	ஓட்டு	தும்பு	—	தூம்பு
ஒட்டை	—	ஓட்டை	தெட்டு	—	தேட்டு
கங்கை	—	காங்கை	தொண்டு	—	தோண்டு
கஞ்சி	—	காஞ்சி	தொட்டி	—	தோட்டி
கட்டு	—	காட்டு	நகம்	—	நாகம்
கணம்	—	காணம்	நட்டு	—	நாட்டு
கதம்	—	காதம்	நிதம்	—	நீதம்
கம்பு	—	காம்பு	நுங்கு	—	நூங்கு
கிச்சு	—	கீச்சு	நொண்டு	—	நோண்டு
கிண்டு	—	கீண்டு	படம்	—	பாடம்
குண்டு	—	கூண்டு	பட்டி	—	பாட்டி
குடம்	—	கூடம்	பட்டு	—	பாட்டு
குட்டி	—	கூட்டி	பதம்	—	பாதம்
குட்டு	—	கூட்டு	பெட்டி	—	பேட்டி
குப்பி	—	கூப்பி	பெட்டை	—	பேட்டை
கெட்டு	—	கேட்டு	பொட்டு	—	போட்டு
கொட்டை	—	கோட்டை	மடம்	—	மாடம்
சட்டை	—	சாட்டை	மதம்	—	மாதம்
சதம்	—	சாதம்	மந்தி	—	மாந்தி
சந்தி	—	சாந்தி	மணம்	—	மாணம்
சந்து	—	சாந்து	மப்பு	—	மாப்பு
சிட்டி	—	சீட்டி	மிதம்	—	மீதம்
சிட்டு	—	சீட்டு	முக்கு	—	மூக்கு
சுட்டு	—	சூட்டு	முட்டை	—	மூட்டை
செட்டை	—	சேட்டை	முட்டு	—	மூட்டு
செம்பு	—	சேம்பு	மொட்டை	—	மோட்டை

பாடம் 6

குறில்-நெடில் எழுத்துக்களை முதலிற்கொண்ட மூன்றெழுத்துச் சொற்கள்.

குறில்		நெடில்	குறில்		நெடில்
அக்கா	—	ஆணம்	செக்கு	—	சேணம்
அங்கு	—	ஆந்தை	செண்டு	—	சேதம்
அம்மா	—	ஆட்சி	சொகுசு	—	சோம்பு
அம்மி	—	ஆண்டி	தகடு	—	தாகம்
இகம்	—	ஈந்து	தங்கை	—	தாடகை
இஞ்சி	—	ஈச்சை	தந்தி	—	தாண்டு
இடம்	—	ஈட்டி	திட்டு	—	தீபம்
உகம்	—	ஊட்டு	துட்டு	—	தூபம்
உப்பு	—	ஊத்தை	தெங்கு	—	தேசம்
எங்கு	—	ஏச்சு	தொட்டி	—	தோப்பு
எட்டு	—	ஏகம்	தொண்டு	—	தோட்டி
ஒஞ்சு	—	ஓடம்	நகம்	—	நாதம்
கங்கை	—	காகம்	நத்தை	—	நாகம்
கடுகு	—	காந்தி	நெட்டி	—	நேசம்
கமுகு	—	காம்பு	நொச்சி	—	நோக்கு
கிடுகு	—	கீச்சு	பஞ்சு	—	பாக்கு
கிண்ணி	—	கீதம்	பந்து	—	பாங்கு
குஞ்சு	—	கூடம்	படகு	—	பாடம்
குண்டு	—	கூத்து	பிசாசு	—	பீடம்
குப்பை	—	கூட்டு	புதுமை	—	பூச்சி
குத்து	—	கூண்டு	புத்தி	—	பூட்டு
கெட்டி	—	கேப்பை	பெட்டி	—	பேச்சு
கொச்சி	—	கோபம்	பொந்து	—	போட்டி
கொண்டி	—	கோந்து	மட்டை	—	மாடம்
கொப்பு	—	கோமதி	மதகு	—	மாதம்
சங்கு	—	சாணம்	முகம்	—	மூக்கு
சட்டி	—	சாதம்	முத்து	—	மூட்டை
சிட்டு	—	சீப்பு	மிகுதி	—	மீதம்
சித்தி	—	சீட்டு	மெத்தை	—	மேகம்
சுக்கு	—	சூடம்	மொச்சை	—	மோகம்
சும்மா	—	சூட்டு	மொட்டு	—	மோசம்

பாடம் 7.

குறில்-நெடில் எழுத்துக்களை முதலிற்கொண்ட நான்கெழுத்துச் சொற்கள்.

குறில்		நெடில்	குறில்		நெடில்
அதட்டு	—	ஆகமம்	செட்டிமை	—	சேதிமம்
அகப்பை	—	ஆகாசம்	செதுக்கு	—	சேகண்டி
அக்கம்	—	ஆபாசம்	தங்கம்	—	தாமதம்
அடுப்பு	—	ஆப்பம்	திட்பம்	—	தீபகம்
அப்பம்	—	ஆட்டம்	துங்கம்	—	தூக்கம்
அதிகம்	—	ஆக்கம்	தெப்பம்	—	தேக்கம்
இடுப்பு	—	ஈட்டம்	தொக்கம்	—	தோட்டம்
இடும்பை	—	ஈடுபாடு	நத்தம்	—	நாடகம்
இணங்கு	—	ஈச்சம்	நிகண்டு	—	நீட்டம்
உடம்பு	—	ஊக்கம்	நெஞ்சம்	—	நேசிப்பு
உசிதம்	—	ஊட்டம்	நெட்டம்	—	நேமகம்
உச்சம்	—	ஊமத்தை	நொடிப்பு	—	நோக்கம்
உத்தமி	—	ஊமைச்சி	படுக்கை	—	பாண்டம்
எண்ணம்	—	ஏகாதசி	பண்டம்	—	பாசாங்கு
எடுப்பு	—	ஏக்கம்	பட்டம்	—	பாதகம்
எச்சம்	—	ஏப்பம்	பந்தம்	—	பாடகம்
எப்படி	—	ஏமாப்பு	பிண்டம்	—	பீடிப்பு
ஒப்பம்	—	ஓட்டம்	புங்கம்	—	பூடணம்
ஒட்டம்	—	ஓதிமம்	பெதும்பை	—	பேதகம்
கடிதம்	—	காகிதம்	பெண்சாதி	—	பேணகம்
கணக்கு	—	காந்தம்	பொகுட்டு	—	போதகம்
கண்ணடி	—	காமாட்சி	பொங்கம்	—	போகிப்பு
கிண்ணம்	—	கீசகம்	மச்சம்	—	மாசுணம்
கும்பம்	—	கூட்டம்	மணங்கு	—	மாமிசம்
குட்டம்	—	கூச்சம்	மிச்சம்	—	மீமாஞ்சை
கொஞ்சம்	—	கோடாங்கி	மிச்சம்	—	மீண்டும்
சட்டம்	—	சாந்தம்	முடிச்சு	—	மூதாட்டி
சத்தம்	—	சாப்பாடு	முடிப்பு	—	மூட்டம்
சிகிச்சை	—	சீமாட்டி	மெதுக்கு	—	மேட்டிமை
சுத்தம்	—	சூடாமணி	மெத்தம்	—	மேடகம்
செப்பம்	—	சேமிப்பு	மொத்தம்	—	மோதகம்

பாடம் 8. 247 எழுத்துக்கள் (5 கோடுகளில்)

அ	ஆ	இ	ஈ	உ	ஊ	எ	ஏ	ஐ	ஒ	ஓ	ஔ	ஃ
க	கா	கி	கீ	கு	கூ	கெ	கே	கை	கொ	கோ	கௌ	க்
ங	ஙா	ஙி	ஙீ	ஙு	ஙூ	ஙெ	ஙே	ஙை	ஙொ	ஙோ	ஙௌ	ங்
ச	சா	சி	சீ	சு	சூ	செ	சே	சை	சொ	சோ	சௌ	ச்
ஞ	ஞா	ஞி	ஞீ	ஞு	ஞூ	ஞெ	ஞே	ஞை	ஞொ	ஞோ	ஞௌ	ஞ்
ட	டா	டி	டீ	டு	டூ	டெ	டே	டை	டொ	டோ	டௌ	ட்
ண	ணா	ணி	ணீ	ணு	ணூ	ணெ	ணே	ணை	ணொ	ணோ	ணௌ	ண்
த	தா	தி	தீ	து	தூ	தெ	தே	தை	தொ	தோ	தௌ	த்
ந	நா	நி	நீ	நு	நூ	நெ	நே	நை	நொ	நோ	நௌ	ந்
ப	பா	பி	பீ	பு	பூ	பெ	பே	பை	பொ	போ	பௌ	ப்
ம	மா	மி	மீ	மு	மூ	மெ	மே	மை	மொ	மோ	மௌ	ம்

ய	யா	யி	யீ	யு	யூ	யெ	யே	யை	யொ	யோ	யௌ	ய்
ர	ரா	ரி	ரீ	ரு	ரூ	ரெ	ரே	ரை	ரொ	ரோ	ரௌ	ர்
ல	லா	லி	லீ	லு	லூ	லெ	லே	லை	லொ	லோ	லௌ	ல்
வ	வா	வி	வீ	வு	வூ	வெ	வே	வை	வொ	வோ	வௌ	வ்
ழ	ழா	ழி	ழீ	ழு	ழூ	ழெ	ழே	ழை	ழொ	ழோ	ழௌ	ழ்
ள	ளா	ளி	ளீ	ளு	ளூ	ளெ	ளே	ளை	ளொ	ளோ	ளௌ	ள்
ற	றா	றி	றீ	று	றூ	றெ	றே	றை	றொ	றோ	றௌ	ற்
ன	னா	னி	னீ	னு	னூ	னெ	னே	னை	னொ	னோ	னௌ	ன்

பாடம் 9. 247 எழுத்துக்கள் (ஒரு கோட்டில்)

அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ. ஒ, ஓ; ஔ. ஃ

க, கா; கி, கீ; கு, கூ; கெ, கே; கை. கொ, கோ; கௌ. க்

ங,ஙா; ஙி, ஙீ; ஙு, ஙூ; ஙெ, ஙே; ஙை. ஙொ, ஙோ; ஙௌ. ங்

ச, சா; சி, சீ; சு, சூ; செ, சே; சை. சொ, சோ; சௌ. ச்

ஞ, ஞா; ஞி, ஞீ; ஞு, ஞூ; ஞெ, ஞே; ஞை. ஞொ, ஞோ; ஞௌ. ஞ்

ட, டா; டி, டீ; டு, டூ; டெ, டே; டை. டொ, டோ; டௌ. ட்

ண, ணா; ணி, ணீ; ணு, ணூ; ணெ, ணே; ணை. ணொ, ணோ; ணௌ. ண்

த, தா; தி, தீ; து, தூ; தெ, தே; தை. தொ, தோ; தௌ. த்

ந, நா; நி, நீ; நு, நூ; நெ, நே; நை. நொ, நோ; நௌ. ந்

ப, பா; பி, பீ; பு, பூ; பெ, பே; பை. பொ, போ; பௌ. ப்

ம, மா; மி, மீ; மு, மூ; மெ, மே; மை. மொ, மோ; மௌ. ம்

ய, யா; யி, யீ; யு, யூ; யெ, யே; யை. யொ, யோ; யௌ. ய்

ர, ரா; ரி, ரீ; ரு, ரூ; ரெ, ரே; ரை. ரொ, ரோ; ரௌ. ர்

ல, லா; லி, லீ; லு, லூ; லெ, லே; லை. லொ, லோ; லௌ. ல்

வ, வா; வி, வீ; வு, வூ; வெ, வே; வை. வொ, வோ; வௌ. வ்

ழ, ழா; ழி, ழீ; ழு, ழூ; ழெ, ழே; ழை. ழொ, ழோ; ழௌ. ழ்

ள, ளா; ளி, ளீ; ளு, ளூ; ளெ, ளே; ளை. ளொ, ளோ; ளௌ. ள்

ற, றா; றி, றீ; று, றூ; றெ, றே; றை. றொ, றோ; றௌ. ற்

ன, னா; னி, னீ; னு, னூ; னெ, னே; னை. னொ, னோ; னௌ. ன்

பயிற்சி:- ய-வரி முதல் ன-வரி முடியவுள்ள எழுத்துக்களைப் பார்த்தும் பார்க்காமலும் எழுதச் செய்க. 247 எழுத்துக்களில் சில எழுத்துக்களைச் சொல்லி (Dictation) எழுதச் செய்க.

பாடம் 10

உச்சரிப்பு விளக்கப் படங்கள்.

ர ரா ரி ரீ ரு ரூ ரெ ரே ரை
ரொ ரோ ரௌ ர்

ன னா னி னீ னு னூ னெ னே
னை னொ னோ னௌ ன்

ல லா லி லீ லு லூ லெ லே
லை லொ லோ லௌ ல்

படம் 1. இதன் முன்னுள்ள எழுத்துக்களை உச்சரிக்கும்போது நாக்கு மேல்வாயின் முன்பாகத்தைத் தொடும்படி அழுத்தாமல் உசசரிக்க வேண்டும்.

ற றா றி றீ று றூ றெ றே றை
றொ றோ றௌ ற்

ண ணா ணி ணீ ணு ணூ ணெ
ணே ணை ணொ ணோ ணௌ ண்

ள ளா ளி ளீ ளு ளூ ளெ ளே
ளை ளொ ளோ ளௌ ள்

படம் 2. இதன் முன்னுள்ள எழுத்துக்களை உச்சரிக்கும்போது நாக்கு மேல்வாயின் நடுப்பாகத்தைத் தொடும்படியாக அழுத்தி உச்சரிக்கவேண்டும்.

ழ ழா ழி ழீ ழு ழூ ழெ ழே
ழை ழொ ழோ ழௌ ழ்

படம் 3. இதன் முன்னுள்ள எழுத்துக்களை உச்சரிக்கும்போது நாக்கு மேல்வாயின் கடைசிப் பாகத்தைத் தொடும்படியாக அதிகமாக அழுத்தி உச்சரிக்க வேண்டும்.

பாடம் 11.

அழுத்தாமலும், அழுத்தியும், அதிகமாய் அழுத்தியும் உச்சரிக்க வேண்டிய எழுத்துக்கள்.

ர-வரி ற-வரி எழுத்துக்களை ர-ற என்று இரட்டையாகவும், ன-வரி ண-வரி எழுத்துக்களை ன-ண என்று இரட்டையாகவும், ல-வரி ள-வரி எழுத்துக்களை ல-ள என்று இரட்டையாகவும், ழ-வரி எழுத்துக்களைத் தனியாகவும் சொல்லி ஒலி வேறுபாடுகளைத் தெரிந்து கொள்ளும்படி செய்க.

ர — ற	ன — ண	ல — ள	ழ
ரா — றா	னா — ணா	லா — ளா	ழா
ரி — றி	னி — ணி	லி — ளி	ழி
ரீ — றீ	னீ — ணீ	லீ — ளீ	ழீ
ரு — று	னு — ணு	லு — ளு	ழு
ரூ — றூ	னூ — ணூ	லூ — ளூ	ழூ
ரெ — றெ	னெ — ணெ	லெ — ளெ	ழெ
ரே — றே	னே — ணே	லே — ளே	ழே
ரை — றை	னை — ணை	லை — ளை	ழை
ரொ — றொ	னொ — ணொ	லொ — ளொ	ழொ
ரோ — றோ	னோ — ணோ	லோ — ளோ	ழோ
ரௌ — றௌ	னௌ — ணௌ	லௌ — ளௌ	ழௌ
ர் — ற்	ன் — ண்	ல் — ள்	ழ்

எழுத்துக்களில் பயிற்சி.

1. கீழே கண்ட எழுத்துக்களில் குறில், நெடில் எழுத்துக்களை அதாவது நீட்டாமல் சொல்ல வேண்டிய எழுத்துக்களையும் நீட்டிச் சொல்ல வேண்டிய எழுத்துக்களையும் தனித்தனியே சொல்லுக; எடுத்து எழுதுக:—

ணா, கீ, ச, தூ, எ, பெ, ணோ, உ, ணெ, போ, ளூ, ழா, தொ.

2. கீழே கண்ட எழுத்துக்களில் அழுத்தாமல் சொல்ல வேண்டிய எழுத்துக்களையும், அழுத்திச் சொல்ல வேண்டிய எழுத்துக்களையும், அதிகமாக அழுத்திச் சொல்ல வேண்டிய எழுத்துக்களையும் தனித்தனியே சொல்லுக; எடுத்து எழுதுக:—

ரா, னை, லு, ழை, ரோ, ணோ, லி, ழு, ழ, ள. ணி, றா, ணை, ளூ, றோ, ணோ, ளி, லை, னு, ல.

3 சொல்வதெழுதுக:—

ணா, ணொ, ணோ; றா, றொ, றோ; னா, னொ, னோ; ணை, லை, ளை, னை.

பாடம் 12.

ன-வரி, ண-வரி எழுத்துக்கள் கொண்ட சொற்கள்.

இந்தப் பாடத்தில் கண்ட சொற்களை **அகன் — அகண்** என்று முறையே அழுத்தாமலும், அழுத்தியும்; இரட்டை இரட்டையாகச் சொல்லும்படியும், எழுத்துக் கூட்டிச் சொல்லும்படியும் செய்க.

அகன் — அகண்	குனி — குணி
அவன் — அவண்	கோன் — கோண்
அனு — அணு	சானம் — சாணம்
அனை — அணை	சுனை — சுணை
அன்மை — அண்மை	சுன்னம் — சுண்ணம்
அன்னம் — அண்ணம்	தனி — தணி
ஆனி — ஆணி	தன் — தண்
ஆன் — ஆண்	தன்மை — தண்மை
இவன் — இவண்	தன்னீர் — தண்ணீர்
இனை — இணை	தானி — தாணி
உன் — உண்	துனை — துணை
ஊன் — ஊண்	நான் — நாண்
எவன் — எவண்	பனி — பணி
என் — எண்	பனை — பணை
என்னை — எண்ணை	பன்னுதல் — பண்ணுதல்
என்னுல் — எண்ணுல்	பானம் — பாணம்
ஏனை — ஏணை	புனை — புணை
ஏன் — ஏண்	பேன் — பேண்
கனி — கணி	மனம் — மணம்
கனம் — கணம்	மன் — மண்
கன்னி — கண்ணி	மனை — மணை
கன்னன் — கண்ணன்	மன்னல் — மண்ணல்
கனை — கணை	மானம் — மாணம்
கானம் — காணம்	மான் — மாண்
கானல் — காணல்	வன்மை — வண்மை
கான் — காண்	வானம் — வாணம்

பாடம் 13.

ர-வரி, ற-வரி எழுத்துக்கள் கொண்ட சொற்கள்.

இந்தப் பாடத்தில் கண்ட சொற்களை **அரம்—அறம்** என்று முறையே அழுத்தாமலும், அழுத்தியும்; இரட்டை இரட்டையாகச் சொல்லும்படியும், எழுத்துக் கூட்டிச் சொல்லும்படியும் செய்க.

அரம் — அறம்	குரும்பி — குறும்பி
அரி — அறி	குரை — குறை
அருகு — அறுகு	கூரல் — கூறல்
அருந்து — அறுந்து	கூரிய — கூறிய
அரை — அறை	கூரை — கூறை
இர — இற	சீரிய — சீறிய
இரங்கு — இறங்கு	சொரி — சொறி
இரத்தல் — இறத்தல்	தரி — தறி
இரு — இறு	தாரு — தாறு
இரை — இறை	துரை — துறை
உரல் — உறல்	துரவு — துறவு
உரி — உறி	தெரி — தெறி
உரு — உறு	நரை — நறை
உரை — உறை	நிரை — நிறை
ஊரு — ஊறு	நெரி — நெறி
எரி — எறி	பரந்த — பறந்த
எரிய — எறிய	பரை — பறை
ஏரி — ஏறி	பரவை — பறவை
ஒரு — ஒறு	பாரை — பாறை
கர — கற	புரம் — புறம்
கரி — கறி	பொரி — பொறி
கருத்து — கறுத்து	மரம் — மறம்
கரை — கறை	மரை — மறை
குரங்கு — குறங்கு	மரி — மறி
குரவர் — குறவர்	மாரி — மாறி
குருகு — குறுகு	முரி — முறி

பாடம் 14.

ல-வரி, ள-வரி எழுத்துக்கள் கொண்ட சொற்கள் இரட்டை இரட்டையாகவும்; ழ-வரி எழுத்துக்கள் கொண்ட சொற்கள் தனியாகவும்.

இந்தப் பாடத்தில் கண்ட சொற்களை **அலகு, அளகு** என்று முறையே அழுத்தாமலும், அழுத்தியும், இரட்டை இரட்டையாகச் சொல்லும்படியும், **அழகு** முதலிய சொற்களை அதிகமாக அழுத்தித் தனியாகச் சொல்லுமபடியும், எழுத்துக்கூட்டிச் சொல்லும்படியும் செய்க.

அலகு	—	அளகு	அழகு
அலி	—	அளி	அழி
அலை	—	அளை	அழை
அல	—	அள	அழ
ஆல்	—	ஆள்	ஆழ்
இலை	—	இளை	இழை
உலை	—	உளை	உழை
ஒலி	—	ஒளி	ஒழி
கலி	—	களி	கழி
கலை	—	களை	கழை
காலி	—	காளி	காழி
காலை	—	காளை	காழை
கிலி	—	கிளி	கிழி
குலவி	—	குளவி	குழவி
கோலி	—	கோளி	கோழி
கோலை	—	கோளை	கோழை
தலை	—	தளை	தழை
தால்	—	தாள்	தாழ்
தாலி	—	தாளி	தாழி
நாலி	—	நாளி	நாழி
மூலை	—	மூளை	மூழை
வலி	—	வளி	வழி
வாலி	—	வாளி	வாழி
வாலை	—	வாளை	வாழை
வால்	—	வாள்	வாழ்
விலை	—	விளை	விழை

பாடம் 15.

சொற்களுக்கு முதலில்வரும் எழுத்துக்களைக் கொண்ட மூன்றெழுத்துச் சொற்கள்.

அஃது	சொட்டு	பூட்டு
ஆடல்	சோளம்	பெயர்
இதழ்	சௌளம்	பேரன்
ஈசன்	ஞமலி	பையன்
உரல்	ஞாலம்	பொம்மை
ஊற்று	தகடு	போர்வை
எழில்	தாமரை	பௌரணை
ஏலம்	திண்டு	மனம்
ஐயம்	தீபம்	மாயம்
ஒன்று	துண்டு	மிளகு
ஓடம்	தூரம்	மீதம்
ஔகான்	தென்னை	முயல்
கதவு	தேவன்	மூடன்
காற்று	தைலம்	மெழுகு
கிழவி	தொட்டி	மேளம்
கீற்று	தோப்பு	மையல்
குடம்	தௌவல்	மொட்டு
கூடை	நகம்	மோசம்
கெண்டை	நாக்கு	மௌனம்
கேள்வி	நிறம்	யச்சு
கைகேசி	நீராவி	யாகம்
கொக்கு	நுதல்	யுகம்
கோயில்	நூற்பு	யூதர்
கௌசலை	நெற்றி	யோகம்
ஙனம்	நேரம்	யௌதம்
சங்கு	நைதல்	வண்டி
சாவடி	நொய்வு	வாசல்
சிவன்	நோன்பு	விறகு
சீதேவி	நௌவம்	வீரம்
சுக்கு	பழம்	வெட்டு
சூரன்	பாவாடை	வேழம்
செம்பு	பிள்ளை	வைரம்
சேவல்	பீமன்	வையம்
சைனர்	புதர்	வௌவால்

பாடம் 16.

சொற்களுக்கு முதலில்வரும் எழுத்துக்களைக்கொண்ட நான்கெழுத்துச் சொற்கள்.

அரசன்	சொக்கன்	பூட்டன்
ஆலயம்	சோதிடம்	பெருமாள்
இனிப்பு	சௌமியம்	பேச்சாளி
ஈருள்ளி	ஞரல்வு	பைரவன்
உயர்வு	ஞாபகம்	பொங்கல்
ஊக்கம்	தகரம்	போதகர்
எறும்பு	தாவரம்	பௌத்தன்
ஏற்றம்	திங்கள்	மனிதன்
ஐப்பசி	தீபாவளி	மாணவன்
ஒன்பது	துரும்பு	மிளகாய்
ஓதுவான்	தூக்கம்	மீனாட்சி
ஔடதம்	தெய்வம்	முனிவர்
கட்டில்	தேங்காய்	மூர்த்தி
காற்றாடி	தைரியம்	மெய்யன்
கிழவன்	தொட்டில்	மேம்பாடு
கீசகன்	தோற்றம்	மைந்தன்
குமரன்	தௌமியன்	மொழிதல்
கூட்டம்	நகரம்	மோப்பம்
கெடுதல்	நாரணன்	மௌனியர்
கேடயம்	நித்திரை	யமகம்
கைதவம்	நீந்தல்	யாத்திரை
கொல்லன்	நுட்பம்	யுத்தம்
கோவலன்	நூதனம்	யூதபம்
கௌசிகன்	நெருப்பு	யோகவான்
ஙகரம்	நேபாளம்	யௌவனம்
சங்கிலி	நைடதம்	வணிகன்
சான்றோர்	நொடிப்பு	வாலிபன்
சிங்கம்	நோட்டம்	வியாழன்
சீரகம்	நௌமியம்	வீசனம்
சுண்டெலி	பந்தல்	வெகுமதி
சூரியன்	பாரதம்	வேளாண்மை
செல்வம்	பிரம்பு	வையகம்
சேடியர்	பீதகம்	வைரியம்
சைனியம்	புத்தர்	வௌவுதல்

பாடம் 17.

ட், ற் என்ற மெய்யெழுத்துக்களுக்குப் பின் எந்த மெய்யெழுத்தும் வரக்கூடாது; வந்தால் பிழையாகும்.

கீழே கண்ட திருத்தமான உதாரணச் சொற்களை எழுத்துக்கூட்டிப் பல தடவைகள் வாசிக்க.

1. ட் என்னும் எழுத்தைக் கொண்ட சொற்கள்:—

அட்சரம்	நீட்சி	வறட்சி
ஆட்சி	நுட்பம்	வெட்கம்
ஆட்கள்	காட்சி	வேட்கை
ஆட்சேபம்	சாட்சி	தெட்பம்
இரட்சி	பட்சம்	நட்பு
கட்சி	பட்சி	புட்கை
கேட்க	புட்பம்	மாட்சி
சூட்சமம்	மீட்சி	கட்கம்
தட்பம்	மீட்பு	வெட்கல்
நட்சத்திரம்	முட்கள்	மோட்சம்

2. ற் என்னும் எழுத்தைக் கொண்ட சொற்கள்:—

அற்பம்	சிற்பம்	பயிற்சி
அற்புதம்	கற்கை	நோற்பு
ஆற்காடு	நிற்க	விற்பனை
இயற்கை	உற்பவம்	வேற்கை
உற்சாகம்	உற்பத்தி	உற்பலம்
உற்சவம்	ஏற்பு	பற்பம்
ஏற்பாடு	கற்பகம்	புற்கை
கற்பு	சிற்பி	பொற்பு
சொற்பம்	செயற்கை	கற்கம்
கொற்கை	இயற்கை	தோற்பு

பாடம் 18.

ந-வரி எழுத்துக்களையும் ன-வரி எழுத்துக்களையும் கொண்ட சொற்கள்.

1. ந—வரி எழுத்துக்களைக் கொண்ட சொற்கள்:-

அநாதன்	அநாதி	அநாயகம்
அநித்தியம்	அநியாயம்	அநிருதம்
அநீதி	அநீதம்	விநீதம்
விநாசம்	விநாடி	விநாயகம்
வெந்நீர்	செந்நீர்	முந்நீர்

2. ன—வரி எழுத்துக்களைக் கொண்ட சொற்கள்:-

அனங்கன்	அனந்தன்	அனத்தம்
அனல்	அனவரதம்	அனந்தம்
அனுகூலம்	அனுக்கிரகம்	அனுசரி
அனுட்டானம்	அனுதாபம்	அனுபந்தம்
அனுபல்லவி	அனுபவம்	அனுபவி
நன்னீர்	தொன்னீர்	பன்னீர்

3. ந—வரி எழுத்துக்களும் அதன் இனமாகிய த—வரி எழுத்துக்களுங் கொண்ட சொற்கள்:-

அந்தி	சந்தி	தந்தி
இந்து	சந்து	பொந்து
ஈந்து	ஏந்து	சீந்து
எந்தன்	உந்தன்	கந்தன்
கந்தம்	தந்தம்	மந்தம்
சந்தனம்	பந்தனம்	வந்தனம்

4. ன—வரி எழுத்துக்களும் அதன் இனமாகிய ற—வரி எழுத்துக்களுங் கொண்ட சொற்கள்:-

அன்று	இன்று	என்று
கான்று	சான்று	ஊன்று
வென்றி	நன்றி	பன்றி
தென்றல்	மன்றல்	கன்றல்
அன்றில்	முன்றில்	குன்றல்
தோன்றல்	ஈன்றல்	ஊன்றல்

பாடம் 19.

தமிழில் வழங்கும் 65 வடமொழி எழுத்துக்கள்.

ஜ	ஜா	ஜி	ஜீ	ஜு	ஜூ	ஜெ	ஜே	ஜை	ஜொ	ஜோ	ஜௌ	ஜ்
ஸ	ஸா	ஸி	ஸீ	ஸு	ஸூ	ஸெ	ஸே	ஸை	ஸொ	ஸோ	ஸௌ	ஸ்
ஷ	ஷா	ஷி	ஷீ	ஷு	ஷூ	ஷெ	ஷே	ஷை	ஷொ	ஷோ	ஷௌ	ஷ்
ஹ	ஹா	ஹி	ஹீ	ஹு	ஹூ	ஹெ	ஹே	ஹை	ஹொ	ஹோ	ஹௌ	ஹ்
க்ஷ	க்ஷா	க்ஷி	க்ஷீ	க்ஷு	க்ஷூ	க்ஷெ	க்ஷே	க்ஷை	க்ஷொ	க்ஷோ	க்ஷௌ	க்ஷ்

பாடம் 20.

வடமொழி எழுத்துக்கள் கொண்ட பிறமொழிச் சொற்கள்.

ஜாதி	இன்ஜின்	காலேஜ்	ஜாமீன்	நமஸ்காரம்
ஹரிஜனம்	ஜூலை	ஆஜர்	ஜாஸ்தி	ஸ்பெஷல்
ஜமாபந்தி	ஜவஹர்லால்	ஜமீந்தார்	ஸபாஷ்!	காங்கிரஸ்
ஜட்கா	நூர்ஜஹான்	ஜனவரி	ஜரிகை	ஸைக்கிள்
ஜலம்	ஜெபம்	ஜங்ஷன்	ஜூன்	போலீஸ்
ஜம்பம்	ஜைனர்	ஜவுளி	ஜெர்மனி	ஸீட்ஹவுஸ்
ஜாக்கிரதை	ராஜ்யம்	ஜமேதார்	சிவாஜி	ஸுபேதார்
ஜில்லா	ராஜிஞமா	ஜெயில்	ரோஜா	ஆகஸ்டு
க்ஷணம்	க்ஷீணம்	பரீக்ஷை	க்ஷேத்திரம்	க்ஷௌரம்

பாடம் 21.

பிழையாகவோ, கொச்சையாகவோ உச்சரிப்பதால் பிழையாக எழுதப்படும் சொற்களும் அவற்றின் திருத்தங்களும்.

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
அரமனை	அரண்மனை	ஒடம்பு	உடம்பு
ஆலையம்	ஆலயம்	ஒணவு	உணவு
கலையம்	கலயம்	ஒரம்	உரம்
நிலயம்	நிலையம்	ஒறை	உறை
வளயம்	வளையம்	ஒதவி	உதவி
உடப்பு	உடைப்பு	ஒழக்கு	உழக்கு
இடவேளை	இடைவேளை	ஒறக்கம்	உறக்கம்
நடவாசல்	நடைவாசல்	ஒறவு	உறவு
மனவி	மனைவி	ஒறப்பு (காரம்)	உறைப்பு
பனமரம்	பனைமரம்	ஒழவு	உழவு
சமயல்	சமையல்	ஒளவு	உளவு
ஆக்ஷி	ஆட்சி	புட்டு	பிட்டு
காக்ஷி	காட்சி	பேய்கிறது (மழை)	பெய்கிறது
மாக்ஷி	மாட்சி	மொழுகு	மெழுகு
எடையர்	இடையர்	ஓச்சல்	ஓய்ச்சல்
எடக்கு	இடக்கு	காச்சல்	காய்ச்சல்
எடறுகட்டை	இடறுகட்டை	மேச்சல்	மேய்ச்சல்
எனம்	இனம்	பாச்சல்	பாய்ச்சல்
எளயவன்	இளையவன்	ஏக்கிறாய்	ஏய்க்கிறாய்
எரக்கம்	இரக்கம்	காத்தாடி	காற்றாடி
எரை	இரை	பத்து வரவு	பற்று வரவு
எலை	இலை	புத்து	புற்று
எழவு	இழவு	நேத்து	நேற்று
எளமை	இளமை	வெத்திலை	வெற்றிலை
எளநீ	இளநீர்	நாத்தம்	நாற்றம்
ஒலக்கை	உலக்கை	ஏத்தம்	ஏற்றம்
ஒரல்	உரல்	மாத்து	மாற்று
ஒடப்பு	உடைப்பு	ஊத்து	ஊற்று
ஒலகம்	உலகம்	கோர்த்து	கோத்து
ஒலை	உலை	கார்த்து	காத்து

பிழை	திருத்தம்	பிழை	திருத்தம்
நேத்தி	நேர்த்தி	தாவாரம்	தாழ்வாரம்
பேத்தி	பேர்த்தி	நெலம்	நிலம்
கம்மாய்	கண்வாய்	நெழல்	நிழல்
முழுங்கு	விழுங்கு	பகளம்	பவளம்
கூரமேய	கூரைவேய	பெஞ்சாதி	பெண்சாதி
மம்பட்டி	மண்வெட்டி	பெறுசுசிருசு	பெரிதுசிறிது
கண்ணுமுழி	கண்விழி	பொட்டக்கன்னுக்குட்டி	பொட்டைக்கன்றுக்குட்டி
எம்பது	எண்பது	சுளிவு	சுளுவு
ஒம்பது	ஒன்பது	நாநூறு	நானூறு
நஞ்சை	நன்செய்	முன்னூறு	முந்நூறு
புஞ்சை	புன்செய்	ஐஞ்னூறு	ஐந்நூறு
ரொம்ப	நிரம்ப	தொண்டுதொட்டு	தொன்றுதொட்டு
துகை	தொகை	தீத்தம்	தீர்த்தம்
சிலதை	சிலவற்றை	மீங்கொத்தி	மீன்கொத்தி
வரவுசிலவு	வரவுசெலவு	முந்தானி	முன்றானை
சுவற்றை	சுவரை	மூங்கி	மூங்கில்
தீவாளி	தீபாவளி	மேலடு	மேலீடு
கடேசி	கடைசி	வெக்கம்	வெட்கம்
அறனூறு	அறுநூறு	வெங்கலம்	வெண்கலம்
எழனூறு	எழுநூறு	வரச்சி	வறட்சி
தொன்னூறு	தொண்ணூறு	வாமடை	வாய்மடை
எகச்சி	இகழ்ச்சி	விட்டி	விட்டில்
கோமியம்	கோமயம்	விடியக்காலம்	விடியற்காலம்
கோமணம்	கோவணம்	ஒண்டியாய்	ஒன்றியாய்
சம்மானம்	சன்மானம்	ஒத்தையா ரெட்டையா	ஒற்றையா இரட்டையா
சித்தப்பன்	சிற்றப்பன்	சேத்துப்பார்	சேர்த்துப்பார்
செகப்பு	சிவப்பு	பாத்துக்கோ	பார்த்துக்கொள்
அகலநிகளம்	அகலநீளம்	தீந்தது	தீர்ந்தது
இங்கனம்	இங்ஙனம்	அர்ப்பம்	அற்பம்
எங்கனம்	எங்ஙனம்	சொப்பம்	சொற்பம்
ஊரணி	ஊருணி		
ஏற்கைசேர்க்கை	இயற்கை செயற்கை		
ஏற்கனவே	ஏற்கெனவே		
ஒன்னுக்கு	ஒன்றுக்கு		

பாடம் 22.

சொற்களுக்கு முதலில் அதிகமாக வரக்கூடிய குறில் — நெடில் எழுத்துக்கள்.

(மனப்பாடம் செய்துகொள்க.)

அ,	ஆ;	இ,	ஈ;	உ,	ஊ;	எ,	ஏ;	ஒ,	ஓ.
க,	கா;	கி,	கீ;	கு,	கூ;	கெ,	கே;	கொ,	கோ.
ச,	சா;	சி,	சீ;	சு,	சூ;	செ,	சே;	சொ,	சோ.
த,	தா;	தி,	தீ;	து,	தூ;	தெ,	தே;	தொ,	தோ.
ந,	நா;	நி,	நீ;	நு,	நூ;	நெ,	நே;	நொ,	நோ,
ப,	பா;	பி,	பீ;	பு,	பூ;	பெ,	பே;	பொ,	போ.
ம,	மா;	மி,	மீ;	மு,	மூ;	மெ,	மே;	மொ,	மோ.
வ,	வா;	வி,	வீ;	...	...	வெ,	வே;	...	...

சொற்களில் பயிற்சி.

22ஆம் பாடத்திலுள்ள குறில்—நெடில் எழுத்துக்களை அ, ஆ; இ, ஈ; என்று இரட்டை இரட்டையாகச் சொல்லும்படி செய்க. முதல் வரிசை முடிந்ததும், இரண்டாவது வரிசையை க, கா; கி, கீ; என்று இரட்டை இரட்டையாகச் சொல்லும்படி செய்க. இப்படி ஒவ்வொரு வரியாக குறில் — நெடில் எழுத்துக்களை இரட்டை இரட்டையாகச் சொல்லும்படி செய்க. பார்த்து எழுதும்படி செய்க; பாராமல் எழுதும்படி செய்க.

பிறகு மாணவர்களை தாங்களாகவே சொந்தத்தில் சொற்களைச் சொல்லும்படி செய்க. **அ**-வில் ஆரம்பிக்கிற ஒரு சொல் சொன்னவுடன் **ஆ**-வில் ஆரம்பிக்கிற ஒரு சொல் சொல்லவேண்டும். உதாரணமாக, **அணில்** என்று சொன்ன பிறகு **ஆயாள்** என்று சொல்வதைப்போலாம். இவைகளை எழுத்துக்கூட்டிச் சொல்லும்படியும் செய்க.

பிறகு மாணவர்களைப்பார்த்து கீழ்க்கண்டவாறு கேள்விகள் கேட்டுஅவைகளுக்குத்தக்கவிடைகள் அளிக்கச்செய்யவேண்டும்:—

1. **அணில்** என்று சொல்லும்போது அ-வை நீட்டிச் சொல்கிறாயா, நீட்டாமல் சொல்கிறாயா?

2. **ஆயாள்** என்பதில் **ஆ**-வை நீட்டிச் சொல்கிறாயா, நீட்டாமல் சொல்கிறாயா?

3. **அணில்** என்பதில் கடைசி எழுத்தாகிய **ல்**-ஐ அழுத்திச்சொல்கிறாயா, அழுத்தாமல் சொல்கிறாயா?

4. **ஆயாள்** என்பதில் கடைசி எழுத்தாகிய **ள்**-ஐ அழுத்திச்சொல்கிறாயா, அழுத்தாமல் சொல்கிறாயா?

5. பழம் என்பது போன்ற சொற்களில் ழ வரி எழுத்துக்களை எப்படி உச்சரிக்கிறாய்? என்று கேள்விகள் கேட்கும்போது மாணவர்கள் சரியான பதில் கூறிவிட்டால் அவர்கள் குறில் — நெடில் வேறுபாடுகளை நன்கு உணர்ந்துகொண்டார்கள் என்பதும், 10ஆம் பாடத்தில் கண்ட ஒலி வேறுபாடுகளையும் விளங்கிக்கொண்டார்கள் என்பதும், இவைகளில் பிழை எதுவுமே விடமாட்டார்கள் என்பதும் நிச்சயமாகும்.

22ஆம் பாடத்தில் கண்ட 76 எழுத்துக்களில் ஒவ்வொன்றும் சொற்களில் முதல் எழுத்தாக வரவேண்டும். ஏதாவது ஒரு புத்தகம் அல்லது பத்திரிகையைக்கொடுத்து அதில் 76 சொற்களைப் பொறுக்கியெடுத்து பிழையின்றிப் பார்த்து எழுதச்செய்க; 76 சொற்களைச் சொந்தத்தில் சொல்லும்படி செய்க; எழுத்துக் கூட்டிச்சொல்லும்படி செய்க; பிழையின்றி எழுதிக் காட்டும்படி செய்க.

21ஆம் பாடம் முடியவுள்ள பாடங்களிலுள்ள சொற்களை புத்தகத்தைப் பார்த்து எழுத்துக் கூட்டி வாசித்தால் மட்டும் போதும். அவைகளை விரைவில் அடிக்கடி எழுத்துக் கூட்டி வாசித்து முடிக்கச் செய்துவிட்டு 22ஆம் பாடத்தில் கண்ட 76 எழுத்துக்களில் ஒவ்வொன்றையும் முதலெழுத்தாக வைத்துத் தினமும்76சொற்களைச் சொந்தத்தில் ஒரு பிழைகூட இல்லாமல் எழுதச்செய்க.

சொற்றொடர்கள்.

பாடம் 23.

இயல்புச் சொற்றொடர்.

இரண்டு சொற்கள் சேர்ந்து சொற்றொடராகும்போது எவ்வித விகாரமும் அடையாமல் இயல்பாகவே யிருந்தால் அதற்கு இயல்புச் சொற்றொடர் என்று பெயர்.

உதாரணம்:

நல்ல	+	காரியம்	=	நல்ல காரியம்
அழகிய	+	சட்டை	=	அழகியசட்டை
இலை	+	தழை	=	இலைதழை
பெரிய	+	பையன்	=	பெரியபையன்
எழுதிய	+	கடிதம்	=	எழுதிய கடிதம்
கணக்கு	+	வேலை	=	கணக்குவேலை
உன்	+	பொருள்	=	உன்பொருள்
மண்	+	வேலை	=	மண்வேலை

பயிற்சி.

1. பின்வரும் சொற்களைச் சேர்த்துச் சொற்றொடர்களாக்குக:—

வந்த	+	காரியம்	படித்த	+	பையன்
பெரிய	+	சட்டி	ஓடு	+	தண்ணீர்
ஆறு	+	முகம்	தின்	+	பண்டம்
உன்	+	கை	உண்	+	பொருள்
கண்	+	காட்சி	என்	+	சோறு
அடி	+	பிடி	செடி	+	கொடி

2. பின் வருபவைகளை இரு சொற்களாகப் பிரித்தெழுதுக:—

ஆடுமாடு	வீடுவாசல்
வெந்தசோறு	குளிர்ந்தகாற்று
பறந்தகிளி	மண்வீடு
உனதுதாய்	மாகாளி
மலைநாடு	விரித்ததலை
எலிவளை	உடுத்ததுணி

விகாரச் சொற்றொடர்கள்.

பாடம் 24.

தோன்றல் சொற்றொடர்.

இரு சொற்கள் சேர்ந்து சொற்றொடராகும்போது அவற்றிற்கு இடையில் ஏதேனும் ஒரு மெய்யெழுத்துத் தோன்றும். அதற்குத் தோன்றல் சொற்றொடர் என்று பெயர். அந்த மெய்யெழுத்து க், ச், த், ப் என்னும் எழுத்துக்களில் ஏதேனும் ஒன்றாக இருக்கும். அன்றியும் ங், ஞ், ந், ம் என்னும் எழுத்துக்களில் ஏதேனும் ஒன்று அபூர்வமாய்த் தோன்றும். இந்த எட்டு மெய்யெழுத்துக்களையும் உதாரணங்களுடன் மனப்பாடம் செய்துகொள்க.

உதாரணம்:

பச்சை	+	கிளி	=	பச்சைக்கிளி
தமிழ்	+	சொல்	=	தமிழ்ச்சொல்
வாழை	+	தண்டு	=	வாழைத்தண்டு
தை	+	பொங்கல்	=	தைப்பொங்கல்
இ	+	ஙனம்	=	இங்ஙனம்
மெய்	+	ஞானம்	=	மெய்ஞ்ஞானம்
செய்	+	நன்றி	=	செய்ந்நன்றி
இ	+	மாடு	=	இம்மாடு
அ	+	மனிதன்	=	அம்மனிதன்
இ	+	பசு	=	இப்பசு
எ	+	காரியம்	=	எக்காரியம்

பயிற்சி

1. பின்வரும் சொற்களைச் சேர்த்துச்சொற்றொடர்களாக்குக:—

வாழை	+ காய்		கத்திரி	+	பூ
மா	+ கனி		தமிழ்	+	தென்றல்
தேர்	+ தட்டு		எ	+	மனிதன்
இ	+ நாய்		அ	+	ஙனம்

2. பின் வருபவைகளை இரு சொற்களாகப் பிரித்தெழுதுக:—

எக்காலம்	நார்க்கட்டில்
தமிழ்க்கவி	மெய்ப்பொருள்
எவ்வீடு	எந்நாடு
எக்காரியம்	இப்பரல்

பாடம் 25.

கெடுதல் சொற்றொடர்.

இரு சொற்கள் சேர்ந்து சொற்றொடராகும்போது அவற்றிற்கு இடையிலுள்ள மெய்யெழுத்து மறையும், அதாவது கெடும். அதற்குக் கெடுதல் சொற்றொடர் என்று பெயர். அந்த மெய்யெழுத்து, ம், ன், ர் என்னும் எழுத்துக்களில் ஏதேனும் ஒன்றாக இருக்கும். இந்த எழுத்துக்களை மனப்பாடம் செய்துகொள்க. முதற்சொல்லின் இறுதி எழுத்து மறையப் பெறுவதற்கு மட்டுமே இங்கு உதாரணமும், பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளன.

உதாரணம்:

மரம்	+	வேர்	=	மரவேர்
குணம்	+	சீலன்	=	குணசீலன்
நளன்	+	வெண்பா	=	நளவெண்பா
மதம்	+	மாற்றம்	=	மதமாற்றம்
தங்கம்	+	மோதிரம்	=	தங்கமோதிரம்
வீமன்	+	பாகம்	=	வீமபாகம்
வள்ளுவர்	+	மாலை	=	வள்ளுவமாலை
ஞானம்	+	நூல்	=	ஞானநூல்

பயிற்சி.

1. பின்வரும் சொற்களைச் சேர்த்துச் சொற்றொடர்களாக்குக:—

ஞானம்	+	சூரியன்	சிவன்	+	புராணம்
நளன்	+	பாகம்	கந்தன்	+	புராணம்
வானம்	+	நூல்	சைவம்	+	நெறி
பாவம்	+	புண்ணியம்	மதம்	+	வைராக்கியம்
மணம்	+	மகன்	மனம்	+	வேதனை
நிலம்	+	வளம்	வானம்	+	வில்
மரம்	+	வேர்	நீலம்	+	மேகம்

2. பின் வருபவைகளை இரு சொற்களாகப் பிரித்தெழுதுக:—

மணவினை	மணமகன்
முகவாட்டம்	கணநாதன்
வாரவெளியீடு	ஞானபோதம்
குறவஞ்சி	கந்தவேள்
சிவபிரான்	கருமகாண்டம்
குணதோசம்	வனசுந்தரி
வனவிலங்கு	தங்கநாணயம்

பாடம் 26.

திரிதல் சொற்றொடர்.

இரு சொற்கள் சேர்ந்து சொற்றொடராகும்போது அவற்றிற்கு இடையிலுள்ள மெய்யெழுத்து வேறொரு மெய்யெழுத்தாகத் திரியும் அதாவது மாறும். அதற்குத்திரிதல் சொற்றொடர் என்று பெயர். இங்கு முதற் சொல்லின் கடைசி எழுத்துத் திரிவதற்கு மாத்திரமே உதாரணமும் பயிற்சியும் கொடுக்கப்பட்டுள்ளன.

எவ்வாறெனில், **ல் — ற்** ஆகவும், **ன்** ஆகவும்; **ள் — ட்** ஆகவும், **ண்** ஆகவும்; **ன் — ற்** ஆகவும், **ண் — ட்** ஆகவும் மாறும். **ம்** என்னும் மெய்யெழுத்து வருஞ் சொல்லுக்கு எற்றாற்போல, **ங், ஞ், ந்** என்னும் எழுத்துக்களில் ஏதேனும் ஒன்றாக மாறும். இவைகளை மனப்பாடம் செய்துகொள்க.

உதாரணம்:

பல்	+	பொடி	=	பற்பொடி
முள்	+	செடி	=	முட்செடி
கல்	+	மாரி	=	கன்மாரி
நாள்	+	மலர்	=	நாண்மலர்
பொன்	+	கொடி	=	பொற்கொடி
கண்	+	செவி	=	கட்செவி
மனம்	+	குளிர	=	மனங்குளிர
நிலம்	+	சார்ந்த	=	நிலஞ்சார்ந்த
அகம்	+	தெளிய	=	அகந்தெளிய
நம்	+	நூல்	=	நந்நூல்

பயிற்சி.

1. பின்வரும் சொற்களைச் சேர்த்துச் சொற்றொடர்களாக்குக:—

நெல்	+	களம்	கள்	+	குடம்
சொல்	+	மாலை	முள்	+	புதர்
பொன்	+	பிரம்பு	கண்	+	களிறு
தோல்	+	கருவி	தோள்	+	பட்டை

2. பின் வருபவைகளை இரு சொற்களாகப் பிரித்தெழுதுக:—

நற்கருணை	நாட்குறிப்பு
மட்குடம்	ஆட்பெருக்கம்
கற்பாறை	பொற்குடம்
மட்பானை	வாட்பட்டை

பாடம் 27.

மெய்யும் உயிருங்கூடிய உயிர்மெய்யெழுத்துக்கள்.

(மனப்பாடம் செய்துகொள்க)

க் + அ = க	ங் + அ = ங	ச் + அ = ச
க் + ஆ = கா	ங் + ஆ = ஙா	ச் + ஆ = சா
க் + இ = கி	ங் + இ = ஙி	ச் + இ = சி
க் + ஈ = கீ	ங் + ஈ = ஙீ	ச் + ஈ = சீ
க் + உ = கு	ங் + உ = ஙு	ச் + உ = சு
க் + ஊ = கூ	ங் + ஊ = ஙூ	ச் + ஊ = சூ
க் + எ = கெ	ங் + எ = ஙெ	ச் + எ = செ
க் + ஏ = கே	ங் + ஏ = ஙே	ச் + ஏ = சே
க் + ஐ = கை	ங் + ஐ = ஙை	ச் + ஐ = சை
க் + ஒ = கொ	ங் + ஒ = ஙொ	ச் + ஒ = சொ
க் + ஓ = கோ	ங் + ஓ = ஙோ	ச் + ஓ = சோ
க் + ஔ = கௌ	ங் + ஔ = ஙௌ	ச் + ஔ = சௌ

ஞ் + அ = ஞ	ட் + அ = ட	ண் + அ = ண
ஞ் + ஆ = ஞா	ட் + ஆ = டா	ண் + ஆ = ணா
ஞ் + இ = ஞி	ட் + இ = டி	ண் + இ = ணி
ஞ் + ஈ = ஞீ	ட் + ஈ = டீ	ண் + ஈ = ணீ
ஞ் + உ = ஞு	ட் + உ = டு	ண் + உ = ணு
ஞ் + ஊ = ஞூ	ட் + ஊ = டூ	ண் + ஊ = ணூ
ஞ் + எ = ஞெ	ட் + எ = டெ	ண் + எ = ணெ
ஞ் + ஏ = ஞே	ட் + ஏ = டே	ண் + ஏ = ணே
ஞ் + ஐ = ஞை	ட் + ஐ = டை	ண் + ஐ = ணை
ஞ் + ஒ = ஞொ	ட் + ஒ = டொ	ண் + ஒ = ணொ
ஞ் + ஓ = ஞோ	ட் + ஓ = டோ	ண் + ஓ = ணோ
ஞ் + ஔ = ஞௌ	ட் + ஔ = டௌ	ண் + ஔ = ணௌ

த் + அ = த	ங் + அ = ங	ப் + அ = ப
த் + ஆ = தா	ங் + ஆ = ஙா	ப் + ஆ = பா
த் + இ = தி	ங் + இ = ஙி	ப் + இ = பி
த் + ஈ = தீ	ங் + ஈ = ஙீ	ப் + ஈ = பீ
த் + உ = து	ங் + உ = ஙு	ப் + உ = பு
த் + ஊ = தூ	ங் + ஊ = ஙூ	ப் + ஊ = பூ
த் + எ = தெ	ங் + எ = ஙெ	ப் + எ = பெ
த் + ஏ = தே	ங் + ஏ = ஙே	ப் + ஏ = பே
த் + ஐ = தை	ங் + ஐ = ஙை	ப் + ஐ = பை
த் + ஒ = தொ	ங் + ஒ = ஙொ	ப் + ஒ = பொ
த் + ஓ = தோ	ங் + ஓ = ஙோ	ப் + ஓ = போ
த் + ஔ = தௌ	ங் + ஔ = ஙௌ	ப் + ஔ = பௌ

ம் + அ = ம	ய் + அ = ய	ர் + அ = ர
ம் + ஆ = மா	ய் + ஆ = யா	ர் + ஆ = ரா
ம் + இ = மி	ய் + இ = யி	ர் + இ = ரி
ம் + ஈ = மீ	ய் + ஈ = யீ	ர் + ஈ = ரீ
ம் + உ = மு	ய் + உ = யு	ர் + உ = ரு
ம் + ஊ = மூ	ய் + ஊ = யூ	ர் + ஊ = ரூ
ம் + எ = மெ	ய் + எ = யெ	ர் + எ = ரெ
ம் + ஏ = மே	ய் + ஏ = யே	ர் + ஏ = ரே
ம் + ஐ = மை	ய் + ஐ = யை	ர் + ஐ = ரை
ம் + ஒ = மொ	ய் + ஒ = யொ	ர் + ஒ = ரொ
ம் + ஓ = மோ	ய் + ஓ = யோ	ர் + ஓ = ரோ
ம் + ஔ = மௌ	ய் + ஔ = யௌ	ர் + ஔ = ரௌ

ல் + அ = ல	வ் + அ = வ	ழ் + அ = ழ
ல் + ஆ = லா	வ் + ஆ = வா	ழ் + ஆ = ழா
ல் + இ = லி	வ் + இ = வி	ழ் + இ = ழி
ல் + ஈ = லீ	வ் + ஈ = வீ	ழ் + ஈ = ழீ
ல் + உ = லு	வ் + உ = வு	ழ் + உ = ழு
ல் + ஊ = லூ	வ் + ஊ = வூ	ழ் + ஊ = ழூ
ல் + எ = லெ	வ் + எ = வெ	ழ் + எ = ழெ
ல் + ஏ = லே	வ் + ஏ = வே	ழ் + ஏ = ழே
ல் + ஐ = லை	வ் + ஐ = வை	ழ் + ஐ = ழை
ல் + ஒ = லொ	வ் + ஒ = வொ	ழ் + ஒ = ழொ
ல் + ஓ = லோ	வ் + ஓ = வோ	ழ் + ஓ = ழோ
ல் + ஔ = லௌ	வ் + ஔ = வௌ	ழ் + ஔ = ழௌ

ள் + அ = ள	ற் + அ = ற	ன் + அ = ன
ள் + ஆ = ளா	ற் + ஆ = றா	ன் + ஆ = னா
ள் + இ = ளி	ற் + இ = றி	ன் + இ = னி
ள் + ஈ = ளீ	ற் + ஈ = றீ	ன் + ஈ = னீ
ள் + உ = ளு	ற் + உ = று	ன் + உ = னு
ள் + ஊ = ளூ	ற் + ஊ = றூ	ன் + ஊ = னூ
ள் + எ = ளெ	ற் + எ = றெ	ன் + எ = னெ
ள் + ஏ = ளே	ற் + ஏ = றே	ன் + ஏ = னே
ள் + ஐ = ளை	ற் + ஐ = றை	ன் + ஐ = னை
ள் + ஒ = ளொ	ற் + ஒ = றொ	ன் + ஒ = னொ
ள் + ஓ = ளோ	ற் + ஓ = றோ	ன் + ஓ = னோ
ள் + ஔ = ளௌ	ற் + ஔ = றௌ	ன் + ஔ = னௌ

பாடம் 28.

சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றை முதலெழுத்துக்களால் எழுதுதல்.

கடவுள்	=	க்அ ட்அ வ்உ ள்.
மாணிக்கம்	=	ம்ஆ ண்இக் க்அ ம்.
சொப்பனம்	=	ச்ஒப் ப்அ ன்அ ம்.
பெருங்காற்று	=	ப்எ ர்உங் க்ஆற் ற்உ.
சிறுகுழந்தை	=	ச்இ ற்உ க்உ ழ்அந் த்ஐ.
வெள்ளிக்கிண்ணம்	=	வ்எள் ள்இக் க்இண் ண்அ ம்.
சுண்ணும்புச்சுவர்	=	ச்உண் ண்ஆம் ப்உச் ச்உ வ்அ ர்.
மதிலைத்தாண்டு	=	ம்அ த்இ ல்ஐத் த்ஆண் ட்உ.
கடவுள் காக்கிறார்	=	க்அ ட்அ வ்உ ள் க்ஆ க் க்இ ற்ஆ ர்.
திருவிழா நடக்கும்	=	த்இ ர்உ வ்இ ழ்ஆ ந்அ ட்அக் க்உ ம்.
பூனை எலி பிடிக்கும்	=	ப்ஊ ன்ஐ எ ல்இ ப்இ ட்இக் க்உ ம்.

பயிற்சி.

கீழ்க்கண்ட சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவைகளை முதலெழுத்துக்களைக் கொண்டு எழுதுக:—

பாடசாலை, தெய்வம், ஒற்றுமை, முயற்சி, சந்தனம், சர்க்கரை, சுத்தம், அமிர்தம், மங்கலம், அடக்கம், மாமிசம், ஆபரணம்.

குளிர்காலம், மேட்டுநிலம், பாழ்ங்கிணறு, அச்சுக்கூடம், புளியந்தோப்பு, இரத்தினமோதிரம், செங்கற்சூளை, முத்துச்சிப்பி, பசுச்சாணம், எட்டுத்திக்கு, காட்டுவழி.

சூரியன் உதித்தது. குழந்தை தவழ்ந்தது. கடவுள் நம்மைக் காக்கிறார். எவர்களோடும் இனியவார்த்தை பேசு. பிறருடைய பொருளை இச்சிக்காதே.

பல விகாரச் சொற்றொடர்கள்

(பல உட்பிரிவுகளுடன்)

பாடம் 29.

குறிப்பு:— முதல் சொல் **நிலைமொழி** என்றும், அதனுடன் சேருகிற சொல் **வருமொழி** என்றும், கடைசி எழுத்து **ஈறு** என்றும், முதல் எழுத்து **முதல்** என்றும் குறிப்பிடப்பட்டுள்ளன.

1. நிலைமொழியின் கடைசியில் **இ, ஈ, ஐ** என்னும் உயிர் எழுத்துக்கள் சேர்ந்த உயிர்மெய்யெழுத்துக்களிருந்து, வருமொழியின் முதலில் உயிரெழுத்து வந்தால், அவைகளுக்கிடையில் **ய்** என்னும் மெய்யெழுத்துத் தோன்றும். அந்த மெய்யின் மேல், வருகிற உயிரேறி உயிர்மெய்யாகும்.

உதாரணம்:

மணி	+	அழகு	=	மணியழகு
தீ	+	எரியும்	=	தீயெரியும்
பனை	+	ஓலை	=	பனையோலை

2. நிலைமொழியின் கடைசியில் **இ, ஈ, ஐ அல்லாத மற்ற** உயிரெழுத்துக்கள் சேர்ந்த உயிர்மெய்யெழுத்துக்களிருந்து, வருமொழியின் முதலில் உயிரெழுத்து வந்தால், அவைகளுக்கிடையில் **வ்** என்னும் மெய்யெழுத்துத் தோன்றும். அந்த மெய்யின் மேல், வருகிற உயிரேறி உயிர்மெய்யாகும்.

கீழே கண்ட உதாரணங்களை நன்கு விளங்கிக் கொண்டு பயிற்சிகளையும் செய்து சரிபார்க்க.

உதாரணம்:

பல	+	ஆறு	=	பலவாறு
மா	+	இலை	=	மாவிலை
கொலு	+	இல்	=	கொலுவில்
பூ	+	அழகு	=	பூவழகு
சே	+	உழவு	=	சேவுழவு
தே	+	ஆரம்	=	தேவாரம்
அந்தோ	+	என	=	அந்தோவென
கோ	+	இல்	=	கோவில்

3. **அந்த, இந்த, எந்த** என்னும் பொருள்களைத்தரும் **அ, இ, எ** என்னும் உயிரெழுத்துக்களுடன் வேறு உயிரெழுத்துச் சேர்ந்தால் அவைகளுக் கிடையில் **வ்** என்னும் மெய்யெழுத்து இரட்டித்துத் தோன்றும். ஆனால், வருமொழியின் முதலில் **ய**-வரிஎழுத்து வந்தால் **வ்** மாத்திரம் தோன்றும்.

உதாரணம்:

அ	+	அணி	=	அவ்வணி
இ	+	இதழ்	=	இவ்விதழ்
எ	+	ஆடு	=	எவ்வாடு
அ	+	ஆறு	=	அவ்வாறு
இ	+	யானை	=	இவ்யானை
அ	+	யுவன்	=	அவ்யுவன்

4. ஒரே குற்றெழுத்துக்குப் பின் வந்துள்ள **ண், ன், ல், ள், ய், ம்** என்ற மெய்யெழுத்துக்கள் வருமொழியின் முதலில் உயிரெழுத்து வந்தால் இரட்டிக்கும்.

உதாரணம்:

கண்	+	அழகு	=	கண்ணழகு
பொன்	+	ஆடை	=	பொன்னாடை
சொல்	+	ஆற்றல்	=	சொல்லாற்றல்
எள்	+	அளவும்	=	எள்ளளவும்
பொய்	+	உடம்பு	=	பொய்யுடம்பு
தம்	+	அழகு	=	தம்மழகு

5. 1. **குற்றியலுகரம்.**

ஒரு சொல்லின் கடைசியில் **கு, சு, டு, து பு, று** என்னும் எழுத்துக்களில் ஏதேனும் ஒன்று இருந்து அதற்கு முந்தி **ஒரே குறில் அல்லாத மற்ற** எழுத்துக்கள் இருப்பின், அந்தச் சொல்லின் கடைசியிலுள்ள **உ** குற்றியலுகரம் எனப்படும்.

உதாரணம்:

பாகு, பாக்கு, பஞ்சு, கசடு,
பெய்து, மார்பு, இன்று, அஃது.

குற்றியலுகரம் சேரும் விதம்.

நிலைமொழியின் கடைசியில் குற்றியலுகரமிருந்து, வருமொழியின் முதலில் உயிரெழுத்து வந்தால், குற்றியலுகரம் மெய்யெழுத்தை விட்டு விட்டு ஓடிவிடும். அந்த மெய்யின்மேல் வருகிற உயிரேறி உயிர்மெய்யாகும்.

உதாரணம்:

வாக்கு	+	உரிமை	=	வாக்குரிமை
பேச்சு	+	இல்லை	=	பேச்சில்லை
நாடு	+	எங்கே	=	நாடெங்கே
பத்து	+	உடன்	=	பத்துடன்
உப்பு	+	எடுத்தான்	=	உப்பெடுத்தான்
ஆறு	+	இல்லாத	=	ஆறில்லாத

2. முற்றியலுகரம்.

குற்றியலுகரமல்லாததே முற்றியலுகரமாம். சில சமயம் முற்றியலுகரமும் குற்றியலுகரத்தைப்போலவே கெடும்.

உதாரணம்:

கதவு	+	அடை	=	கதவடை
உழவு	+	எடு	=	உழவெடு
நாலு	+	எடு	=	நாலெடு
ஏழு	+	அடி	=	ஏழடி
சோமு	+	எங்கே	=	சோமெங்கே

6. வருமொழி முதலிலுள்ள த-வரி எழுத்து திரிதல்.

நிலைமொழியின் கடைசியில் **ன்** அல்லது **ண்** இருந்து, வருமொழியின் முதலில் **த**-வரி எழுத்து வந்தால், அது **ற**-வரி அல்லது **ட**-வரி எழுத்தாக மாறும்.

உதாரணம்:

மான்	+	தோல்	=	மான்றோல்
தென்	+	திசை	=	தென்றிசை
மண்	+	தலம்	=	மண்டலம்
தண்	+	தாமரை	=	தண்டாமரை

7. வருமொழி முதலிலுள்ள ந-வரி எழுத்து திரிதல்.

நிலைமொழியின் கடைசியில் **ன்** அல்லது **ண்** இருந்து, வருமொழியின் முதலில் **ந**-வரி எழுத்து வந்தால், அது **ன**-வரி அல்லது **ண**-வரி எழுத்தாக மாறும்.

உதாரணம்:

தன்	+	நலம்	தன்னலம்
பொன்	+	நாடு	பொன்னாடு
கண்	+	நீர்	கண்ணீர்
விண்	+	நாடு	விண்ணாடு

8. நிலைமொழியீறும், வருமொழி முதலும் ஆக இரண்டெழுத்துக்களும் திரிதல்.

1. நிலைமொழியின் கடைசியில் **ல்** அல்லது **ன்** இருந்து, வருமொழியின் முதலில் **த**-வரி எழுத்து வந்தால், சேருகிற இரண்டெழுத்துக்களும் **ற**-வரி எழுத்துக்களாக மாறும்.

உதாரணம்:

கல்	+	தூண்	=	கற்றூண்
சொல்	+	தொடர்	=	சொற்றொடர்
பொன்	+	தகடு	=	பொற்றகடு
பொன்	+	தொடி	=	பொற்றொடி

2. நிலைமொழியின் கடைசியில் **ள்** அல்லது **ண்** இருந்து வருமொழியின் முதலில் **த**-வரி எழுத்து வந்தால், சேருகிற இரண்டெழுத்துக்களும் **ட**-வரி எழுத்துக்களாக மாறும்.

உதாரணம்:

முள்	+	தண்டு	=	முட்டண்டு
உள்	+	துளை	=	உட்டுளை
மண்	+	தூண்	=	மட்டூண்
மண்	+	திண்ணை	=	மட்டிண்ணை

3. நிலைமொழியின் கடைசியில் **ல்** இருந்து, வருமொழியின் முதலில் **ந**-வரி எழுத்து வந்தால், சேருகிற இரண்டெழுத்துக்களும் **ன**-வரி எழுத்துக்களாக மாறும்.

உதாரணம்:

கல்	+	நெஞ்சு	=	கன்னெஞ்சு
கல்	+	நன்று	=	கன்னன்று
பல்	+	நிறம்	=	பன்னிறம்
நல்	+	நாள்	=	நன்னாள்

4. நிலைமொழியின் கடைசியில் **ள்** இருந்து, வருமொழியின் முதலில் **ந**-வரி எழுத்து வந்தால், சேருகிற இரண்டெழுத்துக்களும் **ண**-வரி எழுத்துக்களாக மாறும்.

உதாரணம்:

எள்	+	நெய்	=	எண்ணெய்
முள்	+	நன்று	=	முண்ணன்று
உள்	+	நிறை	=	உண்ணிறை
உள்	+	நாக்கு	=	உண்ணாக்கு

9. நிலைமொழியீறு கெடுதலும், வருமொழி முதல் திரிதலும்.

1. ஒரே குற்றெழுத்தைச் சார்ந்து வராத **ல், ள், ன், ண்** என்னும் மெய்யெழுத்துக்களுக்குப்பின் **ந** வரி-எழுத்து வந்தால், நிலைமொழியின் கடைசியிலுள்ள மெய்யெழுத்து கெட்டு, வருமொழியின் முதலெழுத்து மாறும்.

உதாரணம்:

மேல்	+	நாடு	=	மேனாடு
தோன்றல்	+	நல்லவன்	=	தோன்றனல்லவன்
வாள்	+	நன்று	=	வாணன்று
வேள்	+	நல்லன்	=	வேணல்லன்
கோன்	+	நல்லவன்	=	கோனல்லவன்
மான்	+	நிறம்	=	மானிறம்
பூண்	+	நூல்	=	பூணூல்
வீண்	+	நினைவு	=	வீணினைவு

2. ஒரே குற்றெழுத்தைச் சார்ந்து வராத **ல், ள்** என்னும் மெய்யெழுத்துக்களுக்குப் பின் **த**-வரி எழுத்து வந்தால், நிலைமொழியின் கடைசியிலுள்ள மெய்யெழுத்து கெட்டு, வருமொழியின் முதலெழுத்து மாறும்.

உதாரணம்:

முகில்	+	தடுத்தான்	=	முகிறடுத்தான்
தோன்றல்	+	தீயன்	=	தோன்றறீயன்
நாள்	+	தோறும்	=	நாடோறும்
கோள்	+	தீது	=	கோடீது

10. டு, று என்னும் உயிர்மெய்யெழுத்துக்களை ஈற்றிலே கொண்டுவந்துள்ள நெடிற்றொடர், உயிர்த்தொடர்க் குற்றியலுகரச் சொற்கள், வேற்றுமையில், வேறு சொற்களோடு சேரும்பொழுது தம்மிடத்திலுள்ள ட், ற் என்னும் மெய்யெழுத்துக்கள் இரட்டிக்கப்பெறும்.

உதாரணம்:

✵ ஆடு	+	கால்	=	ஆட்டுக்கால்
மாடு	+	கொம்பு	=	மாட்டுக்கொம்பு
ஆறு	+	மணல்	=	ஆற்றுமணல்
சேறு	+	நிலம்	=	சேற்றுநிலம்
முரடு	+	மனிதன்	=	முரட்டுமனிதன்
குறடு	+	கால்	=	குறட்டுக்கால்
வயிறு	+	கடுப்பு	=	வயிற்றுக்கடுப்பு
ஞாயிறு	+	கிழமை	=	ஞாயிற்றுக்கிழமை

11. கு, சு, டு, து, பு, று என்னும் உயிர்மெய்யெழுத்துக்களை ஈற்றிலே கொண்டுவந்துள்ள சில மென்றொடர்க் குற்றியலுகரச் சொற்களின் ஈற்றுக்கு முந்தின மெல்லெழுத்துக்கள், வேற்றுமையில், தமக்கு இனமான வல்லெழுத்துக்களாக மாறப்பெறும்.

உதாரணம்:

குரங்கு	+	இனம்	=	குரக்கினம்
நஞ்சு	+	பை	=	நச்சுப்பை
நண்டு	+	வாய்க்காலி	=	நட்டுவாய்க்காலி
மருந்து	+	பை	=	மருத்துப்பை
இரும்பு	+	பாறை	=	இருப்புப்பாறை
கன்று	+	ஆ	=	கற்றா

✵ ஆட்டுக்கால் = ஆட்டினுடைய கால்
ஆடுகால் = ஆடுகிற கால்

12. மை என்னும் எழுத்தைக் கொண்டு முடிந்துள்ள பண்புப்பெயர்ச் சொற்கள் பலவிதமாக மாறி வருமொழியுடன் சேரும்.

உதாரணம்:

1.	சிறுமை	+	பொருள்	=	சிறுபொருள்
	சிறுமை	+	வீடு	=	சிறுவீடு
	கைம்மை	+	பெண்	=	கைம்பெண்
	திண்மை	+	தோள்	=	திண்டோள்
	கருமை	+	நாகம்	=	கருநாகம்
	கருமை	+	வண்டு	=	கருவண்டு
2.	கருமை	+	இருள்	=	காரிருள்
	பசுமை	+	பயறு	=	பாசிப்பயறு
	பெருமை	+	ஊர்	=	பேரூர்
	முதுமை	+	ஊர்	=	மூதூர்
	கருமை	+	மேகம்	=	கார்மேகம்
	கருமை	+	மேனி	=	கார்மேனி
	அருமை	+	உயிர்	=	ஆருயிர்
	செம்மை	+	அடி	=	சேவடி
3.	பசுமை	+	தார்	=	பைந்தார்
	பசுமை	+	தமிழ்	=	பைந்தமிழ்
	பசுமை	+	பூண்	=	பைம்பூண்
	பசுமை	+	கிளி	=	பைங்கிளி
4.	நடுமை	+	ஆறு	=	நட்டாறு
	சிறுமை	+	உயிர்	=	சிற்றுயிர்
	சிறுமை	+	ஆறு	=	சிற்றாறு
	வெறுமை	+	இலை	=	வெற்றிலை
5.	வெம்மை	+	உயிர்	=	வெவ்வுயிர்
	செம்மை	+	வாழை	=	செவ்வாழை
6.	அருமை	+	காரியம்	=	அருங்காரியம்
	பெருமை	+	புகழ்	=	பெரும்புகழ்
	செம்மை	+	கல்	=	செங்கல்
	செம்மை	+	சுடர்	=	செஞ்சுடர்
	கருமை	+	குழல்	=	கருங்குழல்
	வெறுமை	+	பானை	=	வெறும்பானை
	குறுமை	+	கயிறு	=	குறுங்கயிறு

8.	இனிமை	+	சொல்	=	இன்சொல்
	தூய்மை	+	மலர்	=	தூமலர்

13. சில எண்ணுப் பெயர்கள் சேரும் விதம்:—

ஒன்று	+	ஒன்று	=	ஒவ்வொன்று
எட்டு	+	பத்து	=	எண்பது
மூன்று	+	நூறு	=	முந்நூறு
ஐந்து	+	நூறு	=	ஐந்நூறு
நான்கு	+	நூறு	=	நானூறு
மூன்று	+	தமிழ்	=	முத்தமிழ்
மூன்று	+	மூன்று	=	மும்மூன்று
நான்கு	+	நான்கு	=	நன்னான்கு
ஐந்து	+	ஐந்து	=	ஐயைந்து
எட்டு	+	எட்டு	=	எவ்வெட்டு
பத்து	+	பத்து	=	பப்பத்து
ஐந்து	+	பூதம்	=	ஐம்பூதம்
ஐந்து	+	வகை	=	ஐவகை
எட்டு	+	வகை	=	எண்வகை
மூன்று	+	வேந்தர்	=	மூவேந்தர்
நான்கு	+	மணி	=	நான்மணி
நான்கு	+	கவி	=	நாற்கவி
நான்கு	+	காலி	=	நாற்காலி

14. சில திசைப் பெயர்கள் சேரும் விதம்:—

வடக்கு	+	கிழக்கு	=	வடகிழக்கு
வடக்கு	+	திசை	=	வடதிசை
வடக்கு	+	மலை	=	வடமலை
குணக்கு	+	கடல்	=	குணகடல்
குடக்கு	+	திசை	=	குடதிசை
* கிழக்கு (கீழ்)	+	திசை	=	கீழ்த்திசை
கிழக்கு (கீழ்)	+	பாக்கம்	=	கீழ்ப்பாக்கம்
* தெற்கு(தென்)	+	கிழக்கு	=	தென்கிழக்கு
தெற்கு(தென்)	+	மலை	=	தென்மலை
* மேற்கு (மேல்)	+	கடல்	=	மேல்கடல்
மேற்கு (மேல்)	+	திசை	=	மேற்றிசை
மேற்கு (மேல்)	+	வீதி	=	மேல்வீதி
எட்டு (எண்)	+	திசை	=	எண்டிசை
நான்கு (நால்)	+	திசை	=	நாற்றிசை
தெற்கு(தென்)	+	திசை	=	தென்றிசை
மேற்கு(மேல்)	+	ஊர்	=	மேலூர்
தெற்கு	+	வடக்கு	=	தென்வடல் (நீளம்)
கிழக்கு	+	மேற்கு	=	கிழமேல் (நீளம்)

* கிழக்கு—கீழ் எனவும்; மேற்கு—மேல் எனவும்; தெற்கு—தென் எனவும் வழக்கில் வரும்.

15. சில சிறப்புப் பெயர்கள் சேரும் விதம்:—

இராமன்	+	இலட்சுமணன்	=	இராமலட்சுமணர்
சூரியன்	+	சந்திரன்	=	சூரியசந்திரர்
அண்ணன்	+	தம்பி	=	அண்ணன்தம்பிமார்
தாய்	+	தந்தை	=	தாய்தந்தையர்

16. ம் என்னும் மெய்யெழுத்தை இறுதியிலுடைய சொற்கள், வேறு சொற்களோடு சேரும்பொழுது ம் கெட்டு, உயிரெழுத்தை இறுதியிலுடைய சொற்களைப்போலச் சேரும்; வல்லினம் வந்தால் அதற்கு இனமான மெல்லெழுத்தாக மாறும்.

உதாரணம்:

1.	மரம்	+	கிளை	=	மரக்கிளை
	நிலம்	+	பரப்பு	=	நிலப்பரப்பு
	மரம்	+	அடி	=	மரவடி
	பவளம்	+	இதழ்	=	பவளவிதழ்
	நிலம்	+	அறை	=	நிலவறை
2.	மரம்	+	சிறிது	=	மரஞ்சிறிது
	நம்	+	கை	=	நங்கை
	சினம்	+	தீர்	=	சினந்தீர்

17. பலவித விகாரமடையும் அபூர்வச் சொற்றொடர்கள்:—

1.	தென்னை	+	குலை	=	தென்னங்குலை
	பனை	+	காய்	=	பனங்காய்
	தாழை	+	பூ	=	தாழம்பூ
	எலுமிச்சை	+	மரம்	=	எலுமிச்சமரம்
	ஆவிரை	+	வேர்	=	ஆவிரவேர்
	ஆவிரை	+	கொழுந்து	=	ஆவிரங்கொழுந்து

2. வேம்பு + பழம் = வேப்பம்பழம்
புளி + காய் = புளியங்காய்
புளி + பழம் = புளியம்பழம்

3. தெங்கு + காய் = தேங்காய்

4. வேறு + வேறு = வெவ்வேறு
எப்பொழுது + எப்பொழுது = எவ்வெப்பொழுது

5. நேற்று + பொழுது = நேற்றைப்பொழுது
அன்று + பொழுது = அற்றைப்பொழுது
பண்டு + காலம் = பண்டைக்காலம்

6. பூ + கொடி = பூங்கொடி
பூ + தோட்டம் = பூந்தோட்டம்

7. பல + பல = { பல பல / பலப்பல / பற்பல
சில + சில = { சில சில / சிலச்சில / சிற்சில

8. பல + கலை = பலகலை, பல்கலை
சில + நாள் = சிலநாள், சின்னாள்
பல + நாள் = பலநாள், பன்னாள்

9. அல் + திணை = அஃறிணை
பல் + துளியாறு = பஃறுளியாறு

பலவிகாரச் சொற்றொடர்களில் பயிற்சி

1. கீழ்க்கண்ட சொற்களைச் சேர்த்துச் சொற்றொடர்களாக்குக:-

1. வேலை + ஆட்கள்	நா + எடுத்தான்
தீ + அணை	பா + இனம்
மலை + எலி	பல + ஆறு
2. பூ + உடன்	3. அ + இடம்
கோ + ஐ	எ + யானை
தே + ஒடு	எ + காலம்
திரு + அடி	எ + ஆறு

4. கண் + எரிச்சல்	வான் + நிலை
மண் + அளவு	10. முரடு + மனிதன்
வில் + ஆள்	சோறு + வளம்
பொன் + ஆடை	மாடு + தோல்
உள் + ஒளி	ஆறு + நீர்
பொய் + உடல்	11. இரும்பு + சட்டம்
சொல் + அருமை	கரும்பு + வில்
தன் + அளவு	12. செம்மை + தாமரை
என் + அருமை	வெறுமை + உடம்பு
நெய் + ஆடை	கொடுமை + கோல்
5. காசு + எடு	பசுமை + பொன்
போக்கு + இன்றி	கருமை + மேகம்
வாழ்வு + ஏது	வெறுமை + இலை
நாடு + எங்கே	பெருமை + புகழ்
அளவு + இன்றி	பசுமை + தாள்
தாழ்வு + எங்கே	13. மூன்று + சங்கம்
6. மான் + தலை	எட்டு + கோணம்
முன் + தானை	வடக்கு + கிழக்கு
தண் + தாமரை	ஐந்து + கணை
மீன் + தோல்	14. மேற்கு + புறம்
விண் + தலம்	கிழக்கு + கோடி
7. என் + நாடு	தெற்கு + மேற்கு
கண் + நீர்	கிழக்கு + மேற்கு
8. நல் + நூல்	15. சோமன் + சூரியன்
நல் + தாமரை	மாமன் + மாமி
புல் + நுனி	16. மரம் + பலகை
பொன் + தாமரை	நிலம் + அளவு
தென் + நாடு	புறம் + இதழ்
தண் + நீர்	மரம் + பொம்மை
தெள் + நீர்	17. பனை + பழம்
எள் + துணையும்	பனை + காய்
முள் + நுனி	புளி + பட்டை
கல் + தூண்	தாழை + குடை
எள் + துவையல்	பூ + கை
மேல் + நாள்	எலுமிச்சை + காய்
வீண் + நாள்	பூ + பொழில்
9. கோள் + நிலை	தென்னை + கீற்று

2. கீழ்க்கண்ட சொற்றொடர்களை இரு சொற்களாகப் பிரித்தெழுதுக:—

1. விலையேற்றம்
   ஈயோட்டம்
2. நாவிழந்தான்
   மாவினம்
3. எவ்யானை
   அவ்வாறு
   இவ்யாக்கை
4. கண்ணொளி
   மெய்யன்பு
   என்னப்பன்
   பல்லழகு
5. மாசில்லை
   நாவுக்கரசர்
   வீடெங்கே
   தாழ்வின்றி
6. அரன்றலை
   முருகன்றுணை
   கண்டுயில்
7. தன்னலம்
   கண்ணீர்
8. நற்றுணை
   பொற்றொடி
   விற்றொனி
   வின்னுனி
   தெண்ணீர்
   எட்டுணையும்
   மட்டூண்
   எண்ணெய்
9. மேனாள்
   தூணன்று
   நாடோறும்
   மேனாடு
   நீணெறி
   தோன்றறியன்
   மேனின்று
10. ஆட்டுத்தலை
    வயிற்றுவலி
    மாட்டுத்தோல்
11. இருப்புத்தூண்
    நச்சுப்பொய்கை
12. தண்டமிழ்
    நன்னூல்
    கருந்தேள்
    தொன்னூல்
    செங்கோல்
    பைந்தமிழ்
    பேருணவு
    சிற்றாறு
    ஆரமுதம்
    நட்டாறு
13. மூவுலகு
    நான்மறை
    ஐங்கரன்
14. மேற்றிசை
    கீழ்த்திசை
    தென்னாடு
15. பரதசத்துருக்கனர்
    நகுலசகாதேவர்
16. மரப்பொந்து
    வட்டவாழி
17. பூச்செடி
    பூப்பந்தல்
    பூஞ்சோலை
    பூந்தேர்
    புளியம்பட்டை
    பனங்கிழங்கு
    ஆவிரஞ்செடி
    தென்னங்கீற்று
    அஃறிணை
    பற்பல

வாக்கியம்.

பாடம் 30.

ஆண்பால் — பெண்பால்.

ஆண்பால்	பெண்பால்	ஆண்பால்	பெண்பால்
அப்பன்	அம்மை	தேவன்	தேவி
அப்பா	அம்மா	தோழன்	தோழி
அண்ணன்	அக்காள்	நம்பி	நங்கை
அரசன்	அரசி	நாயகன்	நாயகி
அழகன்	அழகி	பண்டிதன்	பண்டிதை
அவன்	அவள்	பதி	பத்தினி
ஆசிரியன்	ஆசிரியை	பாட்டன்	பாட்டி
இராஜா	இராணி	பாலகன்	பாலகி
ஈஸ்வரன்	ஈஸ்வரி	பிதா	மாதா
உத்தமன்	உத்தமி	புதல்வன்	புதல்வி
ஊமையன்	ஊமைச்சி	புத்திரன்	புத்திரி
எசமான்	எசமானி	பூட்டன்	பூட்டி
கணவன்	மனைவி	பெரியப்பன்	பெரியம்மை
கள்ளன்	கள்ளி	பேரன்	பேர்த்தி
கிழவன்	கிழவி	பொன்னன்	பொன்னி
குருடன்	குருடி	பௌத்திரன்	பௌத்திரி
குணவான்	குணவதி	மகன்	மகள்
சகோதரன்	சகோதரி	மனுஷன்	மனுஷி
சிறுவன்	சிறுமி	மாமன்	மாமி
சீமான்	சீமாட்டி	மாணவன்	மாணவி
செல்வன்	செல்வி	முதல்வன்	முதல்வி
சோதரன்	சோதரி	மூதாளன்	மூதாட்டி
தந்தை	தாய்	மைத்துனன்	மைத்துனி
தமயன்	தமக்கை	வஞ்சகன்	வஞ்சகி
தம்பி	தங்கை	வீட்டுக்காரன்	வீட்டுக்காரி
துணைவன்	துணைவி	தனயன்	தனயை

பாடம் 31.

எதிர்ப்பதம்.

ஆம் — இல்லை	தேய்தல் — வளர்தல்
ஈரம் — காய்வு	தைரியம் — அதைரியம்
உயர்வு — தாழ்வு	தொகுத்தல் — விரித்தல்
எசமான் — வேலைக்காரன்	சேய்மை — அண்மை
ஏற்றம் — இறக்கம்	தோன்றல் — மறைதல்
ஒற்றுமை — வேற்றுமை	நட்பு — பகை
கனவு — நனவு	நாகரீகம் — அநாகரீகம்
காலை (நேரம்) — மாலை	நிறைவு — குறைவு
கீழ் — மேல்	நீளம் — அகலம்
கூட்டல் — கழித்தல்	நுட்பம் — திட்பம்
கொஞ்சம் — அதிகம்	நூதனம் — புராதனம்
கோபம் — சாந்தம்	நுண்மை — பருமை
சண்டை — சமாதானம்	நெட்டை — குட்டை
சாதகம் — பாதகம்	நேர்பாடு — மாறுபாடு
சில — பல	நொய்மை — திண்மை
சீதம் — உஷ்ணம்	பழமை — புதுமை
சுத்தம் — அசுத்தம்	பற்று — வரவு
சூடு — குளிர்ச்சி	பிறப்பு — இறப்பு
சைவம் — அசைவம்	சனனம் — மரணம்
சோம்பல் — சுறுசுறுப்பு	புகழ்ச்சி — இகழ்ச்சி
சயம் — அபசயம்	பெருமை — சிறுமை
நினைவு — மறதி	பேரின்பம் — சிற்றின்பம்
தண்ணீர் — வெந்நீர்	பொய் — மெய்
தாமதம் — துரிதம்	போக்கு — வரத்து
திருப்தி — அதிருப்தி	மலிவு — கிராக்கி
துணிவு — சோர்வு	மானம் — அவமானம்
தூரம் — சமீபம்	வரவு — செலவு
தென்றல் — வாடை	வாதி — பிரதிவாதி
தெளிவு — மயக்கம்	வினா — விடை
தேசு — மாசு	வெற்றி — தோல்வி

பாடம் 32.

ஒருமை — பன்மை.

ஒருமை — பன்மை	ஒருமை — பன்மை
மணி — மணிகள்	மகள் — மகளிர்
ஆண் — ஆண்கள்	மகன் — மக்கள்
மான் — மான்கள்	திருடன் — திருடர்
கதவு — கதவுகள்	குமாரன் — குமாரர்
கன்று — கன்றுகள்	தோகை — தோகையர்
குடை — குடைகள்	மாமன் — மாமன்மார்
நாய் — நாய்கள்	மாமி — மாமிமார்
மலர் — மலர்கள்	மங்கை — மங்கையர்
கடல் — கடல்கள்	பெண்டு — பெண்டிர்
இதழ் — இதழ்கள்	எது — எவை
வால் — வால்கள்	அது — அவை
ஆறு — ஆறுகள்	இது — இவை
மா — மாக்கள்	யாது — யாவை
ஈ — ஈக்கள்	குரு — குருமார்
பசு — பசுக்கள்	தாய் — தாய்மார்
தெரு — தெருக்கள்	தந்தை — தந்தைமார்
பூ — பூக்கள்	அத்தை — அத்தைமார்
மனு — மனுக்கள்	நாயன் — நாயன்மார்
வினா — வினாக்கள்	தம்பி — தம்பிமார்
தேனீ — தேனீக்கள்	என்னுடைய — எங்களுடைய
நா — நாக்கள்	நீ — நீர், நீங்கள்
எழுத்து — எழுத்துக்கள்	உன்னுடைய - உங்களுடைய
மரம் — மரங்கள்	அவன் — அவர்
நாள் — நாட்கள்	எவன் — எவர்
முள் — முட்கள்	எவள் — எவர்
ஆள் — ஆட்கள்	யாவன் — யாவர்
கல் — கற்கள்	தீது — தீயவை
சொல் — சொற்கள்	பெரிது — பெரியவை
பல் — பற்கள்	நான் — நாம், நாங்கள்
தேவன் — தேவர்	யான் — யாம், யாங்கள்

பாடம் 33.

வேற்றுமை உருபுகள் எல்லாம்.

(மனப்பாடம் செய்க.)

முதல் வேற்றுமை.

ஒரு பொருளின் இயல்பான பெயரே முதல் வேற்றுமை யெனப்படும். அதற்கு "எழுவாய் வேற்றுமை" என்றும் பெயர். எனவே அதற்கு உருபு இல்லை. அது வாக்கியத்தில் எழுவாயாக இருக்கும்.

இரண்டாம் வேற்றுமை.

இரண்டாம் வேற்றுமையின் உருபு ஐ என்பதாகும்.

மூன்றும் வேற்றுமை.

மூன்றும் வேற்றுமையின் உருபுகள் **ஆல், ஆன், ஓடு, ஒடு** என்பவைகளாம் **கொண்டு, உடன்** என்பவைகள் அதன் ✱ **சொல்லுருபு**களாம்.

நான்காம் வேற்றுமை.

நான்காம் வேற்றுமையின் உருபு **கு** என்பதாம். **ஆக, பொருட்டு, நிமித்தம்** என்பவை அதன் சொல்லுருபுகளாம்.

ஐந்தாம் வேற்றுமை.

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் **இன், இல்** என்பவை-களாம். **நின்று, இருந்து, இலிருந்து, காட்டிலும், பார்க்கிலும்** என்பவைகள் அதன் சொல்லுருபுகளாம்.

ஆறும் வேற்றுமை.

ஆறும் வேற்றுமையின் உருபுகள் **அது, ஆது, அ** என்பவைகளாம். **உடைய** என்பது அதன் சொல்லுருபாம்.

ஏழாம் வேற்றுமை.

ஏழாம் வேற்றுமையின் உருபுகள் **இல்** முதலியவைகளாம். **இடத்தில்** என்பது அதன் சொல்லுருபு.

எட்டாம் வேற்றுமை.

எட்டாம் வேற்றுமைக்கு உருபுகள் இல்லை. இது "விளி வேற்றுமை" என்றும் பெயர் பெறும். இது ஒன்றை அழைக்கும், அதாவது கூப்பிடும் பொருள்பற்றியே வரும்.

✱ தனிப்பொருளுள்ள ஏதாவதொரு சொல், வேற்றுமையுருபுக்குப்பதிலாக வரினும், உருபுடன் சேர்ந்துவரினும் சொல்லுருபு எனப்படும்.

பாடம் 34.

வேற்றுமையுருபுகள் சேர்ந்த உதாரண வாய்பாட்டுச் சொற்கள்.

பெயர்ச் சொற்கள் மட்டுமே 33ஆம் பாடத்திற் கண்ட வேற்றுமை யுருபுகளை யேற்கும். வேற்றுமை யுருபுகளை யேற்கும்பொழுது பெயர்ச்சொல்லின் கடைசி யெழுத்து மாத்திரமே விகாரமடையும். இம்முறையில் **மக, கடா, செடி** முதலிய 31 விதமான பெயர்ச் சொற்கள் வேற்றுமை யுருபுகளை யேற்கும் பொழுது, அவை மாறுதலடையும் விதங்களை இப்பாடத்தில் நன்கு விளக்கிக் காட்டியுள்ளோம். இவற்றைத் தெளிவாகத் தெரிந்துகொண்டால், எந்தப் பெயர்ச் சொல்லுடனும் வேற்றுமையுருபுகளைச் சேர்த்து இலகுவாகச் சொல்லவும், எழுதவுங் கூடிய திறமையைப் பெற்றுவிடலாம்.

இங்ஙனம் பெயர்ச் சொற்களை 31 விதங்களாக வகுத்து அவைகளுடன் வேற்றுமையுருபுகள் எல்லாவற்றையுஞ் சேர்த்துச் சொல்லக் கூடிய திறமையை உண்டாக்கிக் காட்டுவதொன்றே எமது புத்தகத்திற்குத் தனிப்பெருஞ் சிறப்பைத் தருவதாகும்.

இதன்கீழ் ஒரு வேற்றுமைக்கு ஒரு உருபையே உதாரணங்களில் அமைத்துக் காட்டியுள்ளோம். அவற்றை மனப்பாடஞ் செய்துகொள்க.

1 மக	கடா	செடி
2 மகவை	கடாவை	செடியை
3 மகவால்	கடாவால்	செடியால்
4 மகவுக்கு	கடாவுக்கு	செடிக்கு
5 மகவிலிருந்து	கடாவிலிருந்து	செடியிலிருந்து
6 மகவினுடைய	கடாவினுடைய	செடியினுடைய
7 மகவில்	கடாவில்	செடியில்
8 மகவே!	கடாவே!	செடியே!

1 தேனீ	சிசு	மாது
2 தேனீயை	சிசுவை	மாதை
3 தேனீயால்	சிசுவால்	மாதால்
4 தேனீக்கு	சிசுவுக்கு	மாதுக்கு
5 தேனீயிலிருந்து	சிசுவிலிருந்து	மாதிலிருந்து
6 தேனீயினுடைய	சிசுவினுடைய	மாதினுடைய
7 தேனீயில்	சிசுவில்	மாதில்
8 தேனீயே!	சிசுவே!	மாதே!
✱1 மாடு	சோறு	பூ
2 மாட்டை	சோற்றை	பூவை
3 மாட்டால்	சோற்றால்	பூவால்
4 மாட்டுக்கு	சோற்றுக்கு	பூவுக்கு
5 மாட்டிலிருந்து	சோற்றிலிருந்து	பூவிலிருந்து
6 மாட்டினுடைய	சோற்றினுடைய	பூவினுடைய
7 மாட்டில்	சோற்றில்	பூவில்
8 மாடே!	சோறே!	பூவே!
1 தே	யானை	கோ
2 தேவை	யானையை	கோவை
3 தேவால்	யானையால்	கோவால்
4 தேவுக்கு	யானைக்கு	கோவுக்கு
5 தேவிலிருந்து	யானையிலிருந்து	கோவிலிருந்து
6 தேவினுடைய	யானையினுடைய	கோவினுடைய
7 தேவில்	யானையில்	கோவில்
8 தேவே!	யானையே!	கோவே!

✱ மாடு—மாட்டை, மாட்டால் ... மாடே! என்றும்; சோறு—சோற்றை, சோற்றால் ... சோறே! என்றும் வருவதுபோல, தகடு—தகட்டை, தகட்டால் ... தகடே! எனவும்; வயிறு—வயிற்றை, வயிற்றால் ... வயிறே! எனவும் வரும். நெடிற்றொடர்க் குற்றியலுகரம், உயிர்த் தொடர்க் குற்றியலுகரம் ஆகியவற்றில், உருபு எற்கும்போது, ட், ற் இரட்டிக்கும். விளி வேற்றுமையில் மாத்திரம் இரட்டிக்காது.

1 பெண்	ஆண்	அம் (மேகம்)
2 பெண்ணை	ஆணை	அம்மை
3 பெண்ணால்	ஆணால்	அம்மால்
4 பெண்ணுக்கு	ஆணுக்கு	அம்முக்கு
5 பெண்ணிலிருந்து	ஆணிலிருந்து	அம்மிலிருந்து
6 பெண்ணினுடைய	ஆணினுடைய	அம்மினுடைய
7 பெண்ணில்	ஆணில்	அம்மில்
8 பெண்ணே!	ஆணே!	அம்மே!
1 தோம்	செய்	சேய்
2 தோமை	செய்யை	சேயை
3 தோமால்	செய்யால்	சேயால்
4 தோமுக்கு	செய்க்கு	சேய்க்கு
5 தோமிலிருந்து	செய்யிலிருந்து	சேயிலிருந்து
6 தோமினுடைய	செய்யினுடைய	சேயினுடைய
7 தோமில்	செய்யில்	சேயில்
8 தோமே!	செய்யே!	சேயே!
1 மலர்	பல்	பால்
2 மலரை	பல்லை	பாலை
3 மலரால்	பல்லால்	பாலால்
4 மலருக்கு	பல்லுக்கு	பாலுக்கு
5 மலரிலிருந்து	பல்லிலிருந்து	பாலிலிருந்து
6 மலரினுடைய	பல்லினுடைய	பாலினுடைய
7 மலரில்	பல்லில்	பாலில்
8 மலரே!	பல்லே!	பாலே!
1 கூழ்	முள்	தேள்
2 கூழை	முள்ளை	தேளை
3 கூழால்	முள்ளால்	தேளால்
4 கூழுக்கு	முள்ளுக்கு	தேளுக்கு
5 கூழிலிருந்து	முள்ளிலிருந்து	தேளிலிருந்து
6 கூழினுடைய	முள்ளினுடைய	தேளினுடைய
7 கூழில்	முள்ளில்	தேளில்
8 கூழே!	முள்ளே!	தேளே!

1 பொன்	மான்	மரம்
2 பொன்னை	மானை	மரத்தை
3 பொன்னால்	மானால்	மரத்தால்
4 பொன்னுக்கு	மானுக்கு	மரத்துக்கு
5 பொன்னிலிருந்து	மானிலிருந்து	மரத்திலிருந்து
6 பொன்னினுடைய	மானினுடைய	மரத்தினுடைய
7 பொன்னில்	மானில்	மரத்தில்
8 பொன்னே!	மானே!	மரமே!

1 பல	அவை	எல்லாம்
2 பலவற்றை	அவற்றை	எல்லாவற்றையும்
3 பலவற்றால்	அவற்றால்	எல்லாவற்றாலும்
4 பலவற்றிற்கு	அவற்றிற்கு	எல்லாவற்றிற்கும்
5 பலவற்றிலிருந்து	அவற்றிலிருந்து	எல்லாவற்றிலிருந்தும்
6 பலவற்றினுடைய	அவற்றினுடைய	எல்லாவற்றினுடையவும்
7 பலவற்றில்	அவற்றில்	எல்லாவற்றிலும்
8✷	... ...	... ...

1 எல்லாரும்
2 எல்லாரையும்
3 எல்லாராலும்
4 எல்லாருக்கும்
5 எல்லாரிலிருந்தும்
6 எல்லாருடையவும்
7 எல்லாரிலும்
8 ... ...

✷ விளிவேற்றுமை ஏற்காத சொற்கள் எவை என்பதை 35ஆம் பாடத்தில் காண்க.

பாடம் 35.

வேற்றுமையுருபுகள் ஏற்கும்பொழுது விகாரமடையும் சொற்கள்.

நான், யான்	என்பன	என்	எனவும்,
நாம்	என்பது	நம்	எனவும்,
யாம்	என்பது	எம்	எனவும்,
நாங்கள், யாங்கள்	என்பன	எங்கள்	எனவும்,
நீ	என்பது	உன்	எனவும்,
நீர்	என்பது	உம்	எனவும்,
நீங்கள்	என்பது	உங்கள்	எனவும்,
தான்	என்பது	தன்	எனவும்,
தாம்	என்பது	தம்	எனவும்,
தாங்கள்	என்பது	தங்கள்	எனவும்

முறையே விகாரப்பட்டு 2, 3, 4, 5, 6, 7 ஆகிய வேற்றுமையுருபுகளை ஏற்று வரும். **இவைகளுக்கு எட்டாம் வேற்றுமையாகிய விளிவேற்றுமை கிடையாது.**

எட்டாம் வேற்றுமை ஏற்காத சொற்கள்.

நான் யான்	நாம் நாங்கள்	யாம் யாங்கள்	—		தன்மை
நீ	நீர்	நீங்கள்	—	—	முன்னிலை
அவன் அவள் அவர் அது அவை					சுட்டு
இவன் இவள் இவர் இது இவை					சுட்டு
எவன்	எவள்	எவர்			வினா
எது	எவை	—			வினா
யாவன்	யாவள்	யாவர்			வினா
யாது	யாவை	—			வினா
தான்	தாம்	தாங்கள்			பொது
எல்லாரும்	எல்லாம்	—			பொது
பிறன்	பிறள்	பிறர்	பிறிது	பிற	பொது
மற்றவன்	மற்றவள்	மற்றவர்	மற்றது	மற்றவை	பொது
பலர்	சிலர்	—	—		பொது
பல	சில	—	—		பொது

முன்னுல்காட்டியுள்ள உதாரணவாய்பாட்டைப்பின்பற்றியபயிற்சிகள்:

கீழ்க்கண்ட ஒவ்வொரு பெயர்ச்சொல்லுடனும் எட்டு வேற்றுமையுருபுகள் சேர்த்துச் சொல்லுக; பின் எழுதுக:

1. மக, விள.
2. கடா, ஊதா, பலா, விளா, வினை, கனை, அணை, விழா, மிடா, மாதா, சபா, சம்பா, அவா, சுரு.
3. செடி, அங்கி, மாசி, தடி, மணி, சக்தி, சனி, தம்பி, உமி, ஆயி, நரி, பல்லி, கவரி, வழி, கிளி, கறி, பனி.
4. தேனீ, ஈ, செந்தீ, முத்தீ, பேரீ, மாட்டீ, ஆணீ, பெண்ணீ.
5. சிசு, பசு, மடு, கணு, மது, சோமு, வாயு, தரு, கொலு, கொசு, கதவு, புழு, பளு, மறு, மனு.
6. மாது, பாகு, மாசு, கோது, தேக்கு, பேச்சு, தட்டு, சத்து, சீப்பு, பற்று, சங்கு, நஞ்சு, வண்டு, பந்து, கொம்பு, கன்று, மார்பு, எஃகு, அது, இது, எது, யாது, சிறியது, பெரியது.
7. மாடு, ஆடு, ஊடு, ஈடு, ஏடு, காடு, தோடு, வீடு, நாடு, மேடு, சூடு, ஓடு, கூடு.
8. சோறு, ஆறு, ஈறு, ஊறு, தாறு, தூறு, நீறு, நூறு, பேறு, சேறு.
9. பூ, ஊ (=ஊன்), கூ (=பூமி), தூ (=தந்த சுத்தம்), மூ (=மூப்பு), ஆடூ, மகடூ, கொண்மூ (=மேகம்), ஆணிப்பூ, சம்பூ.
10. தே, ஏ (அம்பு), சே (எருது), பே (நுரை).
11. யானை, பானை, குடை, சட்டை, தங்கை, மங்கை, கதை, தோசை, சுமை, மரை, அலை, இலை, இழை, கிளை, அறை, பனை, கை, தை, பை, மை, சபை, அவை (சபை), கவை, ஔவை.
12. கோ, ஓ (மதகுக் கதவு), சோ (அரண்), நோ (துன்பம்).
13. பெண், எண், கண், பண், புண், மண், விண்.
14. ஆண், ஊண், சேண், தூண், நாண், பூண், அரண், பரண்.

15. அம், உம் (நீர்), தும், சம், பம்.
16. தோம், ஆம் (ஈரம்), ஓம், தீம், தேம், பேம்.
17. செய், பொய், மொய், நெய், மெய், நொய்.
18. சேய், ஆய், காய், தாய், நாய், நோய், பாய், பேய், வாய்.
19. மலர், அலர், சுவர், பலர், சிலர், அவர், இவர், எவர், யார், கார், தார், ஊர், ஏர், தேர், நார், புகார்.
20. பல், அல், இல், கல், செல், சொல், நெல், புல், மல், வில்.
21. பால், ஆல் (ஆலமரம்), கால், கோல், சால், சூல், சேல், தோல், நூல், மால், வால், வேல், கடல், பகல், மதில், மணல், கப்பல், சோம்பல்.
22. கூழ், ஊழ், ஏழ், தாழ், யாழ், இகழ், புகழ், இதழ், சிமிழ், குமிழ்.
23. முள், உள், எள், கள், கொள், நள், புள்.
24. தேள், ஆள், கேள் கோள், தாள், தூள், தோள், நாள், பீள், வாள், வேள், மகள், மக்கள், மஞ்சள், அவள், இவள், எவள், மரங்கள், ஆட்கள், கற்கள், சொற்கள், முட்கள்.
25. பொன், தென், பின், மன், மின், முன்.
26. மான், ஆன் (பசு), ஊன், கான், கூன், கோன், தேன், பேன், மீன், வான், மகன், அரசன், அவன், இவன், எவன்.
27. மரம்(அத்துச்சாரியை ஏற்று வருவன:) வரம், நிறம், வாரம், மகம், பாசம், பீடம், மாடம், மணம், பணம், பாணம், கிண்ணம், வேழம், குளம், கோளம், இனம், ஈனம்.
28. பல (அற்றுச் சாரியை ஏற்று வருவன:) சில, பெரிய, சிறிய, எளிய, தீய, நல்ல.
29. அவை (வை என முடியும் பன்மைப் பெயர்கள்:) இவை, உவை, எவை.
30. எல்லாம் (அற்றுச் சாரியைக்குப் பின் உருபு ஏறி கடைசியில், உம் பெற்று வருவன:) யாவும், எவையும், பலவும், சிலவும்.
31. எல்லாரும் (கடைசியில் உம் எனும் முற்றும்மை மாத்திரம் பெற்று வருவன:) யாவரும், பலரும், சிலரும்.

பாடம் 36.

27 வினைமுற்றுக்கள்.

இப்பாடத்தில் **கட, தா, படி** முதலிய 34 வினைப்பகுதிகள் 27 வினைமுற்றுக்களாக மாறும் விதத்தைக் காட்டியுள்ளோம். இந்த 34 வினைப்பகுதிகள் ஒவ்வொன்றும் 27 வினைமுற்றுக்களாக மாறும்விதத்தை நன்கு தெரிந்துகொண்டுவிட்டால், எந்த வினைப்பகுதியையும் 27 வினைமுற்றுக்களாகச் சொல்லவும், எழுதவும் எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

இம்மாதிரி ஈற்றெழுத்தைக் கவனித்து வசன நடை முறைக்கு வேண்டிய வினைச் சொற்களை 34 விதமான உதாரண வாய்பாடுகளில் 27 வினைமுற்றுக்களாக அடக்கிக் காட்டியிருப்பதொன்றும் இப்புத்தகத்திற்குத் தனிப்பெருஞ் சிறப்பைத் தருவதாகும்.

கீழ்வருவனவற்றை வரிக்கு மும்மூன்று சொற்களாக வரிவரியாக மனப்பாடம்செய்க; பிறகு பார்த்தும் பார்க்காமலும் எழுதுக:

பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர்காலம்
1. கட	கடந்தேன்	கடக்கிறேன்	கடப்பேன்
	கடந்தோம்	கடக்கிறோம்	கடப்போம்
	கடந்தாய்	கடக்கிறாய்	கடப்பாய்
	கடந்தீர்கள்	கடக்கிறீர்கள்	கடப்பீர்கள்
	கடந்தான்	கடக்கிறான்	கடப்பான்
	கடந்தாள்	கடக்கிறாள்	கடப்பாள்
	கடந்தார்கள்	கடக்கிறார்கள்	கடப்பார்கள்
	கடந்தது	கடக்கிறது	கடக்கும்
	கடந்தன	கடக்கின்றன	கடக்கும்
2. தா	தந்தேன்	தருகிறேன்	தருவேன்
	தந்தோம்	தருகிறோம்	தருவோம்
	தந்தாய்	தருகிறாய்	தருவாய்
	தந்தீர்கள்	தருகிறீர்கள்	தருவீர்கள்
	தந்தான்	தருகிறான்	தருவான்
	தந்தாள்	தருகிறாள்	தருவாள்
	தந்தார்கள்	தருகிறார்கள்	தருவார்கள்
	தந்தது	தருகிறது	தரும்
	தந்தன	தருகின்றன	தரும்

பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர்காலம்
3. படி (வாசி)	படித்தேன்	படிக்கிறேன்	படிப்பேன்
	படித்தோம்	படிக்கிறோம்	படிப்போம்
	படித்தாய்	படிக்கிறாய்	படிப்பாய்
	படித்தீர்கள்	படிக்கிறீர்கள்	படிப்பீர்கள்
	படித்தான்	படிக்கிறான்	படிப்பான்
	படித்தாள்	படிக்கிறாள்	படிப்பாள்
	படித்தார்கள்	படிக்கிறார்கள்	படிப்பார்கள்
	படித்தது	படிக்கிறது	படிக்கும்
	படித்தன	படிக்கின்றன	படிக்கும்
4. படி (ஒம்படி)	படிந்தேன்	படிகிறேன்	படிவேன்
	படிந்தோம்	படிகிறோம்	படிவோம்
	படிந்தாய்	படிகிறாய்	படிவாய்
	படிந்தீர்கள்	படிகிறீர்கள்	படிவீர்கள்
	படிந்தான்	படிகிறான்	படிவான்
	படிந்தாள்	படிகிறாள்	படிவாள்
	படிந்தார்கள்	படிகிறார்கள்	படிவார்கள்
	படிந்தது	படிகிறது	படியும்
	படிந்தன	படிகின்றன	படியும்
5. ஈ	ஈந்தேன்	ஈகிறேன்	ஈவேன்
	ஈந்தோம்	ஈகிறோம்	ஈவோம்
	ஈந்தாய்	ஈகிறாய்	ஈவாய்
	ஈந்தீர்கள்	ஈகிறீர்கள்	ஈவீர்கள்
	ஈந்தான்	ஈகிறான்	ஈவான்
	ஈந்தாள்	ஈகிறாள்	ஈவாள்
	ஈந்தார்கள்	ஈகிறார்கள்	ஈவார்கள்
	ஈந்தது	ஈகிறது	ஈயும்
	ஈந்தன	ஈகின்றன	ஈயும்

பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர்காலம்
6. கெடு (நாசமாக்கு)	கெடுத்தேன்	கெடுக்கிறேன்	கெடுப்பேன்
	கெடுத்தோம்	கெடுக்கிறோம்	கெடுப்போம்
	கெடுத்தாய்	கெடுக்கிறாய்	கெடுப்பாய்
	கெடுத்தீர்கள்	கெடுக்கிறீர்கள்	கெடுப்பீர்கள்
	கெடுத்தான்	கெடுக்கிறான்	கெடுப்பான்
	கெடுத்தாள்	கெடுக்கிறாள்	கெடுப்பாள்
	கெடுத்தார்கள்	கெடுக்கிறார்கள்	கெடுப்பார்கள்
	கெடுத்தது	கெடுக்கிறது	கெடுக்கும்
	கெடுத்தன	கெடுக்கின்றன	கெடுக்கும்
7. கெடு (நாசமாகு)	கெட்டேன்	கெடுகிறேன்	கெடுவேன்
	கெட்டோம்	கெடுகிறோம்	கெடுவோம்
	கெட்டாய்	கெடுகிறாய்	கெடுவாய்
	கெட்டீர்கள்	கெடுகிறீர்கள்	கெடுவீர்கள்
	கெட்டான்	கெடுகிறான்	கெடுவான்
	கெட்டாள்	கெடுகிறாள்	கெடுவாள்
	கெட்டார்கள்	கெடுகிறார்கள்	கெடுவார்கள்
	கெட்டது	கெடுகிறது	கெடும்
	கெட்டன	கெடுகின்றன	கெடும்
8. ஆடு	ஆடினேன்	ஆடுகிறேன்	ஆடுவேன்
	ஆடினோம்	ஆடுகிறோம்	ஆடுவோம்
	ஆடினாய்	ஆடுகிறாய்	ஆடுவாய்
	ஆடினீர்கள்	ஆடுகிறீர்கள்	ஆடுவீர்கள்
	ஆடினான்	ஆடுகிறான்	ஆடுவான்
	ஆடினாள்	ஆடுகிறாள்	ஆடுவாள்
	ஆடினார்கள்	ஆடுகிறார்கள்	ஆடுவார்கள்
	ஆடினது	ஆடுகிறது	ஆடும்
	ஆடின	ஆடுகின்றன	ஆடும்

பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்
9. எழு	எழுந்தேன்	எழுகிறேன்	எழுவேன்
	எழுந்தோம்	எழுகிறோம்	எழுவோம்
	எழுந்தாய்	எழுகிறாய்	எழுவாய்
	எழுந்தீர்கள்	எழுகிறீர்கள்	எழுவீர்கள்
	எழுந்தான்	எழுகிறான்	எழுவான்
	எழுந்தாள்	எழுகிறாள்	எழுவாள்
	எழுந்தார்கள்	எழுகிறார்கள்	எழுவார்கள்
	எழுந்தது	எழுகிறது	எழும்
	எழுந்தன	எழுகின்றன.	எழும்
10. தொழு	தொழுதேன்	தொழுகிறேன்	தொழுவேன்
	தொழுதோம்	தொழுகிறோம்	தொழுவோம்
	தொழுதாய்	தொழுகிறாய்	தொழுவாய்
	தொழுதீர்கள்	தொழுகிறீர்கள்	தொழுவீர்கள்
	தொழுதான்	தொழுகிறான்	தொழுவான்
	தொழுதாள்	தொழுகிறாள்	தொழுவாள்
	தொழுதார்கள்	தொழுகிறார்கள்	தொழுவார்கள்
	தொழுதது	தொழுகிறது	தொழும்
	தொழுதன	தொழுகின்றன	தொழும்
11. பூ (உண்டாகு)	பூத்தேன்	பூக்கிறேன்	பூப்பேன்
	பூத்தோம்	பூக்கிறோம்	பூப்போம்
	பூத்தாய்	பூக்கிறாய்	பூப்பாய்
	பூத்தீர்கள்	பூக்கிறீர்கள்	பூப்பீர்கள்
	பூத்தான்	பூக்கிறான்	பூப்பான்
	பூத்தாள்	பூக்கிறாள்	பூப்பாள்
	பூத்தார்கள்	பூக்கிறார்கள்	பூப்பார்கள்
	பூத்தது	பூக்கிறது	பூக்கும்
	பூத்தன	பூக்கின்றன	பூக்கும்

பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர்காலம்
12. வே	வெந்தேன்	வேகிறேன்	வேவேன்
	வெந்தோம்	வேகிறோம்	வேவோம்
	வெந்தாய்	வேகிறாய்	வேவாய்
	வெந்தீர்கள்	வேகிறீர்கள்	வேவீர்கள்
	வெந்தான்	வேகிறான்	வேவான்
	வெந்தாள்	வேகிறாள்	வேவாள்
	வெந்தார்கள்	வேகிறார்கள்	வேவார்கள்
	வெந்தது	வேகிறது	வேகும்
	வெந்தன	வேகின்றன	வேகும்
13. வை (வைத்திடு)	வைத்தேன்	வைக்கிறேன்	வைப்பேன்
	வைத்தோம்	வைக்கிறோம்	வைப்போம்
	வைத்தாய்	வைக்கிறாய்	வைப்பாய்
	வைத்தீர்கள்	வைக்கிறீர்கள்	வைப்பீர்கள்
	வைத்தான்	வைக்கிறான்	வைப்பான்
	வைத்தாள்	வைக்கிறாள்	வைப்பாள்
	வைத்தார்கள்	வைக்கிறார்கள்	வைப்பார்கள்
	வைத்தது	வைக்கிறது	வைக்கும்
	வைத்தன	வைக்கின்றன	வைக்கும்
14. வை (நிந்தி)	வைதேன்	வைகிறேன்	வைவேன்
	வைதோம்	வைகிறோம்	வைவோம்
	வைதாய்	வைகிறாய்	வைவாய்
	வைதீர்கள்	வைகிறீர்கள்	வைவீர்கள்
	வைதான்	வைகிறான்	வைவான்
	வைதாள்	வைகிறாள்	வைவாள்
	வைதார்கள்	வைகிறார்கள்	வைவார்கள்
	வைதது	வைகிறது	வையும்
	வைதன	வைகின்றன	வையும்

பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர்காலம்
15. வரை	வரைந்தேன்	வரைகிறேன்	வரைவேன்
	வரைந்தோம்	வரைகிறோம்	வரைவோம்
	வரைந்தாய்	வரைகிறாய்	வரைவாய்
	வரைந்தீர்கள்	வரைகிறீர்கள்	வரைவீர்கள்
	வரைந்தான்	வரைகிறான்	வரைவான்
	வரைந்தாள்	வரைகிறாள்	வரைவாள்
	வரைந்தார்கள்	வரைகிறார்கள்	வரைவார்கள்
	வரைந்தது	வரைகிறது	வரையும்
	வரைந்தன	வரைகின்றன	வரையும்
16. மோ	மோந்தேன்	மோக்கிறேன்	மோப்பேன்
	மோந்தோம்	மோக்கிறோம்	மோப்போம்
	மோந்தாய்	மோக்கிறாய்	மோப்பாய்
	மோந்தீர்கள்	மோக்கிறீர்கள்	மோப்பீர்கள்
	மோந்தான்	மோக்கிறான்	மோப்பான்
	மோந்தாள்	மோக்கிறாள்	மோப்பாள்
	மோந்தார்கள்	மோக்கிறார்கள்	மோப்பார்கள்
	மோந்தது	மோக்கிறது	மோக்கும்
	மோந்தன	மோக்கின்றன	மோக்கும்
17. கௌ	கௌவினேன்	கௌவுகிறேன்	கௌவுவேன்
	கௌவினோம்	கௌவுகிறோம்	கௌவுவோம்
	கௌவினாய்	கௌவுகிறாய்	கௌவுவாய்
	கௌவினீர்கள்	கௌவுகிறீர்கள்	கௌவுவீர்கள்
	கௌவினான்	கௌவுகிறான்	கௌவுவான்
	கௌவினாள்	கௌவுகிறாள்	கௌவுவாள்
	கௌவினார்கள்	கௌவுகிறார்கள்	கௌவுவார்கள்
	கௌவினது	கௌவுகிறது	கௌவும்
	கௌவின	கௌவுகின்றன	கௌவும்

பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர்காலம்
18. உண்	உண்டேன் உண்டோம் உண்டாய் உண்டீர்கள் உண்டான் உண்டாள் உண்டார்கள் உண்டது உண்டன	உண்கிறேன் உண்கிறோம் உண்கிறாய் உண்கிறீர்கள் உண்கிறான் உண்கிறாள் உண்கிறார்கள் உண்கிறது உண்கின்றன	உண்பேன் உண்போம் உண்பாய் உண்பீர்கள் உண்பான் உண்பாள் உண்பார்கள் உண்ணும் உண்ணும்
19. எண்	எண்ணினேன் எண்ணினோம் எண்ணினாய் எண்ணினீர்கள் எண்ணினான் எண்ணினாள் எண்ணினார்கள் எண்ணினது எண்ணின	எண்ணுகிறேன் எண்ணுகிறோம் எண்ணுகிறாய் எண்ணுகிறீர்கள் எண்ணுகிறான் எண்ணுகிறாள் எண்ணுகிறார்கள் எண்ணுகிறது எண்ணுகின்றன	எண்ணுவேன் எண்ணுவோம் எண்ணுவாய் எண்ணுவீர்கள் எண்ணுவான் எண்ணுவாள் எண்ணுவார்கள் எண்ணும் எண்ணும்
20. செய்	செய்தேன் செய்தோம் செய்தாய் செய்தீர்கள் செய்தான் செய்தாள் செய்தார்கள் செய்தது செய்தன	செய்கிறேன் செய்கிறோம் செய்கிறாய் செய்கிறீர்கள் செய்கிறான் செய்கிறாள் செய்கிறார்கள் செய்கிறது செய்கின்றன	செய்வேன் செய்வோம் செய்வாய் செய்வீர்கள் செய்வான் செய்வாள் செய்வார்கள் செய்யும் செய்யும்

பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர் காலம்
21. சாய் (சாய்த்திடு)	சாய்த்தேன் சாய்த்தோம் சாய்த்தாய் சாய்த்தீர்கள் சாய்த்தான் சாய்த்தாள் சாய்த்தார்கள் சாய்த்தது சாய்த்தன	சாய்க்கிறேன் சாய்க்கிறோம் சாய்க்கிறாய் சாய்க்கிறீர்கள் சாய்க்கிறான் சாய்க்கிறாள் சாய்க்கிறார்கள் சாய்க்கிறது சாய்க்கின்றன	சாய்ப்பேன் சாய்ப்போம் சாய்ப்பாய் சாய்ப்பீர்கள் சாய்ப்பான் சாய்ப்பாள் சாய்ப்பார்கள் சாய்க்கும் சாய்க்கும்
22. சாய் (சாய்ந்திடு)	சாய்ந்தேன் சாய்ந்தோம் சாய்ந்தாய் சாய்ந்தீர்கள் சாய்ந்தான் சாய்ந்தாள் சாய்ந்தார்கள் சாய்ந்தது சாய்ந்தன	சாய்கிறேன் சாய்கிறோம் சாய்கிறாய் சாய்கிறீர்கள் சாய்கிறான் சாய்கிறாள் சாய்கிறார்கள் சாய்கிறது சாய்கின்றன	சாய்வேன் சாய்வோம் சாய்வாய் சாய்வீர்கள் சாய்வான் சாய்வாள் சாய்வார்கள் சாயும் சாயும்
23. சேர் (சேர்த்திடு)	சேர்த்தேன் சேர்த்தோம் சேர்த்தாய் சேர்த்தீர்கள் சேர்த்தான் சேர்த்தாள் சேர்த்தார்கள் சேர்த்தது சேர்த்தன	சேர்க்கிறேன் சேர்க்கிறோம் சேர்க்கிறாய் சேர்க்கிறீர்கள் சேர்க்கிறான் சேர்க்கிறாள் சேர்க்கிறார்கள் சேர்க்கிறது சேர்க்கின்றன	சேர்ப்பேன் சேர்ப்போம் சேர்ப்பாய் சேர்ப்பீர்கள் சேர்ப்பான் சேர்ப்பாள் சேர்ப்பார்கள் சேர்க்கும் சேர்க்கும்

பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர்காலம்
24. சேர் (சேர்ந்திடு)	சேர்ந்தேன் சேர்ந்தோம் சேர்ந்தாய் சேர்ந்தீர்கள் சேர்ந்தான் சேர்ந்தாள் சேர்ந்தார்கள் சேர்ந்தது சேர்ந்தன	சேர்கிறேன் சேர்கிறோம் சேர்கிறாய் சேர்கிறீர்கள் சேர்கிறான் சேர்கிறாள் சேர்கிறார்கள் சேர்கிறது சேர்கின்றன	சேர்வேன் சேர்வோம் சேர்வாய் சேர்வீர்கள் சேர்வான் சேர்வாள் சேர்வார்கள் சேரும் சேரும்
25. கொல்	கொன்றேன் கொன்றோம் கொன்றாய் கொன்றீர்கள் கொன்றான் கொன்றாள் கொன்றார்கள் கொன்றது கொன்றன	கொல்கிறேன் கொல்கிறோம் கொல்கிறாய் கொல்கிறீர்கள் கொல்கிறான் கொல்கிறாள் கொல்கிறார்கள் கொல்கிறது கொல்கின்றன	கொல்வேன் கொல்வோம் கொல்வாய் கொல்வீர்கள் கொல்வான் கொல்வாள் கொல்வார்கள் கொல்லும் கொல்லும்
26. கல் (படி)	கற்றேன் கற்றோம் கற்றாய் கற்றீர்கள் கற்றான் கற்றாள் கற்றார்கள் கற்றது கற்றன	கற்கிறேன் கற்கிறோம் கற்கிறாய் கற்கிறீர்கள் கற்கிறான் கற்கிறாள் கற்கிறார்கள் கற்கிறது கற்கின்றன	கற்பேன் கற்போம் கற்பாய் கற்பீர்கள் கற்பான் கற்பாள் கற்பார்கள் கற்கும் கற்கும்

பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர்காலம்
27. சொல்	சொன்னேன் சொன்னோம் சொன்னாய் சொன்னீர்கள் சொன்னான் சொன்னாள் சொன்னார்கள் சொன்னது சொல்லின	சொல்கிறேன் சொல்கிறோம் சொல்கிறாய் சொல்கிறீர்கள் சொல்கிறான் சொல்கிறாள் சொல்கிறார்கள் சொல்கிறது சொல்கின்றன	சொல்வேன் சொல்வோம் சொல்வாய் சொல்வீர்கள் சொல்வான் சொல்வாள் சொல்வார்கள் சொல்லும் சொல்லும்
28. புல் (தழுவு)	புல்லினேன் புல்லினோம் புல்லினாய் புல்லினீர்கள் புல்லினான் புல்லினாள் புல்லினார்கள் புல்லினது புல்லின	புல்லுகிறேன் புல்லுகிறோம் புல்லுகிறாய் புல்லுகிறீர்கள் புல்லுகிறான் புல்லுகிறாள் புல்லுகிறார்கள் புல்லுகிறது புல்லுகின்றன	புல்லுவேன் புல்லுவோம் புல்லுவாய் புல்லுவீர்கள் புல்லுவான் புல்லுவாள் புல்லுவார்கள் புல்லும் புல்லும்
29. ஆழ்	ஆழ்ந்தேன் ஆழ்ந்தோம் ஆழ்ந்தாய் ஆழ்ந்தீர்கள் ஆழ்ந்தான் ஆழ்ந்தாள் ஆழ்ந்தார்கள் ஆழ்ந்தது ஆழ்ந்தன	ஆழ்கிறேன் ஆழ்கிறோம் ஆழ்கிறாய் ஆழ்கிறீர்கள் ஆழ்கிறான் ஆழ்கிறாள் ஆழ்கிறார்கள் ஆழ்கிறது ஆழ்கின்றன	ஆழ்வேன் ஆழ்வோம் ஆழ்வாய் ஆழ்வீர்கள் ஆழ்வான் ஆழ்வாள் ஆழ்வார்கள் ஆழும் ஆழும்

பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர்காலம்
30. ஆள்	ஆண்டேன்	ஆள்கிறேன்	ஆள்வேன்
	ஆண்டோம்	ஆள்கிறோம்	ஆள்வோம்
	ஆண்டாய்	ஆள்கிறாய்	ஆள்வாய்
	ஆண்டீர்கள்	ஆள்கிறீர்கள்	ஆள்வீர்கள்
	ஆண்டான்	ஆள்கிறான்	ஆள்வான்
	ஆண்டாள்	ஆள்கிறாள்	ஆள்வாள்
	ஆண்டார்கள்	ஆள்கிறார்கள்	ஆள்வார்கள்
	ஆண்டது	ஆள்கிறது	ஆளும்
	ஆண்டன	ஆள்கின்றன	ஆளும்
31. கேள்	கேட்டேன்	கேட்கிறேன்	கேட்பேன்
	கேட்டோம்	கேட்கிறோம்	கேட்போம்
	கேட்டாய்	கேட்கிறாய்	கேட்பாய்
	கேட்டீர்கள்	கேட்கிறீர்கள்	கேட்பீர்கள்
	கேட்டான்	கேட்கிறான்	கேட்பான்
	கேட்டாள்	கேட்கிறாள்	கேட்பாள்
	கேட்டார்கள்	கேட்கிறார்கள்	கேட்பார்கள்
	கேட்டது	கேட்கிறது	கேட்கும்
	கேட்டன	கேட்கின்றன	கேட்கும்
32. தள் (தள்ளு)	தள்ளினேன்	தள்ளுகிறேன்	தள்ளுவேன்
	தள்ளினோம்	தள்ளுகிறோம்	தள்ளுவோம்
	தள்ளினாய்	தள்ளுகிறாய்	தள்ளுவாய்
	தள்ளினீர்கள்	தள்ளுகிறீர்கள்	தள்ளுவீர்கள்
	தள்ளினான்	தள்ளுகிறான்	தள்ளுவான்
	தள்ளினாள்	தள்ளுகிறாள்	தள்ளுவாள்
	தள்ளினார்கள்	தள்ளுகிறார்கள்	தள்ளுவார்கள்
	தள்ளினது	தள்ளுகிறது	தள்ளும்
	தள்ளின	தள்ளுகின்றன	தள்ளும்

பகுதி	இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர்காலம்
33. தின்	தின்றேன்	தின்கிறேன்	தின்பேன்
	தின்றோம்	தின்கிறோம்	தின்போம்
	தின்றாய்	தின்கிறாய்	தின்பாய்
	தின்றீர்கள்	தின்கிறீர்கள்	தின்பீர்கள்
	தின்றான்	தின்கிறான்	தின்பான்
	தின்றாள்	தின்கிறாள்	தின்பாள்
	தின்றார்கள்	தின்கிறார்கள்	தின்பார்கள்
	தின்றது	தின்கிறது	தின்னும்
	தின்றன	தின்கின்றன	தின்னும்
34. பின் (பின்னு)	பின்னினேன்	பின்னுகிறேன்	பின்னுவேன்
	பின்னினோம்	பின்னுகிறோம்	பின்னுவோம்
	பின்னினாய்	பின்னுகிறாய்	பின்னுவாய்
	பின்னினீர்கள்	பின்னுகிறீர்கள்	பின்னுவீர்கள்
	பின்னினான்	பின்னுகிறான்	பின்னுவான்
	பின்னினாள்	பின்னுகிறாள்	பின்னுவாள்
	பின்னினார்கள்	பின்னுகிறார்கள்	பின்னுவார்கள்
	பின்னினது	பின்னுகிறது	பின்னும்
	பின்னின	பின்னுகின்றன	பின்னும்

பயிற்சி

கீழ்க்கண்ட வினைப்பகுதிகளுக்கு 27 வினைமுற்றுக்கள் சொல்லுக, எழுதுக:—

1. கட, முக, நட, மண, மித, சும, விய, கர, கல, இழ, பிள, திற.
2. தா, வா, ஏமா.
3. படி, அடி, கடி, தவி, மதி, பிடி, குடி, கணி, திணி, மிதி, குதி, சாதி.
4. படி, அணி, பணி, குனி, முனி, கனி, மலி, நலி, கசி, பொசி, அறி, எறி.
5. ஈ, தீ, மீ, வீ.
6. கெடு, எடு, கொடு, தடு, பரு, கொழு, பழு, புழு, இழு, வெளு, அறு.
7. கெடு, இடு, சுடு, நடு, உறு, பெறு, அறு, படு, தொழு, தொடு, போடு.
8. ஆடு, ஓடு, கூடு, பாடு, விளையாடு, வாதாடு, போராடு, தேடு, நாடு.
9. எழு, விழு, புகு, மிகு, தகு, அறு.
10. தொழு, உழு, அழு.
11. பூ, தூ, மூ, கா, கோ, சீ, நீ.
12. வே, நோ.
13. வை, படை, தை, பகை, விதை, பிழை, அழை, உழை, கிளை, இளை, இழை.
14. வை, மை, பை.
15. வரை, நை, குடை, அடை, முடை, கடை, புனை, வனை, விரை.
16. மோ.
17. கௌ, தௌ, வௌ.
18. உண், பூண், மாண்.

19. எண், மண், பண், நண்.
20. செய், நெய், பெய், எய், உய், கொய்.
21. சாய், வாய், ஏய், காய், மாய், தேய், மேய், தோய், தீய்
22. சாய், ஆய், பாய், காய் (வெய்யிலில் காய்), மாய்.
23. சேர், வேர், பேர்.
24. சேர், நேர், தேர்.
25. கொல், செல், நில், மெல், வெல், புகல், அகல், பயில், நவில், துயில்.
26. கல், வில், தோல், நூல், ஏல்.
27. சொல்.
28. புல், கல் (தோண்டு), கோல் (அடிகோல்).
29. ஆழ், வாழ், தாழ், வீழ், சூழ், இகழ், புகழ், திகழ், மகிழ், நிகழ்.
30. ஆள், கொள், நீள், மாள், மீள், மூள், வெருள், புரள் உருள், துவள்.
31. கேள், வேள், தெவிள்.
32. தள், அள், உள், எள், துள், கிள், தெள், அருள் (கிருபை செய்)
33. தின், ஈன், என் (என்று சொல்லு).
34. பின், உன் (நினை), கன், கூன், துன் (நெருங்கு), மின் பன் (சொல்லு).

பாடம் 37.

எழுவாய், பயனிலை, செயப்படுபொருள்.

ஒரு வினையை அதாவது ஒரு தொழிலைச் செய்யும் கருத்தாவே **'எழுவாய்'** எனப்படும். அது ஒரு வாக்கியத்தில் எவ்வித மான மாறுதலும் அடையாத பெயர்ச்சொல்லாக இருக்கும். அந்த வாக்கியத்திலுள்ள வினைமுற்றைக் கொண்டு அத் தொழிலைச் செய்த கருத்தா மனிதரா அல்லது மனிதரல்லாத மற்றதா என்பதை எளிதில் தெரிந்து கொள்ளலாம். வினைமுற்று மனிதரைக் குறிக்கக் கூடியதாக இருந்தால், **'எவன் அல்லது யார்'** என்றும்; வினைமுற்று மனிதரல்லாத மற்றவற்றைக் குறிப்பதாக இருந்தால், **'எது அல்லது எவை?'** என்றும் கேள்விகள் கேட்க வேண்டும். கேள்விகளுக்குக் கிடைக்கும் விடையே 'எழுவாய்' எனப்படும். ஏவல் வினைமுற்றுள்ள வாக்கியத்தில் 'நீ' அல்லது 'நீங்கள்' என்பது தொக்கிநிற்கும்போது அது **'தோன்றா எழுவாய்'** எனப்படும். இதனைப்பற்றிய முழு விவரங்களை 39 ஆம் பாடத்தின் கடைசியிலும் பார்க்க.

எழுவாய் அல்லது கருத்தா செய்யும் தொழில் எதன்மேல் சார்கிறதோ, அது **'செயப்படுபொருள்'** எனப்படும். **'யாரை அல்லது எவனை?'; 'எதை அல்லது எவைகளை?'** என்னும் கேள்விகளைக் கேட்டால் கிடைக்கும் விடையே செயப்படுபொருளாம். எழுவாய் செய்யும் தொழிலை அறிவிப்பதே **'பயனிலை'** எனப்படும். அது பெரும்பாலும் வினைமுற்றாகவே யிருக்கும். பயனிலை யில்லையேல், வாக்கியமே யில்லை; வாக்கியமும் ஆகாது.

எழுவாய்.

(உதாரணம்)

"இராமன் கங்கையைக் கடந்தான்".

இதில் கடத்தலாகிய தொழிலைச் செய்தவன் இராமன். அவனே அத்தொழிலைச் செய்த கருத்தா என அழைக்கப் படுபவன். ஆதலின் 'கடந்தான்' என்னும் வினைமுற்றை வைத்துக்கொண்டு, 'எவன் கடந்தான்?' அல்லது 'யார் கடந்தார்?' என்னும் கேள்விகளைக் கேட்டால் கிடைக்கும் விடை 'இராமன்' என்பதாகும். எனவே 'இராமன்' என்பது **எழுவாய்.**

'இங்கே வா; இங்கே வாரும்; இங்கே வாருங்கள்' — என்னும் வாக்கியங்களில் முறையே, 'நீ, நீர், நீங்கள்' என்பவை 'தோன்றா எழுவாய்' எனப்படும்.

பயிற்சி.

கீழ்க்கண்ட ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள எழுவாயை எடுத்து எழுதுக:—

1. **தாத்தா பணம் தந்தார்.**
2. **பரதன் பாடம் படித்தான்.**
3. **கந்தன் கடவுளைத் தொழுதான்.**
4. **வேணு வீணை வாசித்தான்.**
5. **பஞ்சு படம் வரைந்தான்.**
6. **இதைப் படி.**
7. **அதைக் கொடுங்கள்.**

செயப்படுபொருள்.

மேற்கூறப்பட்டுள்ள 'இராமன் கங்கையைக் கடந்தான்' என்னும் வாக்கியத்திலுள்ள 'கடந்தான்' என்னும் வினைமுற்றை வைத்துக்கொண்டு 'எதைக் கடந்தான்?' என்னும் கேள்வியைக் கேட்டால் கிடைக்கும் விடை 'கங்கையை' என்பதாகும். எனவே இவ்வாக்கியத்தில் 'கங்கையை' என்பது **'செயப்படு பொருள்'.**

இவ்வாறே மேற்காணப்படும் பயிற்சியிற் கொடுக்கப்பட்டுள்ள 'தந்தார்'. 'படித்தான்', 'தொழுதான்', 'வாசித்தான்', 'வரைந்தான்', 'படி', 'கொடுங்கள்' என்னும் வினைமுற்றுக்களைத் தனித்தனியே எடுத்துக்கொண்டு அதற்குரிய கேள்வியைக் கேட்டால், முறையே கிடைக்கும் விடையே அதற்குரிய செயப்படு பொருளாம் எனக் கொள்க.

பயனிலை.

மேற்கூறப்பட்டுள்ள 'இராமன் கங்கையைக் கடந்தான்' என்னும் வாக்கியத்தில் இராமனாகிய எழுவாய் அதாவது கருத்தா செய்யும் தொழிலை உணர்த்துவதே 'கடந்தான்' என்னும் சொல். எனவே 'கடந்தான்' என்பது **பயனிலை.**

இவ்வாறே மேற்காணப்படும் பயிற்சியிற் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு **வினைமுற்றும்** அதைக்கொண்டுவந்துள்ள வாக்கியத்தின் பயனிலையாம் எனக்கொள்க.

பயிற்சி

கீழ்க்கண்ட ஒவ்வொரு வாக்கியத்திலுமுள்ள **எழுவாய்' பயனிலை, செயப்படுபொருள்** ஆகியவற்றை முறையே எடுத்து எழுதுக:—

1. **கம்பர் கவிகள் பாடினர்.**
2. **காளிதாசர் நாடகங்கள் எழுதினர்.**
3. **வள்ளுவர் குறளை இயற்றினர்.**
4. **தேவர்கள் பூமாரி பொழிந்தனர்.**
5. **இசைவாணர்கள் இசை இசைத்தனர்.**
6. **வேதியர் வேதம் ஓதினர்.**
7. **பாடம் படித்தாயா?**
8. **எதனை எடுத்தீர்கள்?**
9. **புத்தகம் வாங்கினீர்களா?**

II

மேலே கூறப்பட்ட பாடத்தில் வினைமுற்றே பயனிலை என்றும்; அது ஒரு கருத்தா செய்யும் தொழிலாக இருக்குமென்றும் படித்தோம்.

அவ்வாறின்றி பெயர்ச்சொல்லே பயனிலையாக வருதலும் உண்டு. இப்படிவரும் பெயர்ச்சொல்லை இலக்கணத்தில் **"பெயர்ப் பயனிலை"** என்பார்கள்.

உதாரணம்:

1. **அவன் இராமன்.**
2. **இவள் சீதை.**
3. **கமலா பெரியவள்.**
4. **கலியாணி சிறியவள்.**
5. **காந்தி உத்தமர்.**
6. **காந்தியைக் கொன்ற கோட்சே அற்பன்.**

மேற்கூறப்பட்டுள்ள வாக்கியங்களில் முறையே காணப்படும் 'இராமன்', 'சீதை', 'பெரியவள்', 'சிறியவள்', 'உத்தமர்',

'அற்பன்' என்னும் பெயர்ச் சொற்கள் பயனிலைகளாக வந்து தமக்கு முந்தியுள்ள 'அவன்', 'இவள்', 'கமலா', 'கலியாணி', 'காந்தி', 'கோட்சே' என்னும் பெயர்ச் சொற்களை முறையே எழுவாய்களாகக் கொண்டு முடிந்திருத்தல் காண்க.

எவ்வாறெனில், 'அவன் இராமன்' என்னும் முதல் வாக்கியத்தில் 'அவன்' என்பது எழுவாய்; 'இராமன' என்பது பயனிலை. அதாவது 'அவன் இராமனுயிருக்கிறுன்' எனப் பொருள் தந்து நிற்கிறது. இவ்வாறே மற்ற வாக்கியங்களையும் விரித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்.

III

மேற்கூறப்பட்டுள்ள பாடங்களிலிருந்து எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் என்பவைகளைப் பற்றியும், பெயர்ப் பயனிலை என்பதைப் பற்றியும் விரிவாகத் தெரிந்துகொண்டோம்.

சில வினைச் சொற்களுக்கு செயப்படுபொருள் இல்லை.

உதாரணம்:

முருகன் வந்தான்

இதில் **'முருகன்'** என்பது **எழுவாய்.** 'வந்தான்' என்பது **பயனிலை.** செயப்படுபொருள் கிடையாது. 'எதைவந்தான்?' எனக் கேள்வி கேட்க முடியாது.

இவ்வாறு செயப்படுபொருள் ஏற்காமல் வரும் வினைச்சொல்லிற்கு 'செயப்படுபொருள் குறைந்த வினை' என்றும்; செயப்படுபொருள் ஏற்று வரும் வினைச்சொல்லிற்கு 'செயப்படுபொருள் குறையாத வினை' என்றும் பெயர். இவற்றை இலக்கணத்தில் முறையே செயப்படுபொருள் **குன்றியவினை** என்றும்; செயப்படு பொருள் **குன்றுவினை** என்றும் கூறுவார்கள்.

IV

வினைமுற்றுக்கள்.

வினைமுற்றுக்களை மட்டும் வைத்துக்கொண்டு அவைகளுக்குரிய எழுவாய், பயனிலை முதலியவற்றைக் கண்டுகொள்ளும் விதம்:—

படித்தேன்.

இவ் வினைமுற்றானது ஒரு கருத்தாவின் படித்தலாகிய தொழிலைக் காட்டுகின்றது. ஆதலின், இது பயனிலை எனப்படும்.

ஆனால் அத்தொழிலைச் செய்த **கருத்தா** யார் என்பது **வெளிப்படையாகத் தோன்றவில்லை.** ஆதலால் அதனைத் தோற்றுவிக்க வேண்டியதிருக்கிறது.

எனவே இவ் வினைமுற்றை வைத்துக்கொண்டு 'யார் படித்தது?' என்னும் கேள்வியைக் கேட்டால் கிடைக்கும் விடை 'நான்' என்பதாகும். ஆகவே 'நான்' என்பதே எழுவாய்.

இங்கு எழுவாய் வெளிப்படையாகத் தோன்றாமல், மறைந்து நிற்பதால் அதாவது தொக்கி நிற்பதால், இதற்கு **'தோன்றா எழுவாய்'** என்று பெயர். இவ்வாறே இவ்வினைமுற்றை முக்காலங்களிலும் வைத்துக் கூறவேண்டும்.

"கட" என்ற வினைப் பகுதியை ஒவ்வொரு காலத்திலும் ஒன்பது வகை வினைமுற்றுக்களாக்கி, வகைக்கு ஒரு எழுவாயாக ஒவ்வொன்றையும் மூன்று காலங்களிலும் வைத்துக் கூறினால், ($3 \times 9 = 27$) இருபத்தேழு சிறு வாக்கியங்களாக கீழ்க்கண்டவாறு அமையும்:—

இறந்த காலம்	நிகழ் காலம்	எதிர்காலம்
நான் கடந்தேன்	நான்கடக்கிறேன்	நான் கடப்பேன்
நாம் கடந்தோம்	நாம் கடக்கிறோம்	நாம் கடப்போம்
நீ கடந்தாய்	நீ கடக்கிறாய்	நீ கடப்பாய்
நீங்கள் கடந்தீர்கள்	நீங்கள்கடக்கிறீர்கள்	நீங்கள் கடப்பீர்கள்
அவன் கடந்தான்	அவன் கடக்கிறான்	அவன் கடப்பான்
அவள் கடந்தாள்	அவள் கடக்கிறாள்	அவள் கடப்பாள்
அவர்கள் கடந்தார்கள்	அவர்கள் கடக்கிறார்கள்	அவர்கள் கடப்பார்கள்
அது கடந்தது	அது கடக்கிறது	அது கடக்கும்
அவை கடந்தன	அவை கடக்கின்றன	அவை கடக்கும்

இவ்வாறு எந்த வினைப்பகுதியை யெடுத்துக் கொண்டாலும் சரியே. அதை தன்மையொருமை, தன்மைப்பன்மை; முன்னிலையொருமை, முன்னிலைப்பன்மை; ஆண்பால், பெண்பால், பலர்பால், ஒன்றன்பால், பலவின்பால் ஆகிய ஒன்பது வகைப் பெயர்ச் சொற்களிலும் ஒவ்வொரு எழுவாயோடும் தனித் தனியே முக்காலங்களிலும் வைத்து, இருபத்தேழு சிறு வாக்கியங்களாகக் கூறிவிடலாம்.

பயிற்சி

கீழ்க்கண்ட வினைப் பகுதிகளில் ஒவ்வொன்றையும் இருபத்தேழு வினைமுற்றுக்களாக்கி, எழுவாய் சேர்த்து, இருபத்தேழு சிறு வாக்கியங்களில் அமைத்துக் கூறுக:—

கட, தா, படி, படி (கீழ்ப்படி), ஈ, கெடு, பூ, வே, வை, மோ, தௌ, உண், செய், சேர், கொல், ஆழ், ஆள், தின், கெடு (நாசமாகு), ஆடு, எழு, தொழு, வரை, எண், கல், கேள், தள்.

பாடம் 38.

வினைமுற்றைக்கொண்ட விரிவான வாக்கியங்கள்.

I

ஒரு வினைமுற்றை எடுத்துக்கொண்டு அதனைக் குறிக்கும் பல கேள்விகளைக் கேட்டால், அவைகளுக்குத் தகுந்த பல விடைகளைக் காணலாம். இறுதியில் இவைகள் எல்லாவற்றையும் தொகுத்த நீண்ட பெரிய வாக்கியமாக அமைக்கலாம். இவ்வாறு வினைமுற்றைக்கொண்டே சிறு சிறு வாக்கியங்களையும், அவற்றைக்கொண்டு பெரிய வாக்கியத்தையும் அமைக்க இயலும்.

(உதாரணமாக)

"போனான்"

இது ஒரு வினைமுற்று. இதை வைத்துக்கொண்டு கீழ்க்கண்டவாறு கேள்விகள் கேட்டு விடைகள் கூறலாம்:—

1. எங்கே போனான்? — ஒரு இடத்திற்குப் போனான்.
பள்ளிக்கூடத்திற்குப் போனான்.
மதுரைக்குப் போனான்
காட்டிற்குப் போனான்.
ஆற்றுக்குப் போனான்.
வயலுக்குப் போனான்.
நன்செய்க்குப் போனான்.
புன்செய்க்குப் போனான்.
தோட்டத்திற்குப் போனான்.
கிணற்றுக்குப் போனான்.

கடைக்குப் போனான்.
சந்தைக்குப் போனான்.
சாலைநெடுகப் போனான்.
ஊருக்குவெளியே போனான்.

2. எப்படிப் போனான்? வேகமாய்ப் போனான்.
மெதுவாகப் போனான்.
மெல்ல மெல்லப் போனான்.
ஓடிக்கொண்டே போனான்.
ஓட்டத்தில் போனான்.
நடந்து போனான்.
கால்நடையாகப் போனான்.

3. எதில் போனான்? வண்டியில் போனான்.
மாட்டு வண்டியில் போனான்.
குதிரை வண்டியில் போனான்.
துவிச்சக்கர வண்டியில் போனான்.
படகில் போனான்.
விமானத்தில் போனான்.

4. எம்மார்க்கமாய்ப் போனான்? தரைமார்க்கமாய்ப் போனான்.
கடல் மார்க்கமாய்ப் போனான்.
ஆகாயமார்க்கமாய்ப் போனான்.
காட்டுவழியாய்ப் போனான்.
பள்ளத்தாக்கின்வழியாய்ப்போனான்

5. எதற்காகப் போனான்? படிக்கப் போனான்.
பரீட்சை எழுதப் போனான்.
மரம் வெட்டப் போனான்.
குளிக்கப் போனான்.
சாமான்கள் வாங்கப் போனான்.
உழப் போனான்.
உண்டுவரப் போனான்.
ஒருபொருளைக் கண்டுபிடிக்கப் போனான்.
ஒருகாரியம்செய்வதற்குப்போனான்.

6. எப்பொழுது போனான்? இன்றுதான் போனான்.
நேற்றுப் போனான்.
காலையில் போனான்.
மாலையில் போனான்.
பொழுது புலருமுன் போனான்.
பொழுது புலர்ந்தபின் போனான்.
சிலதினங்களுக்குமுன் போனான்.

7. யாருடன் போனான்? தன் தந்தையுடன் போனான்.
தன் தம்பியுடன் போனான்.
தன் சிநேகிதருடன் போனான்.

8. எதனுடன் போனான்? கையில் பெட்டியுடன் போனான்.
பணத்துடன் போனான்.
நகைநட்டுடன் போனான்.

குறிப்பு:– 'சமய சந்தர்ப்பத்திற்குத் தக்கவாறு பற்பல சிறு சிறு வாக்கியங்களைச் சரளமாகக் கூறலாம்; இப் பதில்களையெல்லாம் ஒன்றுசேர்த்து நீண்ட வாக்கியமாக அமைக்கலாம்' என்று முன்பு கூறப்பட்டுள்ளது இங்கு தெளிவாதல் காண்க.

(உதாரணம்)

"அவன் தன்தம்பியுடன் நேற்றுக் காலையில், அந்தப் பாதையின் வழியாக, கால்நடையாக, மிகவேகமாக, கையில் புத்தகக் கட்டுடன், பள்ளிக்கூடத்துக்குப் படிக்கப் போனான்."

II

"படித்தான்"

இதுவும் ஒரு வினைமுற்று. இதை வைத்துக் கொண்டும் கீழ்க்கண்டவாறு கேள்விகள் கேட்டு விடைகள் கூறலாம்:—

[முன் பாடத்திற்கண்ட கேள்விகளுடன் இவைகளையும் கேட்கலாம்.]

1. எதைப் படித்தான்? புத்தகத்தைப் படித்தான்.
கதை படித்தான்.
நாவல் படித்தான்.
பாட்டுப் படித்தான்.
கம்ப ராமாயணம் படித்தான்.
கடிதம் படித்தான்.
பத்திரம் படித்தான்.
வியாசம் படித்தான்.
பாடம் படித்தான்.
சாத்திரம் படித்தான்.
சரித்திரம் படித்தான்.
வேதம் படித்தான்.

2. எப்படிப்பட்டதைப் படித்தான்?

நல்ல புத்தகம் படித்தான்.
இனிய நாவல் படித்தான்.
நீண்ட கதை படித்தான்.
சிறிய நூலைப் படித்தான்.
பெரிய கதை படித்தான்.
இனிய எளிய தெளிய தமிழ்ப்
பாடம் படித்தான்.

3. எப்படிப் படித்தான்?

மெதுவாகப் படித்தான்.
மனத்திற்குள் படித்தான்.
எல்லோருக்கும் விளங்கும்படி
படித்தான்.
இரையாமல் படித்தான்.
எல்லோருக்கும் கேட்கும்படி
படித்தான்.

4. எங்கிருந்து படித்தான்?

தன் வீட்டிலிருந்து படித்தான்.
தன் வீட்டு மாடியிலிருந்து
படித்தான்.
தன் அறையிலிருந்து படித்தான்.
அவையிலுள்ளவர்களுக்கு முன்
னால் அமர்ந்திருந்துபடித்தான்.
ஆசனத்தில் அமர்ந்து படித்தான்.

5. எப்பொழுது படித்தான்?

இன்றுதான் படித்தான்.
நேற்றுப் படித்தான்.
நேற்று இரவில் படித்தான்.
முந்தினநாள் படித்தான்.
ஆண்டுவிழாவின்போது
படித்தான்.
அமைச்சர் வருகையின்போது
படித்தான்.

6. எவ்வாறு படித்தான்?

புத்தகத்தைப் பார்த்துக்கொண்டு
படித்தான்.
மனப்பாடமாகப் படித்தான்.
இனிய குரலோடு படித்தான்.
இசைக்கருவிகளோடு படித்தான்.

எல்லோரும் இரசிக்கும்படி
படித்தான்.
எல்லோருக்கும் இலகுவில்
விளங்கும்படி படித்தான்.
எல்லோரும் கேட்டுப்
பிரமிக்கும்படி படித்தான்.

7. எக்காரணத்தால் படித்தான்?

எல்லோரும் கேட்டுக்கொண்ட
தால் படித்தான்.
எல்லோரும் விரும்பியதால்
படித்தான்.
தனக்கேற்பட்ட கடமையென
எண்ணியதால் படித்தான்.
தனக்கு நல்ல பெயர் கிடைக்க
எண்ணியதால் படித்தான்.
தன்னால் மக்கள் மனம் வருந்தக்
கூடாது என எண்ணியதால்
படித்தான்.
மக்களை மகிழ்விக்கவேண்டுமென
எண்ணியதால் படித்தான்.

குறிப்பு:—மேற்குறிப்பிட்டவாறே இச்சிறுசிறு வாக்கியங்களையெல்லாம் ஒன்றுசேர்த்து நீண்டவாக்கியமாக அமைக்கலாம்.

(உதாரணம்)

"அவன் போனவாரம் புதன்கிழமை, காலை ஏழு மணிக்கு, அந்த அறையில், தன் தம்பிமாருடன், நல்ல அழகான பாட்டுக்களை, இனிமையானகுரலில், மெதுவாக, தெளிவாகப்படித்தான்".

இவ்வாறு எந்த வினைமுற்றை யெடுத்துக்கொண்டாலும் சரியே; அதைக் குறிக்கும் பல கேள்விகள் கேட்டு, கிடைக்கும் விடைகளையெல்லாம் ஒன்றுசேர்த்து விரிவான வாக்கியமாக அமைத்துவிடலாம்.

பாடம் 39.

வேற்றுமையுருபுகள்எல்லாவற்றையுங்கொண்ட வாக்கியங்கள்.

முதல் வேற்றுமை.

ஒரு பொருளின் இயல்பான பெயரே முதல்வேற்றுமையெனப்படும். அதற்கு **எழுவாய் வேற்றுமை** என்றும் பெயர். ஆனால் அதற்கு உருபு இல்லை. அது வினைச்சொல், பெயர்ச்சொல் அல்லது வினாச்சொல்லைக் கொண்டு முடியும்.

உதாரணம்:

1. **முருகன் வந்தான்.**
2. **அது என் வீடு.**
3. **அவர் யார்?**

இரண்டாம் வேற்றுமை.

இரண்டாம் வேற்றுமையின் உருபு **ஐ** என்பதாகும்.

உதாரணம்:

1. **குளத்தை வெட்டினான்.**
2. **கோவிலைக் கட்டினான்.**

மூன்றாம் வேற்றுமை.

மூன்றாம் வேற்றுமையின் உருபுகள் **ஆல், ஆன், ஓடு, ஒடு** என்பவைகள். **கொண்டு, உடன்** என்பவைகள் அதன சொலலுருபுகளாம்.

உதாரணம்:

1. வாளால் **வெட்டினான்.**
2. கத்தியான் **அறுத்தான்.**
3. தாயோடு மகள் **போனாள்.**
4. தந்தையொடு மகன் **வந்தான்.**
5. படைகொண்டு **தாக்கினான்.**
6. **தம்பியுடன் தமயன் வந்தான்.**

நான்காம் வேற்றுமை.

நான்காம் வேற்றுமையின் உருபு **கு** என்பதாகும். **ஆக, பொருட்டு, நிமித்தம்** என்பவைகள் அதன் சொல்லுருபுகளாம்.

உதாரணம்:

1. **பாம்புக்குப் பகை கருடன்.**
2. **வறிஞர்க்குப் பொருளீந்தான் வள்ளல்.**
3. **கூலிக்காக வேலை செய்தான்**
4. **பணத்தின்** பொருட்டுப் **பாடுபட்டான்.**
5. **வயிற்றினிமித்தம் வருந்தி உழைத்தான்.**

ஐந்தாம் வேற்றுமை.

ஐந்தாம் வேற்றுமையின் உருபுகள் **இன், இல்** என்பவைகள். **இலிருந்து, இருந்து, இனின்று, காட்டிலும், பார்க்கிலும்** என்பவைகள் அதன் சொல்லுருபுகளாம். (5ஆம் வேற்றுமை உருபு **இல்**லுக்கும், 7ஆம் வேற்றுமை உருபு **இல்**லுக்கும் வேறுபாடு உண்டு. நீக்கல், எல்லை, ஏது, ஒப்பு, உறழ்வு ஆகிய பொருள்களில் வருவது 5ஆம் வேற்றுமை.)

உதாரணம்:

1. **மலையின் வீழ் அருவி** (= மலையிலிருந்து)
2. மதுரையின் வடக்குச்சிதம்பரம்
3. **காக்கையிற் கரிது களாம்பழம்.** (= காக்கையைப் போல)
4. **கல்வியிற் பெரியவர் கம்பர்** (= கல்வியினால்)
5. **ஊரிலிருந்து வந்தான்.**
6. **இங்கிருந்து சென்றார்கள்.**
7. **ஊரினின்று நீங்கினான்.**
8. **இதைக்** காட்டிலும் **அது நல்லது.**
9. **அவனைப்** பார்க்கிலும் **இவன் சமர்த்தன்.**
10. **அவனில் இவன் சமர்த்தன்.**

ஆறாம் வேற்றுமை.

ஆறாம் வேற்றுமையின் உருபுகள் **அது, ஆது, அ** என்பவைகள். **உடைய** என்பது அதன் சொல்லுருபாம்.

உதாரணம்:

1. எனது வீடு.
2. உனது புத்தகம்.
3. தனது பொருள்.
4. நினது உடை.
5. என வீடுகள்.
6. நின பொருள்கள்.
7. என்னுடைய தாய்.
8. முருகனுடைய அழகு.

ஏழாம் வேற்றுமை.

ஏழாம் வேற்றுமையின் உருபுகள் **இல்** முதலியவைகளாம். **இடத்தில், மேல்** முதலியன அதன் சொல்லுருபுகளாம். (5ஆம் வேற்றுமை உருபு **இல்,** 7ஆம் வேற்றுமை உருபு **இல்** ஆகிய இரண்டிற்கும் வேறுபாடு தெரியவேண்டும். **எங்கே, எப்போது** என்ற கேள்விகளுக்குப் பதில் தருவதுதான் ஏழாம் வேற்றுமை.)

உதாரணம்:

1. மணியில் ஒளி உண்டு.
2. விரலில் மோதிரம் உளது.
3. மலையினிடத்தில் மேகம் உண்டு.
4. அவனிடத்தில் பணம் உண்டு.
5. ஊரின்கண் வீடுகள் உள்ளன.
6. ஆகாயத்தின்கண் பருந்து பறக்கின்றது.
7. கோடையில் மழை பெய்யுமா?

எட்டாம் வேற்றுமை.

எட்டாம் வேற்றுமைக்கு உருபுகள் இல்லை. இதற்கு **'விளி வேற்றுமை'** என்றும் பெயர். இது, ஒன்றை அழைக்கும் அதாவது கூப்பிடும் பொருள்பற்றியே வரும். எட்டாம் வேற்றுமை ஏற்கும் சொல் ஏதாவது விகாரப்பட்டும் வரலாம்; இயல்பாய் அப்படியே வரலாம். எப்படியாயினும் அது, முன்னுள்ள ஆளைக் கூப்பிடுகிறமாதிரி இருக்கும்.

உதாரணம்:

✷ 1. முருகா! வா.
2. முருகனே! வா.
3. கண்ணு! போ.
✷ 4. பையன்களே! போங்கள்.
5. பையன்காள்! போங்கள்.
6. முருகன்! இங்கே வா.

இப்படி, **நீ, நீங்கள்** என்ற சொற்கள் ஏவல் வினைமுற்றுக்கு எழுவாயாக வரின், தொக்கி நிற்கும். இப்படிப்பட்ட எழுவாய் **தோன்றா எழுவாய்** எனப்படும்.

37ஆம் பாடத்திலும் இதைப்பற்றி ஏற்கெனவே கூறியுள்ளோம்.

✷ 1. முருகா, வா = 'முருகா, நீ வா' என்று பொருள் படுவதால், **முருகா** என்பது விளி வேற்றுமை. இந்த வாக்கியத்திற்கு **நீ** என்பது தோன்றா எழுவாய்.

✷ 4. பையன்களே, போங்கள் = 'பையன்களே, **நீங்கள்** போங்கள்' என்று பொருள்படுவதால், **பையன்களே** என்பது விளிவேற்றுமை. இந்த வாக்கியத்தில் **நீங்கள்** என்பது தோன்றா எழுவாய்.

பாடம் 40.

குறிப்பிட்ட பெயர்ச்சொற்களுக்குரிய குறிப்பிட்ட வினைமுற்றுக்கள்.

கீழேகண்ட பெயர்ச் சொற்களுடன் கீழேகண்டமாதிரி தகுந்த வினைமுற்றுக்களை மட்டும் உபயோகிக்கவேண்டும். வேறு விதமான வினைமுற்றுக்களை உபயோகிப்பதில் சொல்லழகு இராது.

உதாரணமாக, "சிங்கம் கர்ச்சிக்கும்" என்பதை "சிங்கம் கத்தும்" என்றோ, கதறும் என்றோ, கூவும் என்றோ அல்லது வேறு வினைமுற்றை உபயோகித்தோ சொல்லக்கூடாது; எழுதக் கூடாது.

1. கடல் இரையும்.
2. சிங்கம் கர்ச்சிக்கும்.
3. யானை பிளிறும்.
4. பன்றி உறுமும்.
5. கழுதை கத்தும்.
6. குதிரை கனைக்கும்.
7. நாய் குரைக்கும்.
8, நரி ஊளையிடும்.
9. மயில் ஆடும்.
10. குயில் பாடும்.
11. கிளி பேசும்.
12. சேவல் கூவும்.
13. காகம் கரையும்.
14. நாகம் சீறும்.
15. பூ மணக்கும்.
16. கற்றாழை நாறும்.
17. பூ மலரும்.
18. மலர்மேல் வண்டுகள் மொய்க்கும்.
19. தேன் இனிக்கும்.
20. எட்டி கசக்கும்.
21. எலுமிச்சம்பழம் புளிக்கும்.
22. வேப்பங்காய் கசக்கும்.
23. பாக்கு துவர்க்கும்.

24. மிளகாய் உறைக்கும்.
25. உப்பு கரிக்கும்.
26. பசு புல்லை மேயும்; அசை போடும்.
27. சூரியன் கிழக்கே உதிக்கும்; மேற்கே மறையும்.
28. மின்னல் மின்னும்.
29. இடி இடிக்கும்.
30. காற்றடிக்கும். (வீசும்)
31. வாடையடிக்கும்.
32. தென்றல் வீசும்.
33. வானம் குமுறும்.
34. மழை பெய்யும். (பொழியும்)
35. வெய்யில் எரிக்கும். (அடிக்கும்)
36. நிலா வீசும்.
37. பொன் மின்னும்.
38. மணி ஓசையிடும்.
39. கோழி கொக்கரிக்கும்.

கீழே கொடுக்கப்பட்டுள்ள உதாரணங்களைப் பின்பற்றி, ஒருமையில் நிகழ்காலத்தில் கொடுக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வாக்கியத்தையும் பன்மையிலும், மற்றக் காலங்களிலும் அமைத்துக் கூறுக.

உதாரணம்:

ஒருமை எழுவாயுள்ள வாக்கியம்	பன்மை எழுவாயுள்ள வாக்கியம்
1. பசு மேய்கிறது. (நிகழ்வு)	பசுக்கள் மேய்கின்றன.
பசு மேய்ந்தது. (இறப்பு)	பசுக்கள் மேய்ந்தன.
பசு மேயும். (எதிர்வு)	பசுக்கள் மேயும்.
2. புலி பாய்கிறது. (நிகழ்வு)	புலிகள் பாய்கின்றன.
புலி பாய்ந்தது. (இறப்பு)	புலிகள் பாய்ந்தன.
புலி பாயும். (எதிர்வு)	புலிகள் பாயும்.

பயிற்சி வாக்கியங்கள்:—

1. நட்சத்திரம் விட்டு விட்டுப் பிரகாசிக்கிறது.
2. கிரகம் சுற்றிச் சுற்றி வருகிறது.
3. கொட்டு முழங்குகிறது.
4. கடல் இரைகிறது.

5. அலை மோதுகிறது.
6. செல் அரிக்கிறது.
7. வேப்பங்காய் கசக்கிறது.
8. எலுமிச்சம்பழம் புளிக்கிறது.
9. மிளகாய் வற்றல் உறைக்கிறது.
10. பாக்கு துவர்க்கிறது.
11. உப்பு கரிக்கிறது.
12. சிங்கம் கர்ச்சிக்கிறது.
13. யானை பிளிறுகிறது.
14. பன்றி உறுமுகிறது.
15. கழுதை கத்துகிறது.
16. கன்று கதறுகிறது.
17. குதிரை கனைக்கிறது.
18. நாய் குரைக்கிறது.
19. நரி ஊளையிடுகிறது.
20. மயில் ஆடுகிறது.
21. குயில் பாடுகிறது.
22. சேவல் கூவுகிறது.
23. கோழி கொக்கரிக்கிறது.
24. கிளி பேசுகிறது.
25. கிளி தத்தித் தத்தி நடக்கிறது.
26. நாகம் சீறுகிறது.
27. பாம்பு படம் எடுக்கிறது.
28. நல்லபாம்பு படமெடுத்தாடுகிறது.
29. மலர்மேல் வண்டு மொய்க்கிறது.
30. பலாப்பழத்தின்மேல் ஈ மொய்க்கிறது.
31. குழந்தை அழுகிறது.
32. குழந்தை தவழ்கிறது.
33. தவளை கத்துகிறது.
34. பாற்காரன் பால் கறக்கிறான்.
35. பசு புல் மேய்கிறது.
36. சித்திரக்காரன் சித்திரம் வரைகிறான்.
37. சிற்பி சிற்பம் செதுக்குகிறான்.
38. பனை பாளை விடுகிறது.
39. கருவண்டு மரத்தைத் துளைக்கிறது.
40. மரம் பூத்துக் காய்த்துப் பழம் பழுக்கிறது.
41. கொடி படர்கிறது.

42. நெற்பயிற் பண்ணை கட்டுகிறது.
43. புழு அரிக்கிறது.
44. சேணியன் துணி நெய்கிறான்.
45. பட்சி பறக்கிறது.
46. மின்னல் மின்னுகிறது.
47. ஆயன் மாடு மேய்க்கிறான்.
48. எறும்பு ஊர்கிறது.
49. புலி பாய்கிறது.
50. குரங்கு மரத்துக்கு மரம் தாவுகிறது.
51. பண்ணைக்காரன் கூரை வேய்கிறான்.
52. சிறுவன் விளையாடுகிறான்.
53. சிறுமி பாடுகிறாள்.
54. மருத்துவன் மருந்து கொடுக்கிறான்.
55. குருகுல மாணவன் தமிழ் நன்றாய்ப் படிக்கிறான்.
56. உழவன் நிலத்தை உழுகிறான்.
57. அந்தப் பெண் குலவை போடுகிறாள்.
(குலவை = குரவை)
58. கற்புடைய பெண் கணவனைப் பேணுகிறாள்.

பாடம் 41.

நெருங்கிய ஒலிச்சொற்களை விளக்கும் வாக்கியங்கள்.

1. **எண்ணை** — ஒரு பெரிய எண்ணை ஒரு சிறிய எண்ணால் வகுக்கலாம். ஆனால், சிறிய எண்ணைப் பெரியஎண்ணால் வகுக்க முடியாது.

எண்ணெய் — உஷ்ணமான நாட்டில் வாரத்திற்கு ஒரு முறை யாவது எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். 'எண்ணெய் இல்லாமல் விளக்கு எரியுமா?' என்று இக்காலத்தில் கேட்க முடியுமா?

2. **மைல்** — இக்காலத்தில் மைல் கணக்கில் நடந்து செல்லும் மனிதர்களும் உண்டா?

		என்னால் ஒரு **மைல்** தூரம்கூட நடந்து செல்ல முடியாது.
	மயில்	**மயில்** பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருக்கும்.
		மயில் ஆடுவதைப் பார்த்த வான்கோழி தானும் ஆட ஆரம்பித்தது.
3.	சயனம்	பகலில் **சயனம்** செய்வது கெட்ட பழக்கமேயாகும்.
		சிலரை **சயனம்** செய்யும்பொழுது தட்டி எழுப்பினால் மிகவும் கோபப்படுவார்கள்.
	சைனம்	**சைனம்** என்ற மதம் ஒரு காலத்தில் தலைதூக்கி நின்றது.
		சைன முனிவர்களால் ஆக்கப்பட்ட பல அரிய நூல்களும் உண்டு.
4.	உலகம்	நாம் வசிக்கும் **உலகம்** உருண்டை வடிவமானது.
		உலக மக்களைக் குறிப்பிடும்பொழுது, '**உலகம்** பலவிதம்' என்பார்கள்.
	உலோகம்	தங்கம் விலையுயர்ந்த **உலோகம்**.
		பொன், இரும்பு, செம்பு. ஈயம், வெள்ளி என்பவைகளையே பஞ்ச **லோகம்** என்பார்கள்.
5.	குலை	தென்னங்காய் **குலை குலை**யாய்க் காய்க்கும்.
		பிள்ளையைக் காணவிட்டால் பெற்ற மாதாவின் **குலை** துடிதுடிக்குமல்லவா?
	கொலை	**கொலை**யைக் கலையாகக் கொண்டிருப்பவர்கள் தான் **கொலை**பாதகர்கள்.
		கொலை பஞ்சமகா பாதகங்களில் ஒன்று.
6.	குடை	மன்னர்களுக்குரியது வெண்கொற்றக் **குடை**
		கோவர்த்தனகிரியைக் **குடை**யாகப் பிடித்தான் கோபாலகிருஷ்ணன்.
	கொடை	கொடுக்கப்படுவதே **கொடை**யாதலின், நற்காரியங்களுக்குப் பொருள் தருவதை **நன்கொடை** என்பார்கள்.

		கொடையில் சிறந்தவர்களை வள்ளல்கள் என்பார்கள்.
7.	மானம்	**மானம்** உயிரினுஞ் சிறந்தது என்பார்கள்.
		'**மானம்** அழிந்தபின் வாழாமை முன்னினிது'.
		மானம் உயர்ந்ததெனக் கொள்பவர்கள் கவரிமானுக்கு ஒப்பாவார்கள்.
	வானம்	**வானம்** சுருங்கின் உலகில் தானமும் சுருங்கும்.
		இன்று **வானம்** மப்பும் மந்தாரமுமாயிருக்கிறது.
8.	முகந்து	சிறுபிள்ளைகள் தண்ணீரை **முகந்து முகந்து** கொட்டுவார்கள்.
		கிணற்றிலிருந்து தண்ணீரை வாளியால் **முகந்து முகந்து** ஊற்றுகிறோம்.
		ஆற்றிலுள்ள ஊற்றிலிருக்கும் சேற்று நீரை **முகந்து முகந்து** வெளியே ஊற்றினான்.
	மோந்து	பூக்களை மூக்கினால் **மோந்து** பார்க்கிறோம்.
		மோந்து பார்த்த மாத்திரத்திலேயே வாடிவதங்கும் பூவே அனிச்சம் பூ.
		நாய் **மோந்து மோந்து** பார்த்து எதையும் மோப்பத்தினாலேயே அறிந்துகொள்ளும் அரிய சக்தி வாய்ந்தது.
9.	மீசை	கோபத்தினால் சிலருக்கு **மீசை** படபடவென்று துடிக்கும்.
		மீசை நரைத்துப்போனாலும் ஆசை நரைத்துப் போகுமா?
		இக்காலத்தில் வாலிபர்கள் எத்தனையோ விதமான **மீசை**கள் வைத்துக்கொள்ளுகிறார்கள்.
	வீசை	ஒரு **வீசை**ச் சீனி ஐந்து அணாவாக விற்ற காலமும் உண்டு.
		எட்டு **வீசைகள்** கொண்டது ஒரு மணங்கு ஆகும்.
10.	இடை	அவரது பேச்சுகளுக்கு **இடை**யே நகைச்சுவையும் கலந்திருந்தது.

		ஒருவர் பேசும்பொழுது **இடை** மறித்துப் பேசுவது எப்பொழுதும் குற்றமாகும்.
	எடை	நிறுக்கும்பொழுது **எடையில்** வித்தியாசமே இருக்கக் கூடாது.
		ஒருவர் பேசும் சாதுரியத்தைக்கொண்டு அவரது அறிவையே **எடை** போட்டுப்பார்த்துவிடலாம்.
11.	**வேய்**	கூரை **வேய்**ந்த வீடு வெயிற்காலத்தில் குளிர்ச்சியாய் இருக்கும்.
		நாணலால் **வேயப்பட்ட** கூரைவீடு வெகுநாளைக்குக் கெடாமலிருக்கும்.
	மேய்	ஆடுமாடுகளே புல்லை **மேய்**வன.
		புலி பசித்தாலும் புல்லை **மேயாது**.
12.	**இடை**	பெண்களுக்கு **இடை** சிறுத்திருக்கவேண்டும்.
		சிறுத்த **இடையை** 'துடியிடை' என்பார்கள்.
	எடை	ஒரு **எடை** விறகு என்ன விலை?
		ஒரு **எடை** நிறையே ஒரு வீசை எனவும்படும்.
13.	**குலை**	நல்ல காரியத்தைக் **குலைப்**பதால் என்றும் நாசமே விளையும்
		நம் தேசத்தில் முன்னிருந்த திட்டங்கள் பல உருக்**குலை**ந்து போயின.
	குரை	'**குரை**க்கிற நாய் கடிக்காது' என்பார்கள்.
		வெறிநாயால் கடிக்கப்பட்டவன் நாயைப்போல் **குரை**ப்பதுண்டு.
14.	**நுரை**	மாட்டின் வாயில் **நுரை** தள்ளுகிறது.
		நம் நாட்டில் எண்ணெய் **நுரை**யைப்போன்ற மிருதுவான ஆடைகளும் நெய்யப்பட்டன.
		பாலைக் கறந்தவுடன் பார்த்தால் **நுரைநுரை**யாக இருக்கும்.
	முறை	அக்காலத்திய மன்னர்கள் மனு **முறை** தவறாது ஆண்டார்கள்.
		எவரிடத்தும் **முறை** தவறிப் பேசலாகாது.
		முன்னோர் வகுத்த **முறை**ப்படி நடத்தலே **முறை**மையாகும்.

15.	**பற்று**	அவனுக்குப் பலகடைகளில் **பற்று**வரவு உண்டு.
		அளவுக்கு மிஞ்சிய **பற்று** வைத்துக்கொண்டால் ஆபத்தே விளையும்.
		அறிவுடையோர்கள் என்றும் எதிலும் **பற்று** இல்லாமலே இருப்பார்கள்.
	பத்து	'ஐந்து வந்தாலும் அவசரமாகாது: **பத்து** வந்தாலும் பதட்டமாகாது' என்பார்கள்.
		பத்து ரூபாய் வரவு வந்தால் இருபது ரூபாய் செலவழிப்பது எப்படி?
		பத்து படரும் வியாதி; அது தோல்வியாதிகளுள் ஒன்று.
16.	**துகில்**	துரோபதையின் **துகில்** உரித்தான் துரியோதனன்.
	துயில்	சிலர் மதியம் **துயில்** (தூக்கம்) கொள்கிறார்கள்.
17.	**துடை**	எனது **துடை**யில் புண் இருக்கிறது. (பெயர்)
		அழுக்கை அடிக்கடி **துடை**க்கவேண்டும். (வினை)
	தொடை	பூக்களால் தொடுக்கப்படுவதால் பூமாலைக்கும் **தொடை** என்று பெயர்.
		தமிழாசிரியர் இன்று எதுகைத் **தொடை**பற்றி விளக்கம் கூறினார்.
18.	**நஞ்சை**	சிவன் **நஞ்சை**யுண்டான்; ஆதலால் சிவனுக்கு 'நஞ்சுண்ட கண்டன்' என்று பெயர்.
	நன்செய்	**நன்செய்** நிலத்தில் நெல். வாழை, கரும்பு நன்றாய் விளையும்.
19.	**வெந்நீரு**	சுடுதண்ணீரை **வெந்நீரு** என்பார்கள்.
		'**வெந்நீரு** வேண்டுமா? தண்ணீரு வேண்டுமா?' எனக் கேட்பதுண்டு.
	வெண்ணீறு	விபூதியை **வெண்ணீறு** என்பார்கள்.
		'பூசுவதும் **வெண்ணீறு**, பூண்பதுவும் **வெண்ணீறு**' என்ற தேவாரப் பாடல் பொருள் மிகுந்தது.
20,	**செலவு**	சிலருக்கு மாதந்தோறும் பணச் **செலவு** அதிகமாகிறது.
	சிலவு	சில வீடுகளில் எலிச்**சிலவு**கள் அதிகம்.

எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவற்றில் டிக்டேஷன்

மூன்றின பாடங்களும் பயிற்சிகளும் முடிந்தபிறகு கீழ்க்கண்டவற்றில் வரிசைக்கிரமமாக ஆசிரியர் சொல்லச்சொல்ல மாணவர்களை எழுதும்படி செய்யவேண்டும். அதாவது டிக்டேஷன் (dictation) போடவேண்டும். மாணவர்கள் எழுதியதை ஆசிரியர் திருத்தி மார்க்குப் போடவேண்டும். ஆசிரியரின் இலட்சியம் மாணவர்கள் நூற்றுக்கு நூறு மார்க்கு எடுக்கவேண்டுமென்பதாக இருக்கவேண்டும். எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவைகளில் ஒரு பிழைகூட இல்லாமல் எழுதத்தெரியும்வரை அடிக்கடி டிக்டேஷன் போடுக; கட்டுரையும் வியாசமும் எழுதும்படி செய்க.

1. எழுத்துக்களில் டிக்டேஷன்:—

ஔ, தொ, ஐ, தோ, பே, ஊ, மெ, கூ, ணே, சு, ரு, ங், வௌ, றை, மூ, ணை, ஞு, டே, ணே, ஞா, ரொ, லை, ஞே, தூ, ளொ, ணெ, ஞ், ணு, மொ, ரா, னை, போ, ழை, ணு, ளை, மூ, ரோ, ளு, ஞ, தை, யூ, நீ, பூ, ரி, ன், ழ், ண். ளு, ஞெ, லை, றொ, கெ, னே, டீ, றோ, னை, ர், னெ, கோ, பொ, சூ, ங, நி, மே, ர, லா, வே.

2. சொற்களில் டிக்டேஷன்:—

அரிவாள், அழுக்காறு, ஆற்றல், இறுமாப்பு, உழவர், உள்ளங்கை, எழில், எள்ளல், ஒழுங்கு, ஔவியம், மங்களம், அஞ்சாமை, சண்டாளன், கந்தகம், கம்பளம், முழக்கம், உழைப்பு, சுழற்றல், பொழில், கொழுப்பு நழுவல், பளபளெனல், ஒளிர்தல், நாழிகை, வேளாண்மை, தொன்று, மின்னல், சான்றோர், நோனாமை.

3. சொற்றொடர்களில் டிக்டேஷன்:—

முந்நூறு, நானூறு, ஐந்நூறு, எண்ணூறு, தொண்ணூறு, தொள்ளாயிரம், பன்னீராயிரம், கற்றாழை, சொற்றொடர், நற்றமிழ், நன்னூல், நன்னாள், புன்னகை, எட்டுணையும், எத்துணையும், ஆட்கொல்லி, நாடோறும், நாற்றிசை, தோற்பெட்டி, தோற்றுருத்தி, மெல்லப்போ, கள்ளவுள்ளம, தோட்டிதொண்டன், வெள்ளை சொள்ளை, கொலைகளவு, சொட்டுத்தேன், தெண்ணீர்

தெளி, தொன்னூல், வாழ்வு தாழ்வு, நாற்றுநரம்பு, பெண்டு பிள்ளைகள், பேரன் பேர்த்திகள், தெளிந்த மோர், வாணாட்கள், வீணாட்கள், நல்லெண்ணெய், பசு வெண்ணெய், பொற்றாமரை, வெண்டாமரை, வெவ்வேறு, வெற்றுடம்பு, உள்ளொளி, பொன்னகரம், பூணூல், புன்னுனி, பதிற்றுப்பத்து, பெண்ணலம், சோற்றிலிருந்து, மேற்றிசையில்.

4. வாக்கியங்களில் டிக்டேஷன்:—

1. காலை மாலை கடவுளை வாழ்த்தி வணங்குக.
2. கொள்ளைகொண்ட பொருள் வெள்ளமேற்றுரும்பு.
3. சொற்களில் சோர்வு நெற்களில் பதராம்.
4. பிழைபடச் சொல்லின் பேணுதல் நன்றோ?
5. வெட்டெனப் பேசின் சட்டெனப் பகையாம்.
6. ஔவையார் எழுதிய ஆத்திசூடி முதலியன செவ்வையாய்க் கற்றுச் சீராய் ஒழுகுக.
7. சான்றோரெனப்படுபவர் ஆன்ற அறிவுடையோர்.
8. பற்றற்றான் தாளைப் பற்றுவதற்கு உலகப் பற்றற்று உரிய கடமையாற்றி வாழவேண்டும்.
9. புலையுங் கொலையுங் களவுந் தவிர்.
10. கல்விக்கழகு கசடற மொழிதல்.
11. எழுத்தறிவித்தவன் இறைவன் ஆகும்.
12. அழுகிய வாழைப்பழம் வழவழ கொழ கொழ.
13. கற்றல், கேட்டல், தெளிதல் ஆகியவை ஞானம் பெறுவதற்கு வழிகள்.
14. சிலர் அல்லும் பகலும் ஊணுறக்கமின்றி, உழைத்து இளைத்துக் களைத்து அலுத்துச் சலித்து அலைகின்றார்கள்.
15. கடற்கரையில் மணற்குவியலிலே உரல் உருளுமா? புரளுமா?
16. கள்ளமில்லா உள்ளத்தெழுந்த தெள்ளத் தெளிந்த வள்ளுவர் தமிழை அள்ளி அள்ளிப் பருகச் செய்யும் வள்ளல்கள் வாழ்க!
17. எழுத்தியலும் சொற்றொடராக்கமும் மொழிப்பயிற்சியும் பழுதறக் கற்பித்துப் பிழையின்றி அழகாக எழுதப் பயிற்றும் பால குருகுலம் வாழ்க! வாழ்க!!

சரள வாக்கியங்கள்.

ஒரு குறிப்பிட்ட பெயர்ச் சொல்லுடன், வேற்றுமை உருபுகளைச் சேர்த்து, அது வாக்கியத்தின் முதலில் வரும்படி வாக்கியங்களை அமைக்கும் விதம்.

பாடம் 42.

பசு.

(1) பசு ஒரு சாதுவான மிருகம். பசு வீட்டு மிருகம். பசு பால் கொடுக்கும். பசு புல், பருத்திவிதை முதலியவைகளைத் தின்னும். பசு பார்ப்பதற்கு அழகாக இருக்கும்.

(2) பசுவை நாம் வளர்க்கிறோம். பசுவைச் சிலர் வணங்குகிறார்கள். பசுவை வளர்க்கப் பிரியப்படுகிறோம். பசுவை நன்றாய்ப் பாதுகாக்க வேண்டும்.

(3) பசுவால் நமக்குப் பல நன்மைகள் உண்டு. பசுவால் பல குடும்பங்கள் பிழைக்கின்றன பசுவால் நாட்டின் செல்வம் பெருகும்.

(4) பசுவுக்கு இரண்டு கொம்புகள் உண்டு. பசுவுக்குக் குஞ்சமுள்ள வால் உண்டு. பசுவுக்கு இரட்டைக் குளம்புகள் உண்டு. பசுவுக்குப் பருத்திவிதையிலும், தவிட்டிலும் பிரியம் அதிகம்.

(5) பசுவிலிருந்து பால் கிடைக்கிறது; பாலிலிருந்து தயிர், மோர், வெண்ணெய் முதலியன கிடைக்கின்றன, பசுவிலிருந்து கிடைக்கும் சாணமும், கோமயமும் நல்லஉரம். பசுவிலிருந்து 'கோரோசனை' என்ற மேலான மருந்து எடுக்கப்படுகிறது. பசுவிலிருந்து கன்றைப் பிரிக்காதே.

(6) பசுவினுடைய கொம்புகள் கூர்மையானவை. பசுவினுடைய காம்பில் பால் சுரக்கும். பசுவினுடைய கொம்பிலிருந்து சீப்புச் செய்கிறார்கள். பசுவினுடைய வால் நுனியில் மயிர்க்குஞ்சம் உண்டு. பசுவினுடைய வெண்ணெய் மருந்துக்கு உதவும்.

(7) பசுவில் பல வகை உண்டு. பசுவில் பல நிறம் உண்டு. பசுவில் வெள்ளை, சிகப்பு, கறுப்பு முதலிய நிறங்கள் உண்டு. பசுவில் சிறந்தது காராம்பசு.

(8) பசுவே! இங்கே வா. பசுவே! பாலைக் கொடு. பசுவே! என்னை முட்டாதே. பசுவே! மந்தைக்குப் போ. பசுவே! கொட்டத்துக்குள் நுழை.

பாடம் 43.

காகம்

(1) காகம் 'கா, கா' என்று கரையும். காகம் மரத்தில் கூடு கட்டும். காகம் முட்டையிடும். காகம் சோறு தின்னும். காகம் கூட்டம் கூட்டமாய் வசிக்கும். காகம் கருமை நிறமுடையது. காகம் தெருவைச் சுத்தம் செய்யும்.

(2) காகத்தைப் பார். காகத்தைக் கூப்பிடு. காகத்தைக் கூப்பிட்டுச் சிலர் சோறு வைப்பார்கள். காகத்தைக் கூகை இரவில் வெல்லும். காகத்தைத் தமிழ் நாட்டில் எங்கும் காணலாம். காகத்தைச் சனிபகவானின் வாகனம் என்று சொல்வார்கள்.

(3) காகத்தால் நன்மையுண்டு. காகத்தால் தெரு சுத்தமாகும். காகத்தால் காலைப்பொழுதை அறிகிறோம். காகத்தால் ஒற்றுமைக் குணம் விளங்குகிறது.

(4) காகத்திற்குக் கண் கூர்மையாய் இருக்கும். காகத்திற்குக் கண் கோணல் என்பார்கள். காகத்திற்குப் பகை கூகை. காகத்திற்கு மாமிசத்தின்மேல் பிரியம் அதிகம். காகத்திற்கு தன் இனத்தை அழைத்துப் பகிர்ந்துண்ணும் சிறந்த குணம் உண்டு.

(5) காகத்திலிருந்து நாம் கற்பது என்ன? காகத்திலிருந்து நல்ல பழக்க வழக்கங்களை அறிகிறோம். காகத்திலிருந்து மருந்தும் எடுக்கிறார்கள். காகத்திலிருந்து முற்றிலும் மாறுபட்டது குயில்.

(6) காகத்தினுடைய நிறம் கறுப்பு. காகத்தினுடைய கழுத்து கபில நிறமாய் இருக்கும். காகத்தினுடைய சத்தம் 'கா, கா' என்பதே. காகத்தினுடைய கால் விரல்கள் வளைந்திருக்கும். காகத்தினுடைய சிறப்புக்களில்ஒற்றுமைக்குணம் மிகவும் பாராட்டத்தக்கது.

(7) காகத்தில் பலவகைஉண்டு. காகத்தில்கறுப்புநிறம் அதிகமானதை அண்டங்காக்கை என்பார்கள். காகத்தில் சில நல்ல பழக்க வழக்கங்களைக் காண்கிறோம். காகத்தில் துர்க்குணமும் உண்டு.

(8) காகமே! இங்கே வா. காகமே! பறந்து வா. காகமே! அதிகாலையில் 'கா, கா' என்று கரைந்து எங்களைஎழுப்பிவிடு. காகமே! ஏன் கோணலாய்ப் பார்க்கிறாய்? காகமே! எங்கள் தின்பண்டங்களைக் களவாடாதே.

பாடம் 44.

தென்னை.

(1) தென்னை உயரமான மரம். தென்னை கிளைகளில்லாத மரங்களில் ஒன்று. தென்னை கடற்கரையில் நன்ருய் வளரும். தென்னை ஆற்ருேரங்களில் செழிப்பாய் வளரும். தென்னை இளநீர், தேங்காய் முதலியன தரும். தென்னை மணல் தரையிலும், சுக்கான் தரையிலும் நன்கு வளரும்.

(2) தென்னையை மணற்பாங்கான இடத்தில் பயிரிடுவார்கள். தென்னையைப் பார்த்தால் பனை, ஈந்து முதலிய மரங்களின் நினைவு வரும்.

(3) தென்னையால் பல நன்மைகள் உண்டு. தென்னையால் வாழ்கின்ற மக்கள் பலர் உண்டு. தென்னையால் மலையாளத்திலுள்ள மக்களிற் பெரும்பாலோர் பிழைக்கிருர்கள்.

(4) தென்னைக்கு மற்றமரங்களைப்போல்கிளைகள் இல்லை. தென்னைக்குச் சல்லிவேர்கள் அதிகம். தென்னைக்கு தூரில் மண் அணைக்கவேண்டும். தென்னைக்கு மணல் தரைதான் முற்றிலும் ஏற்றது. தென்னைக்கு கொழுஞ்சிச் செடிகளை உரமாக வைக்க வேண்டும்.

(5) தென்னையிலிருந்து மட்டை, தோகை, இளநீர், தேங்காய் முதலியவை கிடைக்கின்றன. தென்னையிலிருந்து மட்டைகளை வெட்டிக் கூடைகள் பின்னுவார்கள். தென்னையிலிருந்து பாளைகளை யெடுத்துக் கலியாண வீடுகளை அலங்கரிப்பார்கள்.

(6) தென்னையினுடைய ஒவ்வொருபாகமும் பயன்படும். தென்னையினுடைய இளநீர் தேகத்திற்கு நல்லது. தென்னையினுடைய ஓலைகளால் கிடுகு, விசிறி முதலியன பின்னலாம். தென்னையினுடைய மட்டைகள் அடுப்பெரிக்க உதவுகின்றன.

(7) தென்னையில் பலவகை உண்டு. தென்னையில் சிறந்தது செவ்விளநீர் மரமே. தென்னையில் வண்டு விழாதபடி அடிக்கடி கவனித்து வரவேண்டும். தென்னையில் பறவைகள் கூடுகட்டி வசிக்கும்.

(8) தென்னையே! தென்னையே!! ஏனோ இவ்வளவு உயரமாய் வளர்ந்தாய்? தென்னையே! நல்ல நிழல் கொடுக்க மாட்டாயா? தென்னையே! காற்றினுல் விழுந்துவிடாதே. தென்னையே! நீ உனது தாளாலுண்ட நீரைத் தலையாலே தருவாயல்லவா!

பாடம் 45.

விருதுநகர்

(1) விருதுநகர் பெரிய பட்டணம். விருதுநகர் புகைவண்டிச் சந்திப்பு நிலையம். விருதுநகர் வியாபாரத்திற்குப் பேர்போனது. விருதுநகர் தமிழுக்குத் தொண்டுசெய்து வருகிறது. விருதுநகர் பல துறைகளிலும் விருத்தியாகிக்கொண்டு வருகின்றது. விருதுநகர் ஒரு காலத்தில் சிறு பட்டியாக இருந்தது; 1920ஆம் வருடமுதல் விருத்தியாகிக்கொண்டே வருகிறது.

(2) விருதுநகரைச்சுற்றிலும் நந்தவனங்கள் பல இருக்கின்றன. விருதுநகரை ஒரு பெரிய வியாபாரத்தலம் என்பார்கள்.

(3) விருதுநகரால் தமிழ்நாட்டிற்கே நல்லபுகழ் உண்டு. விருதுநகரால் தமிழ்க்கலை ஓங்கி வளர்கிறது. விருதுநகரால் வியாபாரம் விருத்தியாகிறது.

(4) விருதுநகருக்கு வடக்கே சத்திர ரெட்டியபட்டி. விருதுநகருக்குக் கிழக்கே ரோசல்பட்டி. விருதுநகருக்குத் தெற்கே சூலக்கரை. விருதுநகருக்கு மேற்கே குமாரலிங்கபுரம்.

(5) விருதுநகரிலிருந்து பலவிதமான பொருள்களும், வியாபாரச் சாமான்களும் ஏற்றுமதியாகின்றன. விருதுநகரிலிருந்து அருப்புக்கோட்டைக்கு 'மோட்டார்' வண்டி அடிக்கடி போய்க்கொண்டிருக்கிறது. விருதுநகரிலிருந்து வடக்கிலும், தெற்கிலும், மேற்கிலும் இருப்புப் பாதைகள் செல்கின்றன.

(6) விருதுநகரினுடைய வியாபாரம் மிகவும் பெரியது. விருதுநகரினுடைய ஜனத்தொகை பெருகிக்கொண்டே வருகிறது. விருதுநகரினுடைய புகழ் சென்னைப் பிரதமர் கனம் காமராசர் காலத்தில் அரசியல் துறையிலும் ஓங்கியிருக்கிறது.

(7) விருதுநகரில் பல சாதியினர் வசிக்கிருர்கள். விருதுநகரில் தெப்பக்குளத்தைச் சுற்றிலும் கடைகள் அழகாக அமைந்திருக்கின்றன. விருதுநகரில் சுமார் 25 பள்ளிக்கூடங்கள் இருக்கின்றன. விருதுநகரில் கல்லூரி ஒன்றும் இருக்கிறது.

(8) விருதுநகரே! உன் புகழ் ஓங்குக! விருதுநகரே! நீ இன்னும் விருத்தியாகு. விருதுநகரே! நீ எல்லாக் கலைகளிலுமே என்றென்றும் சிறந்து விளங்குவாயாக!

பாடம் 46.

பால குருகுல வித்யாலயம்.

(1) பால குருகுலம் ஒரு நல்ல வித்யாலயம். பால குருகுலம் புகைவண்டி நிலையத்திலிருந்து சுமார் அரைக்கல் தூரத்திலிருக்கிறது. பால குருகுலம் ஓர் உயர்தர ஆரம்பப் பாடசாலையையும் கொண்டது. பால குருகுலம் தமிழ், கணக்கு முதலிய பாடங்களை நன்ருய்ப் போதித்து வருகிறது.

(2) பாலகு ருகுல வித்யாலயத்தை "பால குருகுலம்" என்றும் சொல்லலாம். பால குருகுலத்தைப் பல அறிஞர்கள் புகழ்ந்திருக்கிருர்கள். பால குருகுலத்தைப் போன்று காற்ரேட்டமும், வேறு பல வசதிகளுமுள்ள பள்ளிக்கூடங்கள் நம் நாட்டில் ஒரு சில இருக்கலாம்.

(3) பால குருகுலத்தால் தமிழ் நன்கு வளர்ச்சியடைகிறது. பால குருகுலத்தால் வியாபாரக் கணிதம் கற்பிக்கப்படுகிறது. பால குருகுலத்தால் இராட்டு விருத்தியாகிறது. பால குருகுலத்தால் பயனுள்ள பல பிரசுரங்களும், புத்தகங்களும் வெளியிடப்படுகின்றன.

(4) பால குருகுலத்துக்கு நாலாபுறங்களிலும் சிறந்த பரந்த வெளியுண்டு. பால குருகுலத்துக்கு மேற்கேயுள்ள இராமமூர்த்தி ரோடு, தெற்கு வடக்காய்ச் செல்கிறது. பால குருகுலத்துக்கு அருகே அழகான பங்களாக்கள் இருக்கின்றன.

(5) பால குருகுலத்திலிருந்து படித்து வெளியேறும் மாணவர்கள் சிறப்புடன் விளங்குகிருர்கள். பால குருகுலத்திலிருந்து நல்ல பஞ்சும், இராட்டும், வில்லும், வீசனமும் விற்கப்படுகின்றன.

(6) பாலகுருகுலத்தினுடைய சேவை பலராலும்பாராட்டப்பட்டிருக்கின்றது. 'பால குருகுலத்தினுடைய கல்விமுறை பல வகைகளிலும் சிறந்தது' எனச் சில அறிஞர்கள் கூறுகின்ருர்கள்.

(7) பால குருகுலத்தில் இராட்டுப் பயிற்சி நன்கு நடைபெறுகிறது. பால குருகுலத்தில் இந்தியாவின் தரைப்படம் பார்க்கத்தக்கது; மிகவும் பாராட்டத்தக்கது. பால குருகுலத்தில் உலகப் படமும், மொழிவாரி மாகாணப் படமும், இராஜ்யப் பிரிவுப் படமும், சுவரில் பெரிதாய் அழகாக வரையப்பட்டிருக்கின்றன.

8. பால குருகுலமே! உன் புகழ் ஓங்குக! பால குருகுலமே! மற்றக் கல்வித் தாபனங்களுக்கெல்லாம் நீ ஒரு வழிகாட்டியாக விளங்குவாயாக! பால குருகுலமே! நீ என்றென்றும் நம் தமிழுக்கும், தமிழ் நாட்டிற்கும் தொண்டாற்றிக் கொண்டே இருப்பாயாக!

குறிப்பு:— பாடங்களின்படி ஒவ்வொரு வேற்றுமையிலும் ஏராளமான வாக்கியங்களைச் சுத்தமாகச் சொல்லும்படி செய்துவிட்டால், சொந்தத்தில் கணக்கற்ற வாக்கியங்களைச் சொல்ல முடிவதுடன் கொச்சையாகப் பேசுவது, எழுதுவது, வாசிப்பது ஆகிய பிழைகளும், இலக்கணப் பிழைகளும் நீங்கும். சொந்தத்தில் கட்டுரைகள் எழுதவும், சொற்பொழிவுகள் ஆற்றவும் சக்தி ஏற்படும்.

பயிற்சி

ஆடு, எருமை முதலிய பல மிருகங்களைப் பற்றியும், சேவல், புரு முதலிய பல பறவைகளைப் பற்றியும், பனை, வேம்பு முதலிய மரங்களைப் பற்றியும், சொந்த ஊர், சொந்தப் பள்ளிக்கூடம் ஆகியவைகளைப் பற்றியும் ஒவ்வொரு வேற்றுமையிலும் ஏராளமான சரள வாக்கியங்களைச் சுத்தமாகச் சொல்லும்படி செய்க. பிறகு எழுதும்படி செய்க.

கட்டுரைகள்

குறிப்பிட்ட பொருளைப்பற்றிச் சிந்தனை செய்து சில கேள்விகளை வரிசைப் படுத்திக்கொண்டு, அவைகளுக்கு விடை எழுதினுல் சிறு கட்டுரைகள் (Composition) ஆகிவிடும். அதைச் சிந்தனைசெய்து, சிலகுறிப்புக்களை வரிசைப்படுத்தி எழுதிக்கொண்டு, அவைகளை விவரித்து எழுதினுல் வியாசம் (Essay) ஆகிவிடும். அவைகளை விவரித்துக் கூட்டங்களில் பேசினுல் சொற்பொழிவு எனப்படும்.

சிறு கட்டுரைகள் (Compositions)

பாடம் 47

பசு

குறிப்புக்கள்: (1) பசு எந்த இனத்தைச்சேர்ந்தது? (2) பசுவின் உடல் உறுப்புக்கள் எப்படி அமைந்துள்ளன? (3) பசுவுக்கு ஆகாரப் பொருள்கள் என்னென்ன? (4) பசுவின் சுபாவமென்ன? (5) பசுவினுல் நமக்கு என்ன உபயோகம்?

பசு வீட்டில் வளர்க்கப்படும் பிராணிகளில் ஒன்று. மிருகங்களில் மாமிசம் தின்பவைகளும் உண்டு; தின்னுதவைகளும் உண்டு. பசு மாமிசம் தின்னுத மிருகங்களின் இனத்தைச் சேர்ந்தது.

பசுவிற்கு இரட்டைக் குளம்புகள் உண்டு. அதற்குத் தலையில் இரண்டு கொம்புகள் உண்டு. பூரண வளர்ச்சியடைந்த பசுவிற்கு கீழ்த்தாடையில் எட்டுப் பற்கள் உண்டு. அதற்கு நீண்டவால் உண்டு; வாலின் நுனியில் மயிர்க் குஞ்சமிருக்கும். வெள்ளை, பழுப்பு, கறுப்பு முதலிய நிறங்கள் பசுவின் நிறமாகும்.

பசு புல், வைக்கோல், இளந்தளிர், தட்டை, இலைதழை, கொடி முதலியவைகளைத் தின்னும். தவிடு, பிண்ணுக்கு, பருத்திவிதை முதலியவை பசுவிற்கு பிரியமான உணவாகும்.

பசு பயந்து வெறிக்கும் சுபாவமுடையது. அது அவசரம் அவசரமாகப் புல்லை மேயும்; பின் தனியாக இருந்து அசைபோடும். பசு சாதுவான மிருகம். ஆனுல், அது தனக்குத் தீங்கு செய்பவர்களைக் கொம்பினுல் முட்ட முயற்சிக்கும்.

பசு பல வகைகளில் நமக்குப் பிரயோசனமானது. பசுவிலிருந்து பால் கறக்கிருேம். பாலிலிருந்து தயிர், வெண்ணெய், மோர் எடுக்கிருேம். பசுவின் கொம்பு, எலும்பு ஆகியவற்றிலிருந்து சீப்பு, பொத்தான் முதலியனவும், தோலினுல் செருப்பு, தோற்பெட்டி முதலியனவும் செய்கிருர்கள். பசுவின் சாணமும், கோமயமும் விவசாயத்திற்கு ஏற்ற சிறந்த உரமாகும். இந்துக்கள் பசுவைத் தெய்வமாகக் கொண்டாடுகிருர்கள்.

பாடம் 48

காகம்

குறிப்புக்கள்: (1) காகம் என்பது என்ன? (2) காகத்தின் நிறம், உறுப்புக்கள் எப்படிப்பட்டவை? (3) காகம் தின்னும் உணவுகள், அதன் பழக்க வழக்கங்கள் என்னென்ன? (4) காகத்தினுல் நமக்குப் பிரயோசனம் யாது? (5) காகத்தைப் பற்றிய பழமொழி என்ன?

காகம் ஒரு பறவை. அதற்கு காக்கா, காக்கை, காகம் என்ற பெயர்களும் உண்டு. ''கா-கா'' என்று கரைவதனுல் தான் அதற்கு காகம் என்று பெயர் வந்திருக்கக் கூடும்.

காகத்தின் நிறம் கறுப்பு. ஆனுல், கழுத்தில் மாத்திரம் சிறிது சாம்பல் நிறம் உண்டு. காகத்திற்கு மிருதுவான இறக்கைகள் உண்டு. அதன் அலகு கூர்மையாகவும், மிகவும் உறுதியாகவும் இருக்கிறது. கால் விரல்களில் கூரிய வளைந்த நகங்கள் உண்டு.

காகம் அழுகிய பழம், புழு பூச்சி, மாமிசம் முதலியவைகளைத் தின்னும். சோறு, ரொட்டி முதலியவற்றையும் தின்னும். செத்த எலியைத் தின்பதற்கு காகத்திற்கு விருப்பம் அதிகம். காகம் மரக்கிளையில் கூடுகட்டிவசிக்கும். பேராசை, தந்திரம், திருட்டுத்தனம் ஆகிய துர்க்குணங்கள் அதனிடம் அதிகம் உண்டு. அதிகாலையில் கண்விழித்தல், குளித்தல், தன் இனத்தை அழைத்து உண்ணல் ஆகிய நல்ல பழக்க வழக்கங்களையும் நாம் அதனிடம் காணலாம்.

காகம் நமக்குச் சில வகைகளில் பிரயோசனமானது. அது தெருக்களில் கிடக்கும் அழுகிய பொருட்களையும், எச்சிற் பொருட்களையும் தின்று தெருவைச் சுத்தம் செய்கிறது. ஆகையால் அதற்கு ''*ஆகாயத்தோட்டி*'' என்று பெயர். அதிகாலையில் ''கா-கா'' என்று கரைந்து நம்மைத் தூக்கத்தினின்றும் எழுப்புகிறது.

''காக்கைக்கும் தன் குஞ்சு பொன்குஞ்சு'' என்ற பழமொழி நம் நாட்டில் வழங்கி வருகிறது. ''முக்காலும் காகம் மூழ்கிக்குளித்தாலும் கொக்காகுமோ?'' என்றுகேட்பதுண்டு. ''காக்கை கரவா கரைந்துண்ணும்'' என்ருர் திருவள்ளுவர்.

பாடம் 49.

தென்னை

குறிப்புக்கள்: (1) தென்னைமரம் எங்கெங்கே நன்றாய் வளரும்? (2) தென்னை மரத்தின் பாகங்களில் ஒவ்வொன்றும் எப்படி இருக்கும்? (3) தென்னையால் நமக்கு என்னென்ன பயன் உண்டு? (4) தென்னையினத்தைச் சேர்ந்த வேறு மரங்கள் யாவை? (5) தென்னையைப்பற்றிய பழமொழி என்ன?

தென்னைமரம் உலகத்தில் உஷ்ணப் பிரதேசத்தில் மணற்பாங்கான இடங்களில் செழிப்பாய் வளரும். பொதுவாக அது ஆற்றங்கரை, கடற்கரை போன்ற மணற்பாங்கான இடங்களில் நன்கு வளரும். மலையாள நாட்டில் தென்னை மரங்கள் அதிகம்.

தென்னை மரத்திற்கு மற்ற மரங்களைப்போல் கிளைகளும், இலைகளும் இல்லை; ஆனால், மரத்தின் உச்சியில் மட்டைகள் அடர்ந்திருக்கும். அம்மட்டைகளின் இரு புறங்களிலும் பச்சை அல்லது பழுப்பு நிறமுள்ள நீண்ட தோகைகள் வளர்ந்து நிறைந்திருக்கும். அவைகளுக் கிடையே தென்னங் குலைகளைக் காணலாம். அக் குலைகளில் இளநீர்க்காய்கள் கொத்துக் கொத்தாகக் காய்த்திருக்கும். தென்னங் குருத்து பார்வைக்கு அழகாயிருக்கும்.

தென்னைமரம் நமக்குப் பலவகையில் பயன்படுகிறது. வெயிற்காலத்தில் இளநீர் பருகுவது உடம்பிற்கு நல்லது. தேங்காயிலுள்ள பருப்பு நமக்குச் சிறந்த ஆகாரமாகும். முற்றிய தேங்காய்ப் பருப்பிலிருந்து தேங்காயெண்ணெய் எடுக்கிறார்கள். தென்னங் காயின் நாரிலிருந்து கயிறு திரிக்கிறார்கள். சிரட்டைகள் தீயெரிக்கவும், அகப்பை செய்யவும் பயன்படும். தென்னங் கிடுகுகளால் வீடு வேயலாம்; பூக்குடலை, விசிறி முதலியன பின்னலாம். தோகையின் நரம்புக் குச்சிகளால் விளக்குமாறு (விளக்குமிலாறு) கட்டுகிறார்கள்.

பனை, கமுகு, ஈச்சை, பேரீச்சை ஆகிய மரங்கள் தென்னையின் இனத்தைச் சேர்ந்தவை. இவைகள் எல்லாவற்றிலும் தென்னையே மனிதருக்கு மிகவும் உபயோகமுள்ளது.

''தென்னைமரத்தில் தேள் கொட்டினால் பனைமரத்தில் நெறி கட்டுமா?'' என்பது நம் நாட்டில் வழங்கும் ஒரு பழமொழி. ''தென்னையின் நிழல் தெருவடைத்துவிடுமா?'' என்றும் கேட்பார்கள். ''தென்னை தாளுண்ட நீரைத் தலையாலே தரும்'' என்பர் அறிவுடையோர்.

வியாசங்கள் (Essays)

பாடம் 50.

விருதுநகர்.

குறிப்புக்கள்: (1) *அமைந்துள்ள இடம்.* (2) *நகர் அமைப்பு.* (3) *ஜனங்களும், தொழில்களும்.* (4) *முக்கிய கட்டிடங்களும், தாபனங்களும்.* (5) *மற்றச் சிறப்புக்கள்.*

விருதுநகர், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த சாத்தூர் தாலுகாவிலுள்ள ஒரு முக்கிய வியாபாரத்தலம். தென்னிந்திய இருப்புப்பாதையிலுள்ள ஒரு முக்கிய சந்திப்பு (ஜங்ஷன்.) விருதுநகர், சென்னையிலிருந்து கன்னியாகுமரிக்குச் செல்லும் பெரிய சாலையில், மதுரைக்குத் தெற்கே சுமார் முப்பதாவது கல்லில், அமைந்திருக்கிறது. இங்கிருந்து நான்கு திசைகளிலும் சாலைகள் செல்கின்றன. இந்தச் சாலைகளின் மூலம் வண்டிப் போக்கு வரத்துக்கள் அதிகம் நடைபெறுகின்றன.

நகரின் நடுவே ஒரு அழகிய பெரிய தெப்பக்குளமும், அத் தெப்பக்குளத்தைச் சுற்றிக் கடைத் தெருக்களும் மிக அழகாய் அமைந்திருக்கின்றன. தெற்கு வடக்காக சுமார் அரைக்கல் நீளமுள்ள கடைவீதியும், நகரின் முக்கிய கோவிலாகிய மாரியம்மன் கோவிலுக்கு மேற்புறமுள்ள பெரிய மைதானமும், மைதானத்தின் நடுவே பெரிய தூபியும், மைதானத்தைச் சுற்றியமைந்துள்ள கோவில்களும், க்ஷத்திரிய உயர்நிலைப் பள்ளியும் நகருக்கு மிக்க அழகைத் தருவனவாகும்.

இந்நகரின் ஜனத்தொகை சுமார் ஐம்பதினாயிரம். இவர்களில் பெரும்பான்மையோர் நாடார் பெருமக்கள். இங்கு நடைபெறும் முக்கிய தொழில் வியாபாரமாகும். சிறிது

விவசாயமும் நடைபெறுகிறது. அவற்றுடன் சில கைத் தொழில்களும் நடைபெறுகின்றன.

இங்கு பஞ்சாலைகளும், எண்ணெய் இயந்திரங்களும், மாவு அரைக்கும் இயந்திரங்களும், பருப்பு உடைக்கும் தொழிற்சாலைகளும் அநேகமிருக்கின்றன. இது ஒரு சிறந்த வியாபாரத்தலம். இங்கு கைவண்டித் தொழிலாளர்கள் பலர் வசிக்கின்றனர். இங்கு ஒரு பெரிய பஞ்சுப் பேட்டையும் இருக்கிறது. இங்குமட்டுமின்றி, இந்தியா முழுவதிலுமுள்ள பெரிய பெரிய நகரங்களிலும் வியாபாரம் நடத்தும் பெரிய பெரிய வியாபாரிகள் இந்நகரில் வசிக்கின்றார்கள். இந்நகரிலுள்ள மக்களுக்குப் பயனுள்ள தாபனங்கள்: க்ஷத்திரிய வித்தியாசாலை, தபால் ஆபீஸ், நகராண்மைக் கழகக் காரியாலயம், வருமானவரிக் காரியாலயம், செந்திக்குமார நாடார் கல்லூரி, பால குருகுல வித்யாலயம் முதலியனவாம். இந்நகரில் ஒரு கல்லூரியும், ஆண்கள் உயர்நிலைப் பள்ளிகள் இரண்டும், பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் இரண்டும், பல ஆரம்பப் பாடசாலைகளும் இருக்கின்றன.

இங்கு பல்வேறு அரசியற் கூடங்களும், தொழிற் சங்கங்களும், இலக்கிய மன்றங்களும், நூல் நிலையங்களும், அறநெறிக் கழகங்களும் இருக்கின்றன. தவிரவும், பல அச்சு இயந்திர சாலைகளும், பத்திரிகைக் காரியாலயங்களும் இருக்கின்றன.

இவ்வூரில் ஆண்டுதோறும் பங்குனி மாதத்தில் நடைபெறும் *மாரியம்மன் திருவிழா* மிகச் சிறப்பானது. திருவிழாக் காலத்தில் அகில இந்தியப் பொருட்காட்சி ஒன்றும் நடைபெறும். இங்குள்ள வணிகப் பெருமக்கள் அகில இந்தியாவிலிருந்தும், வெளிநாடுகள் பலவற்றிலிருந்தும் வியாபாரப் பொருள்களை இறக்குமதி செய்கிறார்கள்.

பாடம் 51.

பால குருகுல வித்யாலயம்.

குறிப்புக்கள்: (1) பெயரும் இடமும். (2) அமைப்பும் கட்டிடங்களும். (3) தனிச் சிறப்புக்கள். (4) கல்வி. (5) இலட்சியம் (குறிக்கோள்.)

எங்கள் பள்ளிக்கூடத்திற்கு *"பால குருகுல வித்யாலயம்"* என்றுபெயர். இதனை, "குருகுலம்" எனவும் சுருக்கமாகக் கூறுவதுண்டு. குருகுலம், விருதுநகர் என்னும் பெரிய நகரின் கீழ்த்திசையில் இராமமூர்த்திப் பாதையின் ஓரமாக, புகைவண்டி நிலையத்திற்குத் தென்கிழக்கே சுமார் அரைக்கல் தூரத்தில் அமைந்திருக்கிறது.

இது, சுமார் 16 ஏக்கர் பரப்புள்ள நிலத்தின் முன்புறம், வனப்பும் சிறப்பும் மிக்க கட்டிடங்களுடன் தோற்றமளிக்கின்றது. இதன் முன்பத்தியில், தென்புறமாக மொழிப் பயிற்சி தொழிற் பயிற்சி வகுப்புக்களும், வடபுறமாக காரியாலயமும் இருக்கின்றன. காரியாலயத்தைத் தொடர்ந்து கிழக்குப் பத்தியில் பார்வையாளர் தங்குவதற்கான அறைகள் முதலியன இருக்கின்றன. இவைகளுக்குச் சற்று கிழக்கே வகுப்பறைகள் அமைந்துள்ளன. அவ் வகுப்பறைகள் வேப்பமரக் காற்றும் நிழலும் படும்படியாகக் கட்டப்பட்டுள்ளன. குருகுலத்தில் காற்றோட்டமும், வெளிச்சமும், வேறு பல வசதிகளும் உண்டு. வகுப்பறைகளுக்கு வடக்கே தென்னந் தோப்பும், கிழக்கே பண்ணைத் தோட்டங்களும் இருக்கின்றன.

இங்கு, கலைமகள் ஆலயம் அழகாய் அமைந்திருப்பது இவ் வித்யாலயத்திற்கே ஒரு தனிப் பெருஞ் சிறப்பைத் தருவதாகும். தினமும் காலையில் கலைமகள் வழிபாடு நடைபெறும். சங்கீத வித்வானைக்கொண்டு சங்கீத வகுப்புக்களும், பஜனையும் நடைபெறும். மாணவர்கள் வகுப்புக்களுக்குச்

செல்லுமுன், கை கால் முகம் கழுவி, கலைமகளை வணங்கி விட்டுத்தான் வரிசையாகச் செல்வார்கள். காலையிலும், மாலையிலும் மாணவர்களும், மற்றவர்களும் நீராடுவதற்காக வசதியான தனி அறைகளும் கட்டப்பட்டுள்ளன. மாணவர்கள் உற்சாகமாக நீந்தி விளையாடவும், நீந்தக் கற்றுக் கொள்ளவும் பண்ணை நிலத்தின் கிழக்குக் கோடியில் விசாலமான குளம் ஒன்று அமைக்கப்பட்டிருக்கிறது. மாணவர்களும் மற்றையோரும் ஓய்வு நேரத்தைப் பயன்படுத்தும் பொருட்டு இலவச வாசகசாலை, புத்தகாலயம், வானொலி முதலிய வசதிகள் இருக்கின்றன.

குருகுலத்தில் இந்திய தேசத்தின் உருவத்தை தரையில் அழகாகக் கட்டி அதில் இயற்கை அமைப்புப்படி மலைகள், நதிகள், நகரங்கள், கடல்கள் முதலியவற்றை எழிலுடன் அமைத்துக் காட்டியிருப்பது, படித்தும் கேட்டும் விளங்க இயலாத பூகோளக் கலையைக் கண்ணுற் கண்டு களிப்புடன் கற்பதற்கு ஏற்ற எளிய இனிய முறையாகும். இது ஒவ்வொருவரும் நேரில் பார்த்துப் பயன்பெறத்தக்கது.

இங்கே உயர்தர ஆரம்பப் பாடசாலைக்குரிய எட்டு வகுப்புக்கள் உள்ளன. இங்கு சாதாரணக் கல்வியுடன் மொழியறிவுக் கல்வியும், தொழிற் கல்வியும், ஒழுக்கமும் சீரிய முறையில் அளிக்கப்படுகின்றன. சாத்திர முறையில் தேகப் பயிற்சியும் கற்பிக்கப்படுகிறது. தேகப்பயிற்சிசாலை தனியாக உளது.

பாலகுருகுல வித்யாலயம் 1939 ஆம் ஆண்டில் தொடங்கப் பெற்றது. அன்று முதல் இன்றுவரை அதன் நிர்வாகி, கி. பெ. சி. வ. பிரகாசம் அவர்கள் மாணவர்களின் கல்வி, அறிவு, ஒழுக்கம், தமிழ்மொழி வளர்ச்சி, எண்சுவடிக் கணக்கு, இசை வளர்ச்சி முதலியவைகளுக்காக இடையறாது உழைத்து வருகிறார்.

பாடம் 52

கடிதம் எழுதும் முறை.

பேசுவதற்கும், எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் மொழி அதாவது பாஷை ஏற்படுமுன், உலகத்தில் மக்கள் சைகை மூலமாகவே தங்கள் மனத்திலுள்ளதை மற்றவர்களுக்குத் தெரிவித்து வந்திருக்கின்றார்கள். சைகைக்குப் பதிலாக மொழியை உண்டாக்கிக் கொண்டபிறகு, தங்கள் மனத்திலுள்ளதைப் பேச்சின் மூலமாகப் பரிமாறிக்கொண்டு வருகிறார்கள்.

தூரமான இடத்திலுள்ளவர்களுடன் பேசமுடியாதென்றவுடன் தாங்கள் பேசும் மொழியின் ஒலிகளுக்கு எழுத்துக்களை உண்டாக்கிக்கொண்டு, தங்கள் மனத்திலுள்ளதை எழுதியனுப்பி மற்றவர்களுக்குத் தெரிவிக்க ஆரம்பித்தனர். இதற்கு 'கடிதம் எழுதுதல்' என்று பெயர். கடிதம் எழுதுதல் இன்று மக்கள் வாழ்வில் மிக முக்கியமானதாக இருக்கின்றது. கடிதம் எழுதப் பயிற்சி பெற்று, அதைத்திறமையோடு எழுதினால், நமது மனத்திலுள்ள கருத்துக்களை பேசுவதைவிட மிகத்தெளிவாகவும், சுருக்கமாகவும், இனிமையாகவும் தெரிவிக்கலாம்.

கடிதத்தின் மேலே நடுவில் 'ஓம்' என்று போட்டுக் கொண்டு, இடதுபுறத்தில் கடிதம் எழுதுகின்றவரின் முகவரியையும், வலதுபுறத்தில் கடிதம் பெற்றுக்கொள்பவரின் முகவரியையும் எழுதவேண்டும். எழுதியபின் முதல்வரியில் தமிழ்வருடம், மாதம், தேதியையும்; அதைத் தொடர்ந்து ஆங்கிலத் தேதியையும் எழுதவேண்டும்.

நாம் பலதரப்பட்டவர்களுக்குக் கடிதம் எழுதவேண்டியதிருக்கின்றது. நமக்குவயதில்மேற்பட்டவர்களுக்கும், கீழ்ப்பட்டவர்களுக்கும், நம்மைஒத்தவர்களுக்கும் நாம் கடிதம்எழுதுகிறோம்.

கடிதம் எழுதும்போது, முதலிலேயே நாம் தெரிவிக்க வேண்டியவைகளையும், தெரியவேண்டியவைகளையும் எழுதக் கூடாது. முதலில் வணக்கத்தையும், இரண்டாவது சுகத்தையும் தெரிவிக்கவேண்டும். நம்மைவிட வயதில்மூத்த தகுதியுள் ளவர்களுக்குத்தான் நமது வணக்கத்தைத் தெரிவிக்கவேண்டும்.

தகப்பன், தாய், அண்ணன், அக்காள், தம்பி, தங்கை, மாமன், மைத்துனன், மாப்பிள்ளை முதலிய உறவினர்களை கடி தத்தின் முதல்வரியில் எப்படி விளித்து எழுதவேண்டுமென் பதையும்; சிநேகிதர்களையும், பெரியோர்களையும் கடிதத்தின் முதல்வரியில் எப்படி விளித்து எழுதவேண்டு மென்பதையும் தெரிந்துகொள்ளவேண்டும். தொழில் சம்பந்தப் பட்டவர்களுக்கு முதல்வரியை எப்படித்தொடங்கவேண்டுமென்பதும் தெரிய வேண்டும். இவர்களுக்கெல்லாம் முதல்வரியை எப்படி ஆரம் பித்து எழுதவேண்டுமென்ற திட்டவட்டமான வழக்கத்தை நாம் ஏற்படுத்திக்கொள்ளாமல் எழுதி வருகின்றோம். ஆகவே, நாம் அதனை ஏற்படுத்திக் கொள்ளவேண்டும். நம்மைவிட வயதில்கூடியவர்களுக்கு எழுதும்போது அவர்களின் பெய ருடன் 'அவர்கள்' என்ற மரியாதைச் சொல்லைச்சேர்த்து கடிதத் தின் முதல்வரியில் எழுதவேண்டும்.

தகப்பன், தாய், அண்ணன், மற்றுமுள்ள உறவினர்களான பெரியோர்களுக்கு எழுதும்பொழுது முதல்வரியில், 'சுவாமி அவர்கள் சமுகத்திற்கு அடியேன் .... வணக்கம். நலம்; நலமே வேண்டுகிறேன்' என்று எழுதிவிட்டு, அதன்பிறகு எழுத வேண்டிய விஷயத்தை எழுதவேண்டும். தன் வயதிற்குக் குறைந்த உறவினர்களில் ஆண்களுக்கு எழுதும்பொழுது, 'சிரஞ்சீவி ....க்கு கடவுள் கிருபையால் சகலநன்மை களும் உண்டாவதாக' என்று எழுதவேண்டும். தன் வயதிற்குக் குறைந்த உறவினர்களில் கன்னி அல்லது மங்கலியப்பெண் களுக்கு எழுதும்பொழுது, 'சௌபாக்கியவதி ....க்கு

கடவுள் கிருபையால் சகல நன்மைகளும் உண்டாவதாக' என்று எழுதவேண்டும். நண்பர்களுக்கு, 'அன்புமிக்க நண்பர்........க்கு ....எழுதியது. நலம்; நலமே வேண்டுகிறேன்' என்று எழுதவேண்டும்.

தொழில் சம்பந்தமாக எழுதும்போது, "திரு .... அவர்களுக்கு எழுதியது. நலம்; நலமே வேண்டுகிறேன்" என்று எழுதவேண்டும். மிகவும் பெரியவர்களுக்கு 'உயர்திரு' என்று எழுதவேண்டும். விவாகமாகிய பெண்மணியாக இருந்தால், பெயருக்குமுன் 'திருமதி' என்றும்; பெயருக்குப்பின் அவள் கணவன்பெயரைச் சேர்த்தும் எழுதவேண்டும். விவாகமாகாத பெண்மணியாக இருந்தால் அவள்பெயருக்குமுன் 'குமாரி' என்று எழுதவேண்டும். கல்யாணமாகி கணவனை இழந்த பெண் மணிகளை 'திருமதி' என்றோ, 'சௌபாக்கியவதி' என்றோ விளித்து எழுதக்கூடாது. 'அன்பு மிக்க .... அவர்களுக்கு எழுதியது. நலம்; நலமே வேண்டுகிறேன்' என்று எழுதவேண்டும்.

கடிதத்தில் மேலேகண்டவாறு முதல்வரியை எழுதி, அதன்பின் எழுதவேண்டிய விஷயங்களைக் கோவையாகவும், பத்திபத்தியாகவும் எழுதி முடித்துவிட்டு, கடைசிவரியில் வலதுபக்கத்தில் நம்மைவிட வயதில்கூடியவர்களாக இருந்தால், 'தங்களன்புள்ள' என்றும்; வயதில்குறைந்தவர்களாக இருந்தால், 'உனதன்புள்ள' என்றும் போட்டு அதன்கீழ் நமதுகையெழுத் தைப்போடவேண்டும்.

கார்டின்மேலும், கவரின்மேலும் மேல்விலாசம் எழுதும் போது பெயருக்குமுன்னால், 'திரு' என்றோ; 'திருமதி' என்றோ 'உயர்திரு' என்றோ போட்டுக்கொண்டு அதன்பிறகே விலாச தாருடைய பெயரை எழுதவேண்டும். பெயருடன் 'அவர்கள்' என்பதையும் சேர்த்துஎழுதவேண்டும்.

கார்டு அல்லது கவரின்மேல், வலதுபுறம் கடிதம்பெற்றுக்கொள்பவரின் முகவரியையும், இடதுபுறம் } இந்தமாதிரியான வளைவுக்குள், கடிதம்எழுதுகின்றவரின் முகவரியையும் எழுத வேண்டும்.

மேலேகண்ட விவரங்களை கீழேகொடுக்கப்பட்டுள்ள மாதிரிக்கடிதத்தைப்பார்த்துத்தெரிந்துகொள்க.

நம்மைவிட வயதில்மூத்த உறவினர்களுக்கு எழுதவேண்டிய மாதிரிக்கடிதம்.

ஓம்

உயர்திரு.

கு. வீ. இளங்கோவன்,	**கு. வீரபாண்டியனார் அவர்கள்,**
c/o கு. வீரபாண்டியனார் அவர்கள்,	மேலரத வீதி,
வியாபாரம், **விருதுநகர்.**	**கும்பகோணம்.**

மன்மதஞு பங்குனிமீ 1உ (14—3—;56.)

சுவாமியவர்கள் சமுகத்திற்கு அடியேன் இளங்கோவன் வணக்கம். நலம்; நலமே வேண்டுகிறேன்.

அன்புடன் தாங்கள்எழுதிய கடிதம் கிடைத்தது. அதைப் படித்து எல்லோரும் மகிழ்ச்சியடைந்தோம். இங்குள்ள எல்லோருடைய சுகத்தையும் கேட்டு எழுதியிருக்கின்றீர்கள். கடவுள்கிருபையால் இங்கு எல்லோரும் சுகம். தங்கள் சுகத்திற்கு கடவுளை வேண்டுகிறோம்.

தம்பியும், தங்கையும் நன்குபடித்து வருகின்றார்கள். முக்கியமாக தமிழையும், கணக்கையும்—அவை ஒவ்வொன்றிலும் நூற்றுக்கு நூறு மார்க்குகள் வாங்கக்கூடிய விதத்தில்—ஊக்கத்துடனும், முயற்சியுடனும் படித்துவருகிறார்கள். தமிழ்க் கற்க, "தமிழ்வசனத்தை எளிதில்கற்கும்வழி" என்ற புத்தகம் மிகவும் உதவியாக இருக்கின்றது.

நீங்கள் கூறியபடி தமிழை நன்கு கற்றுவிட்டு, இந்தியிலும், ஆங்கிலத்திலும்வெளிவரும்தினச்செய்திப்பத்திரிகைகள் வாசிக்கவும், அவைகளில் கட்டுரைகளும், கடிதங்களும் பிழையின்றி எழுதவும் கற்று வருகிறேன்.

தமிழ்த்தொண்டு செய்ய ஆவலுடனிருக்கிறேன். தமிழ்நாட்டைச்சேர்ந்தவர்கள் தமிழிலல்லாமல், பிறமொழிஎழுத்துக்களில் கையெழுத்துப்போட்டுவருவது அவர்களின் அடிமைப்புத்தியையும், சுயநலத்தையும் காட்டுகின்றது. நம் தமிழ்நாட்டில் இதுவரை ஆங்கிலத்தில் கையெழுத்துப்போட்டு வந்தவர்கள் இனி இந்தியில் கையெழுத்திடத்தொடங்கினால் ஆச்சரியப்படுவதற்கில்லை. பிறமொழியில்கையெழுத்துப்போடுவதை விட்டுவிட்டு தமிழில் கையெழுத்துப்போடும்படி மக்களுக்கு அறிவுறுத்திவருகிறேன்.

இப்போது நம்நாட்டிலுள்ள பள்ளிக்கூடங்கள், அரசாங்க வேலைக்குப்போவதற்கு சீட்டு (Certificate) கொடுக்குமிடங்களாக இருந்து வருகின்றன.

முற்காலத்தில் கல்வி, அறிவு, திறமை முதலியவைகளை பணச்செலவில்லாமல் 3, 4 ஆண்டுகளில் வளர்க்க திண்ணைப் பள்ளிக்கூடங்கள் இருந்துவந்தன. அவைகளைப்போல, ஆனால் இக்காலத் தேவைகளுக்குத் தக்கபடி, நவீனத்திண்ணைப்பள்ளிக்கூடங்களும், தொழிற்பயிற்சிக்கூடங்களும் நாடெங்கும் ஏற்பட வேண்டும்.

கொல்லம், திருவனந்தபுரம், கன்னியாகுமரி, திருநெல்வேலி முதலிய ஊர்களுக்கு உல்லாசப்பிரயாணம் போய்வர நாங்கள் மிகவும் ஆசைப்படுகிறோம். உல்லாசமாகப்போய் வருவதுடன், அந்தந்தஇடங்களிலுள்ள பலவிஷயங்களை நேரில் பார்த்து எங்கள் கல்வி, அறிவு, அனுபவம் முதலியவைகளை வளர்த்துக்கொள்ளவும் விரும்புகிறோம். நானும், தம்பி குணசீலனும், தங்கை மங்கையர்க்கரசியும் போய்வருவதற்கு அனுமதி கொடுக்கும்படி தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

நேற்று நமது மங்கையர்க்கரசியின் 13ஆம் ஆண்டு பிறந்த தினத்தை வெகு சிறப்புடன் கொண்டாடினோம்.

பத்துத்தினங்களுக்குமுன், நமதுபசுமாடு கன்றுபோட்டுள்ளது. கன்று காளங்கன்று. அது துள்ளித்துள்ளி விளையாடுவதைப்பார்க்கப்பார்க்க எங்களுக்கு ஒரே ஆனந்தமாக இருக்கின்றது. பசு காலையில் ஒருபடிபாலும், மாலையில் முக்காற்படி பாலும் கறக்கின்றது. இன்னும் ஒருவாரம்போனால், பால் இன்னும் அதிகமாகக்கறக்குமென்று அம்மாசொல்லுகிறார்கள்.

தங்கள் சுகத்திற்கு அடிக்கடி கடிதம் எழுதும்படி கேட்டுக்கொள்கிறோம். மற்றவிபரம் தங்கள் அன்பானபதில்பார்த்து.

தங்களன்புள்ள,

இளங்கோவன்.

பத்திரிகைவாசிக்கப்பயிற்சி.

ஏதாவது ஒரு தினசரிப்பத்திரிகையை எடுத்து, அதன் தலைப்பில் பெரியஎழுத்துக்களில் எழுதியிருப்பவைகளை வாசித்துக்காட்டி, அவைகளை வாசிக்கும்படி செய்யவேண்டும். அதிலுள்ள சிறுசிறு செய்திகளை வாசித்துக் காட்டி, அவைகளை அவர்களாகவே வாசிக்கக்கூடிய உருசியை உண்டாக்க வேண்டும். புதிதாக வர்த பத்திரிகை கிடைக்காவிட்டால், பழைய பத்திரிகைகளை வைத்துக்கொள்ளலாம். ஆனந்தவிகடன், கல்கி, கதிர் முதலிய வாரப்பத்திரிகைகளில்வரும் சிறுசிறு கதைகளை வாசிக்கச்செய்யவேண்டும்.

செய்யுட்களைக்கற்கப்பயிற்சி.

எங்கள் வெளியீடாகிய 'சிறுவர்செய்யுட்கோவை'யிலுள்ள ஆத்திசூடி, கொன்றைவேந்தன், உலகநீதி, நறுந்தொகை, மூதுரை, ஒளவையார்தனிப்பாடல்கள் ஆகியவைகளை ஒவ்வொன்றாக வாசித்துக்காட்டி அதன்படி வாசிக்கச்செய்க; அருத்தமும் சொல்லுக.

பத்திரிகைகளையும், புத்தகங்களையும் வாசிக்க நேரமில்லாதவர்களும், வசதி இல்லாதவர்களும் மேலேசொன்ன செய்யுட்களைத் தினமும் வாசிப்பது அவசியமாகும். இல்லாவிட்டால் இவர்கள் தமிழ் வசனத்தைக் கற்றது மறந்துவிடும்.

'சிறுவர்செய்யுட்கோவை'யிலுள்ள சொற்றொடர்களைப் பிரித்து, சொற்றொடர்களில் நன்கு தேர்ச்சி பெறுக. செய்யுட்களிலுள்ள சொற்றொடரைப் பிரித்தபின் அவைகளைச் சொந்தத்தில் வாக்கியங்களாக எழுதி, வசன நடையிலும் தேர்ச்சி பெறுக. இவைகளை விளக்கி "தமிழ்ச்செய்யுளை எளிதில் கற்கும்வழி" என்ற பெயரால் ஒரு புத்தகம் வெளியிடப்பெறும்.

அனுபந்தம் 1.

இப்புத்தகத்தைக்கற்றுக்கொடுக்கும் விதம்.

சில பொதுக்குறிப்புக்கள்.

தமிழ்வசனத்தைக்கற்பது, அதைப் பிழையின்றிப்பேசுவதற்கும், வாசிப்பதற்கும், எழுதுவதற்குமேயாகும். இவைகளுக்கு உதவுவன வாக்கியங்கள். வாக்கியங்கள் சொற்களாலும், சொற்றொடர்களாலும் ஆக்கப்படுவன. சொற்களும், சொற்றொடர்களும் எழுத்துக்கோவைகளால் உண்டாக்கப்படுபவை. எழுத்துக்களை முதலில் நன்கு கற்றுக்கொண்டால்தான் சொற்களையும், சொற்றொடர்களையும் கற்கமுடியும். சொற்களையும், சொற்றொடர்களையும் நன்கு கற்றால்தான் வாக்கியங்களைக்கற்க முடியும். ஆகையால், தமிழ்வசனத்தை எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் என்று பிரித்து படிப்படியாகக் கற்கும் ஒரு வழிதான் நியாயமாக ஏற்பட்டது; இயல்பானது; எளியது. இதைவிட எளிதாகக்கற்க வேறுவழிகள் கிடையா. சொல்லொலியும், எழுத்தொலியும் வெவ்வேறாகஇருக்கும் ஆங்கிலம் முதலிய ஐரோப்பியமொழிகளைக்கற்பதற்குத்தான் பல வழிகள்உண்டு அம்மொழிகள் கற்பதற்குக்கடினமானவைகளாக இருப்பதனாலேயே அவைகளைக்கற்க, பலவழிகள் கையாளப்படுகின்றன.

இப்புத்தகம், தமிழ் வசனத்தைக் கற்றுக்கொடுப்பதற்காக மட்டும் எழுதப்பட்டதாகும். இலக்கணங் கற்றுக்கொடுப்பதற்காக எழுதப்பட்டதன்று. அப்படி எழுதப்பட்டிருந்தால் இப்புத்தகத்தைக்கற்றுக்கொடுப்பது கடினமாகிவிடும். இப்புத்தகம் பிழைநீக்கும் ஒரு அகராதிபோன்று எழுதப்பட்டிருக்கின்றது. மாணவர்களுக்குப்பிரியமாகஇருந்தாலும்சரி, இல்லாவிட்டாலும்சரி, கணக்குகளை எளிதாகவும், விரைவாகவும் பிழையின்றிச்செய்வதற்கு பெருக்கல்வாய்ப்பாடுகளை மனப்பாடமாகப் படித்துவைத்துக்கொள்ளும்படி அவர்களைக் கட்டாயப்படுத்துகின்றோம். அதைப்போல, தமிழ்வசனத்தைப்பிழையின்றி எழுத வாசிக்கக் கற்கும்வரை இப்புத்தகத்தைத்தினமும் படிக்கச்செய்யவேண்டும்.

இப்புத்தகம் மூன்றுமுதல் எட்டுவகுப்புக்களுக்கு ஏற்பட்டதாகும். ஆனால், தேர்ச்சிக்குவேண்டிய குறைந்தபட்ச மார்க்குகளைமட்டும் வகுப்பிற்குத்தக்கபடி படிப்படியாக உயர்த்தி எட்டாவதுவகுப்பிற்கு 90சதவிகிதமென்று ஏற்படுத்தவேண்டும். மொழித்தேர்ச்சியில் எல்லோரும் படிப்படியாக 100க்கு100மார்க்குகள் வாங்குவதையே குறிக்கோளாகக்கொள்ள வேண்டும். இதில் கைத்தவறுதல்பிழைகளுக்கு 10சதவிகித மார்க்குகள் குறைக்கப்படலாம். மொழித்தேர்ச்சியில்100க்கு100 மார்க்குகள் வாங்கும்படி கற்றுக்கொடுப்பதுதான் கல்விக்கு அஸ்திவாரமாகும்.

விஷயஞானம், புத்திக்கூர்மை, பொது அறிவுமுதலியவைகளில் தேர்ச்சிக்குரியமார்க்குகள், எல்லாவகுப்புக்களுக்கும் குறைவாகவேயிருக்கலாம். இவற்றில் எவராலும் 100க்கு100மார்க்குகள்வாங்கமுடியாது. இவைகளில் மார்க்குகள் குறைவாகவாங்குவதாலும் ஒன்றும் கெட்டுப்போய்விடாது. பரீட்சைகளில், பொதுஅறிவுக்கானகேள்விகளையும், மொழித்தேர்ச்சிக்கான கேள்விகளையும், ஒரேசமயத்தில்கேட்டு இரண்டிற்கும்சேர்த்து மார்க்குகள் போடக்கூடாது.

தமிழ்வசனத்தைக்கற்பதற்கு, மேலே கூறியவாறு தேர்சிக்குரியமார்க்குகளை ஏற்படுத்தாதவரை தமிழைக்கற்றுக்கொடுப்பதாகச்சொல்வதிலும், தமிழைக்கற்றுக்கொண்டிருப்பதாகச்சொல்வதிலும் அருத்தமேயில்லை.

இன்று மாணவர்கள் தமிழில்விடும் பிழைகளுக்கு மார்க்குகளைக்குறைப்பது என்றவிதியை ஏற்படுத்தி, அதைக்கடைப்பிடித்தால் அநேகமாக எல்லாமாணவர்களுக்கும் பூச்சியமார்க்குத்தான்கிடைக்கும். காரணம், இன்று தமிழில் குறில்நெடில்பிழைகள்விடும் மாணவர்களைக்கூட அவர்கள் பரீட்சையில் தேறிவிட்டதாகச்சொல்லி மேல்வகுப்புக்களுக்கு அனுப்பிவைப்பதுதான். இப்படி அனுப்பி வைப்பதானது, தமிழை ஆசிரியர்கள் கற்றுக்கொடுக்கவோ, மாணவர்கள் கற்றுக்கொள்ளவோவேண்டிய அவசியம் ஏற்படாமல்செய்துவிடுகிறது.

இப்புத்தகப்படி எட்டாவதுவகுப்பிற்கு ஏற்பட்ட மாதிரிக்கேள்விகளை அனுபந்தம் 3இல் கொடுத்துள்

ளோம். அவைகளைப்பார்த்து விளங்கிக்கொள்க. எல்லாவகுப்புக்களுக்கும் எழுத்து, சொல், சொற்றொடர், வாக்கியம் என நான்குவகைகளாகப்பிரித்து நான்கிலும் கேள்விகள்கேட்கவேண்டும். இந்நான்கையும் நன்கு கற்றுக்கொடுக்காவிட்டால் தமிழ் வசனத்தைப்பூர்த்தியாகக்கற்றுக்கொடுத்ததாகாது.

எழுத்து.

தமிழ்எழுத்துக்களைக்கற்றுக்கொடுக்கும்போது, அவைகளில் இருவகைப்பிழைகள்தான்ஏற்படஇடமுண்டு. ஏனென்றால், தமிழ்எழுத்துக்களில், ஒரேஒலியில் குறில் நெடில்எழுத்துக்கள் எனவும், ஒரேஒலியில் அழுத்தாமலும் அழுத்தியும் சொல்லவேண்டியஎழுத்துக்கள் எனவும், இருவகைகள் இருக்கின்றன. இவைகளில் அ-வரிமுதல் ம-வரிமுடியவுள்ள எழுத்துக்களில் குறில்நெடில்பிழை என்னும் ஒருவகைப்பிழை தான் ஏற்படும். ஆனால், ய-வரிமுதல் ன-வரிமுடியவுள்ள எழுத்துக்களில் குறில்நெடில்பிழைஒன்று; அழுத்தாமலும், அழுத்தியும் சொல்லாததால்ஏற்படும்பிழைஒன்று; ஆக இருவகைப்பிழைகள் ஏற்படும்.

இக்காரணம்பற்றியே எழுத்துக்களை அ-வரிமுதல் ம-வரி முடியவுள்ளஎழுத்துக்கள் எனவும், ய-வரி முதல் ன-வரிமுடியவுள்ளஎழுத்துக்கள் எனவும்,இருபிரிவுகளாகப் பிரித்துப்பாடங்கள்போட்டுள்ளோம்என்பதை அறிக. ஒரேஒலியில் குறில்நெடில்எழுத்துக்களும், ஒரேஒலியில் அழுத்தாமலும் அழுத்தியும் சொல்லவேண்டியஎழுத்துக்களும் இல்லாவிட்டால் தமிழ்எழுத்துக்களைக்கற்றுக்கொடுக்கும்போது பிழைகளே ஏற்படா. இப்படி இருவகைப்பிழைகள் ஏற்படுமென்பதை முன்கூட்டியேதெரிந்தும், அவைகளைநீக்கும்வழிகளை அறிந்தும் எழுத்துக்களைக்கற்றுக்கொடுத்தால் எழுத்துக்களில் பிழைகளே ஏற்படா. குறில்எழுத்துக்களுக்கு ஒருமாத்திரைஒலியும், நெடில் எழுத்துக்களுக்கு இருமாத்திரைஒலியும் ஏற்பட்டவையாம். குறிலும் நெடிலும் ஒரேஒலியையுடையவைகளாக இருப்பதால், அவைகளை ஒன்றுபோல் உச்சரித்தால் அவைகளில் குறில்நெடில் பிழைகள் ஏற்படும். இப்பிழைகள் ஏற்படாமலிருக்கவேண்டுமானால் குறில்நெடில்எழுத்துக்களை இரட்டையிரட்டையாகவும்,

குறிலைக்குறுக்கியும், நெடிலைநீட்டியும் உச்சரிக்கும்படிகற்றுக் கொடுக்கவேண்டும்.

பழையகாலத்தைப்போல, தமிழ்எழுத்துக்களின்ஒலியுடன்சாரியைகள்சேர்த்து 'ஆனா,' 'ஆவன்னா'என்று கற்றுக்கொடுக்கக்கூடாது. 'ஆனா,' 'ஆவன்னா'என்று சொல்வதற்குப்பதிலாக குறில் நெடில்எழுத்துக்களை இரட்டையிரட்டையாகவும், நெடிலை நீட்டியும் சொல்லிக்கொடுத்துவிட்டால் குறில் நெடில்பிழைகளே ஏற்படா; விரைவாகவும் கற்கலாம்; கற்றதும் ஒருபோதும் மறக்காது. சொற்களையும், சொற்றொடர்களையும், வாக்கியங்களையும் அவைகளின்ஒலிப்படியே மாணவர்கள் எழுத்துக்கூட்டிவாசித்துவிடுவார்கள்; எழுதிவிடுவார்கள்.

குறில்நெடில்எழுத்துக்களைஉச்சரிப்பதில் பிழைகள்ஏற்படுவதுபோல, அவைகளைஎழுதுவதிலும் பிழைகள்ஏற்படும். ஏனென்றால் குறில்எழுத்தின்வடிவமும், நெடில்எழுத்தின்வடிவமும் அதிகவித்தியாசமின்றிஇருக்கின்றன. **எழுத்துக்களை எழுதக்கற்றுக்கொடுக்குமுன் அவற்றின்ஒலியையும், வடிவத்தையும் முதலில் நன்கு கற்றுக்கொடுத்துவிடவேண்டும்**

தமிழ்எழுத்துக்களின்வடிவங்கள் 5 கோடுகளின்விதிக்குள்அமைவதால் அவைகளைஎளிதாகவும்,விரைவாகவும், அழகாகவும்எழுதமுடிவது ஒருபெரும்நன்மையாகும். 1, 2ஆம் பாடங்களில் எழுத்துக்கள் ஐந்துகோடுகளுக்குள் அமைந்திருப்பதை மாணவர்களுக்கு விளக்கிவிட்டால் 3ஆம்பாடத்தில் கண்டபடி எழுத்துக்களை ஒருகோட்டில் அழகாக எழுதிவிடுவார்கள். **எப்போதும் மாணவர்களை ஒருகோடுபோட்ட தாளிலேயே எழுதச்செய்யவேண்டும்.** கோடுபோடாத தாளாகஇருந்தால் கையால்கோடுபோட்டு எழுதச்செய்யவேண்டும். கோடுபோட்ட தாளில் அழகாக எழுதிப்பழகியபின் கோடில்லாததாளில் எழுதினால் அழகாகஎழுதக்கற்றது முழுவதும்கெட்டுப்போய்விடும்.

தமிழ்எழுத்துக்களைத்தவிர, மற்ற மொழிகளின்எழுத்துக்களை ஒருகோட்டில்எழுதும்போது கோடு வரிகோணாமல் எழுதுவதற்குமட்டுமே உபயோகப்படும்; அழகாக எழுத உபயோகப்படாது. தமிழ்எழுத்துக்களை ஒருகோட்டில்

எழுதினால் கோடு வரிகோணமல்எழுத உபயோகப்படுவதுடன் அழகாகஎழுதவும் உபயோகப்படுகின்றது. இது தமிழ்மொழிக்கு ஒருதனிப்பெருஞ்சிறப்பாகும்.

சொல்.

தமிழ்எழுத்துக்களில் குறில்நெடில் எழுத்துக்களும்; அழுத்தாமலும் அழுத்தியும் உச்சரிக்கவேண்டிய எழுத்துக்களும் இல்லாவிட்டால், தமிழ்எழுத்துக்களைக்கற்றவுடனேயே எந்தச்சொல்லையும் அதன்ஒலிப்படி ஒருபிழைகூடஇல்லாமல் வாசித்துவிடலாம்; எழுதிவிடலாம். தமிழ்எழுத்துக்களில் ஒரேஒலியில் குறில்நெடில்எழுத்துக்களும்; ஒரேஒலியில் அழுத்தாமலும், அழுத்தியும் உச்சரிக்கவேண்டிய எழுத்துக்களுமிருப்பதால் இவ்வெழுத்துக்கள் சொற்களில் இடம்பெறும்போது, அவைகளை வாசிப்பதிலும் எழுதுவதிலும் பிழைகள்ஏற்பட இடமேற்படுகின்றது. இதன்காரணமாகவே குறில் நெடில் எழுத்துக்களையும்; அழுத்தாமலும் அழுத்தியும்சொல்லவேண்டியஎழுத்துக்களையும் சொற்களில்புகுத்தி, சொற்களையும் இரட்டையிரட்டையாகக்கற்றுக்கொடுக்கவேண்டும். **சொற்களைப் பிழையின்றி நன்குவாசிக்கத்தெரியும்வரை அவைகளை எழுத்துக்கூட்டியே வாசிக்கச்செய்யவேண்டும். இது மிகமிக முக்கியமாகும்.**

இப்புத்தகத்தில் சொற்களுக்காகப் பலபாடங்கள்போடப்பட்டிருந்தாலும்,அவைகள்பொருள்கற்பதற்காகவோ, சொற்களைத்தெரிவதற்காகவோ போடப்பட்டவையல்ல. அவைகளில் அனேகம் சொற்களில் குறில்நெடில்பிழைகளும், அழுத்தாமலும் அழுத்தியும்சொல்லாததால் ஏற்படும் பிழைகளும் ஏற்படாமல் செய்வதற்காகவே போடப்பட்டவையாம். புத்தகத்தில் சொற்களுக்கானபாடங்கள்முடிந்தபிறகு, 22ஆம் பாடத்தில் மாணவர்கள் சொந்தத்தில் சொற்களைப்பிழையின்றிச்சொல்லவும், எழுதவும், வாசிக்கவும்வழிகாட்டியுள்ளோம். அப்பாடத்தில்கண்ட பயிற்சிகளைச்செய்யும்படிசெய்க.

சொற்றொடர்.

இருசொற்கள்சேரப்பெற்றதே சொற்றொடர். சொற்களைப்பிழையின்றிக்கற்றுக்கொடுத்துவிட்டால்,

சொற்றொடர்களை அவைகளின்ஒலிப்படியே மாணவர்கள் தாமாகவே வாசித்துவிடுவார்கள்; எழுதிவிடுவார்கள். சொற்றொடர்களில் அதிகம் இயல்புச்சொற்றொடராகவேயிருக்கும். சில சொற்றொடர்களில் இருசொற்களுக்கிடையில் ஏதாவதொருமெய்யெழுத்து அவற்றின்ஒலிப்படி தோன்றியிருக்கும்; சிலசொற்றொடர்களில் ஏதாவதொருமெய்யெழுத்து கெட்டிருக்கும்; இன்னுஞ்சிலசொற்றொடர்களில் ஏதாவதொருமெய்யெழுத்து வேறொருமெய்யெழுத்தாக மாறியிருக்கும். இவைகள் எவ்வாறு இவ்வாறெல்லாம் மாறுமென்பதை முன்கூட்டியேகற்றுக்கொடுத்துவிட்டால், சொற்றொடர்களிலும் மாணவர்களுக்குப்பிழைகள் ஏற்படா. சொற்றொடர்களைப்பிழையின்றி நன்கு வாசிக்கத் தெரியும்வரை, அவைகளையும் எழுத்துக்கூட்டியேவாசிக்கச் செய்யவேண்டும். இப்புத்தகத்திலுள்ளசொற்றொடர்ப்பயிற்சிகளை மாணவர்கள்செய்வதுடன், செய்யுட்களிலுள்ள சொற்றொடர்களையும் பொறுக்கியெடுத்து அவைகளைப் பிரித்துப்பார்த்தும் பயிற்சிபெறவேண்டும்.

வாக்கியம்.

தமிழ்மொழிக்கு, அதன்எழுத்துக்களைக்கற்றுவிட்டால் அதன்சொல், சொற்றொடர், வாக்கியம் ஆகியவைகளையும் பிழையின்றிவாசிக்கவும், எழுதவும்முடியுமென்பது ஒருபுறமிருக்க, அதன்பெயர்ச்சொல்லும், வினைச்சொல்லும் மிகமிக எளிதானஇலக்கணவரம்பிற்குள் அமைந்திருக்கின்றன. எந்தமொழிக்கும் பெயர்ச்சொல்லும்வினைசொல்லுந்தான் முக்கியம். இவை இலக்கணவரம்பிற்குள் அமைந்துவிடுமானால் இலக்கணங்கற்பதும் எளிதாகும்.

தமிழ்ச்சொல்லுடன் வேற்றுமையுருபுகளை ஏற்றிப்பார்த்து, அது பெயர்ச்சொல்லா அல்லது வினைச்சொல்லா என்பதை எளிதில் தெரிந்துகொள்ளலாம். எங்ஙனமெனில், தமிழ்மொழியில் பெயர்ச்சொற்கள் மட்டுந்தான் வேற்றுமையுருபுகளைஏற்கும்; வினைச்சொற்கள் ஏற்கா. பெயர்ச்சொற்களுடன் வேற்றுமையுருபுகளைச்சேர்த்து அமைத்திருப்பதை 34ஆம் பாடத்தில்பார்க்க.

பெயர்ச்சொல் மாறும்போது, அச்சொல்லில், முன்னாலுள்ளஎழுத்துக்கள் அப்படியேயிருக்க, கடைசி

லுள்ளஎழுத்துக்களே மாறும். (உதாரணம்) இராமன்+ஐ= இராமனை. வெவ்வேறானகடைசியெழுத்தைவைத்து 31விதமான பெயர்ச்சொற்களுடன் வேற்றுமையுருபுகளைச்சேர்த்துச்சொல்லத் தெரிந்துவிட்டால், எந்தப்பெயர்ச்சொல்லுடனும் வேற்றுமையுருபுகளைச்சேர்த்துச்சொல்லிவிடலாம். ஒவ்வொருபெயர்ச்சொல்லுடனும் வேற்றுமையுருபுகளைச்சேர்த்துச்சொல்லிக்கற்கவேண்டுமென்பதில்லை. 34ஆம்பாடத்திற்கண்ட 31பெயர்ச்சொற்களை மட்டும் கற்றால்போதும்.

ஒருவினைச்சொல்லானது அதன்பகுதியைக்கொண்டு பலவிதமானமாறுதல்களையடையும். 34 விதமான வினைப்பகுதிகள் பலவிதங்களில் மாறுதலடைவதைத்தெரிந்துகொண்டால், எந்தவினைப்பகுதியையும் பலவிதங்களில் சொல்லத் தெரிந்துகொள்ளலாம். இப்புத்தகத்தில் 36ஆம் பாடத்தில் 34விதமான வினைப்பகுதிகளில் ஒவ்வொன்றும் 27வகை வினைமுற்றுக்களாகமாறும்விதத்தைமட்டும் காட்டியுள்ளோம். மற்றவைகள் எங்கள் இலக்கணப்புத்தகத்தில் காட்டப்பெறும்.

தமிழில் ஒருவினைமுற்று ஏககாலத்தில் திணை, பால், எண், இடம், காலம் ஆகிய ஐந்தையும்காட்டும். உதாரணமாக, "போனான்" என்ற வினைமுற்று உயர்திணையா, அஃறிணையா என்பதையும்; ஆணா, பெண்ணா என்பதையும்; ஒருமையா, பன்மையாஎன்பதையும்; தன்மையா, முன்னிலையா, படர்க்கையா என்பதையும்; இறந்தகாலமா, நிகழ்காலமா, எதிர்காலமாஎன்பதையும் ஏககாலத்தில்காட்டுகின்றது. வினைமுற்றே பயனிலையாகும். இது எழுவாயையும் காட்டும். தமிழுக்கு வினைமுற்று பயனிலையாகநின்று எழுவாயைத்திட்டமாகக்காட்டுவதனால் எளிதாக சொந்தத்தில் ஏராளமான வா. கியங்களைப்பிழையின்றிச்சொல்லவும், எழுதவும்முடிகின்றது சொந்தத்தில் ஏராளமான வாக்கியங்களை அமைக்கவும் இப்புத்தகத்தில் வழிகாட்டியுள்ளோம். 38, 39ஆம் பாடங்களைப் பார்க்க.

ஆங்கிலத்தில் வினைச்சொல் காலத்தை மட்டுந்தான்காட்டும். திணை, பால், எண், இடம்முதலியவைகளைக்காட்டாது. ஆகையால்ஆங்கிலத்தில்வினைச்சொல்லைவைத்து தமிழ்மொழியைப்போல, சொந்தத்தில் வாக்கியமுண்டாக்க முடியாது.

தமிழில் ஒருவினைமுற்றைவைத்து சொந்தத்தில் பலவிதமானவாக்கியங்களை அமைக்கலாம். இப்புத்தகத்தில் ஒருவினைமுற்றைவைத்து 27சிறுவாக்கியங்களும்; அந்த27சிறுவாக்கியங்களைவைத்து 27பெரியவாக்கியங்களும் அமைக்கும்விதத்தை 39ஆம்பாடத்திற்காட்டியுள்ளோம். இந்த உதாரணங்களைவைத்துக்கொண்டு மாணவர்களை சொந்தத்தில் கணக்கற்ற வாக்கியங்களை அமைக்கச்செய்யவும்.

இவைதவிர பெயர்ச்சொல்லுடன் வேற்றுமையுருபுகளைச்சேர்த்துசொந்தத்தில் ஏராளமானவாக்கியங்கள் அமைக்க 42, 43, 44, 45, 46ஆம்பாடங்களிலும்; சொந்தத்தில் சிறுகட்டுரைகள்எழுத 47, 48, 49ஆம்பாடங்களிலும்; சொந்தத்தில் வியாசங்கள்எழுத 50, 51ஆம்பாடங்களிலும்; சொந்தத்தில் கடிதங்கள்எழுத 52ஆம்பாடத்திலும் வழிகாட்டியுள்ளோம். இவவகளைப்பின்பற்றி சொந்தத்தில் ஏராளமானவாக்கியங்கள் அமைக்கவும், கட்டுரைகள்எழுதவும், கடிதங்கள்எழுதவும் மாணவர்களுக்குப்பயிற்சிகொடுக்கவேண்டும்.

வாக்கியங்களைப்பிழையின்றி நன்கு வாசிக்கத்தெரியும்வரை மௌனவாசிப்பு கூடவேகூடாது. செந்தமிழ் வாசிப்புப்பழக்கத்தினால்தான் ஏற்படமுடியும். தமிழுக்கு எழுத்தொலியும், சொல்லொலியும்ஒன்றாக இருப்பதால், சொற்களைக்கொச்சையாகப்பேசுவதாலும், பிழையாக உச்சரிப்பதாலும், அவைகளை அப்படியேஎழுதிவிட இடமுண்டு. **கொச்சையாகப்பேசுவதாலும், பிழையாகஉச்சரிப்பதாலும் ஏற்படும் பிழைகளை ஏராளமான வாசிப்புப்பயிற்சி ஒன்றினால்தான் போக்கமுடியும்.** ஏராளமானபுத்தகங்களையும், பத்திரிகைகளையும் வாய்விட்டுவாசிப்பதனால் சொற்களைத்திருத்தமாகச்சொல்லமுடிவதுடன், அவைகளைப்பிழையில்லாமல்பேசவும், எழுதவும் முடிகிறது. "செந்தமிழும் நாப்பழக்கமன்றோ?"

வாக்கியத்தில் கடைப்பிடிக்கவேண்டிய விதிகள்.

ஒரு வாக்கியத்தின்பொருளை எளிதில் தெரிந்துகொள்வதற்கு அதில் நிறுத்தற்புள்ளிகள் போடவேண்டியஇடங்களில் போட்டும்; குறிகள்போடவேண்டிய இடங்களில் அவைகளைப்போட்டும்எழுதவேண்டும்; சொற்றொடரில் மெய்யெழுத்திற்குப்பிறகு இடம்போட்டுஎழுதக்கூடாது.

வாக்கியத்தில் வினைமுற்றுக்குப்பிறகு இந்த (.) அடையாளமாகிய முற்றுப்புள்ளியையும், சிலவாக்கியங்களில் பொருள்பற்றி வினைமுற்றுக்குப்பிறகு இந்த (;) அடையாளமாகிய அரைநிறுத்தற்புள்ளியையும், இடையிடையே பொருள்பற்றி இந்த (,) அடையாளமாகிய கால்நிறுத்தற்புள்ளியையும் போடவேண்டும். வாக்கியத்தின்இடையில் கால்நிறுத்தற்புள்ளிகளை அதிகமாய்ப்போடுவதற்குப்பதிலாக இருசொற்களுக்கிடையில் சிறிது இடம்போட்டு எழுதுவதை அரைக்கால் நிறுத்தற்புள்ளியென வைத்துக்கொள்ளலாம்.

ஒருசொல்லோ அல்லது வாக்கியமோ கேள்வியைக்குறிப்பதாக இருந்தால் அதன் இறுதியில் இந்த (?) அடையாளமாகிய கேள்விக்குறியையும், ஆச்சரியத்தைக்குறிப்பதாக இருந்தால் இந்த (!) அடையாளமாகிய ஆச்சரியக்குறியையும் போடவேண்டும்.

மேலே குறிப்பிடப்பட்டவைகள் தவிர, எழுதும்விஷயங்களைப்பத்திபத்தியாகப்பிரித்து எழுதவேண்டும். பத்தியை வரியின்முதலில் ஆரம்பித்துஎழுதாமல் மத்தியில் ஆரம்பித்து எழுதவேண்டும்.

மேலேகண்டவிதிகளைப்பின்பற்றாமல் ஒவ்வொருவரும் தங்கள்தங்கள் இஷ்டம்போல் வாக்கியங்களில் இடம்போட்டும், முக்கியமாக சொற்றொடரில் மெய்யெழுத்துக்குப்பிறகு இடம்போட்டும், நிறுத்தற்புள்ளிகள் போடவேண்டியஇடங்களில் போடாமலும் எழுதுகிறார்கள். இக்காரணங்களால் வாக்கியங்களின் பொருள் விளங்காமல்போவதுடன் தாளும் அடிகூலியும் அதிகமாகின்றன. நாம் இவைகளைத் தவிர்க்கவேண்டும்.

வாக்கியங்களில் எழுத்துக்களைப்பொடியாக எழுதவேண்டும்; பொடியாகவும், பருமனாகவும் கலந்து எழுதக்கூடாது. எழுத்துக்கள் கோட்டிற்குமேல் கோட்டைத் தொட்டுக்கொண்டிருக்கவேண்டும். இதை 9ஆம்பாடத்தைப் பார்த்துத்தெரிந்துகொள்க.

மேலேகண்டவிதிகளைப்பின்பற்றி இப்புத்தகத்தின் முகவுரையும் அனுபந்தமும் அச்சடிக்கப்பட்டுள்ளன. அவைகளைப்பார்த்து நன்கு விளங்கிக்கொண்டு கடைப்பிடிக்கவேண்டும்.

—✷—

அனுபந்தம் 2.

பாடங்களின் உபயோகங்களும் அவைகளைக்கற்றுக்கொடுக்கும் விதமும்.

பாடம் 1.

இந்தப்பாடம், தமிழ்எழுத்துக்களை அழகாக எழுதுவதற்குக்கற்பிக்க ஏற்பட்டதாகும். ஒருமொழியின் எழுத்துக்களின்வடிவம் கோடுகளின்விதிக்குள் அமைந்துவிடுமானால், அவைகளைச்சுலபமாகவும், விரைவாகவும், அழகாகவும் எழுதிவிடலாம்.

தமிழ்எழுத்துக்கள் மொத்தம் 247 என்றாலும், உயிரெழுத்துக்கள் 12; மெய்யெழுத்துக்கள் 18; ஆய்தஎழுத்து 1; ஆக 31எழுத்துக்களுக்குத்தான் தனிவடிவம் உண்டு. உயிர்மெய்யெழுத்துக்கள் 216க்கும் தனிவடிவங்கள் கிடையா. அவைகள் 18மெய்யெழுத்துக்களின்வடிவங்களிலிருந்து உண்டாக்கப்பட்டவைகளே. இதை 2ஆம் பாடத்தைப் பார்த்துத்தெரிந்துகொள்ளலாம்.

முதற்பாடத்தில் உயிரெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும், கிரந்தமெய்யெழுத்துக்களும ஐந்துகோடுகளுக்குள் அமைந்திருப்பதைக்கவனிக்க. உயிரெழுத்துக்களில் அ, ஈ, உ, ஊ, எ, ஐ ஆகிய ஆறுஎழுத்துக்களும் மேற்கோடும் கீழ்க்கோடுமின்றி மூன்றுகோடுகளுக்குள்ளும்; ஆ, ஏ, ஒ, ஓ, ஔ

ஆகிய ஐந்துஎழுத்துக்களும் கீழ்க்கோட்டைச்சேர்த்து நான்கு கோடுகளுக்குள்ளும்; இ மேற்கோட்டைச்சேர்த்து நான்குகோடுகளுக்குள்ளும்; ஆய்தஎழுத்து மூன்றுகோடுகளுக்குள்ளும் அமைந்திருக்கின்றன. மெய்யெழுத்துக்களில் க், ங், ச், ட், ண், ப், ம், ய், ர், ல், வ், ள், ன் ஆகிய பதின்மூன்றுஎழுத்துக்கள் மேற்கோட்டைச்சேர்த்து நான்குகோடுகளுக்குள்ளும்; ஞ், த், ந், ழ், ற் ஆகிய ஐந்துஎழுத்துக்கள் ஐந்துகோடுகளுக்குள்ளும் அமைந்திருக்கின்றன. கிரந்தமெய்யெழுத்துக்களில் ஜ், ஸ் ஆகிய இரண்டெழுத்துக்கள் நான்குகோடுகளுக்குள்ளும்; ஷ், க்ஷ், ஹ் ஆகிய மூன்றுஎழுத்துக்கள் ஐந்துகோடுகளுக்குள்ளும் அமைந்திருக்கின்றன.

மேலேகண்டவாறு உயிரெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும், ஆய்தஎழுத்தும், கிரந்தமெய்யெழுத்துக்களும் குறிப்பிட்டகோடுகளுக்குள் அமைந்திருப்பதை மாணவர்கள் மனப்பாடம்செய்துகொள்ளவேண்டும். இப்படி மனப்பாடம்செய்துகொண்டால்தான், எழுத்துக்களை சுலபமாகவும், விரைவாகவும், அழகாகவும் எழுதமுடியும்.

பாடம் 2.

இந்தப்பாடம் அ-வரிமுதல் ம-வரி முடியவுள்ள 143எழுத்துக்களை அழகாக எழுதுவதற்குக்கற்பிக்க ஏற்பட்டதாகும்.

உயிரெழுத்துக்களும், மெய்யெழுத்துக்களும் கோடுகளுக்குள் அமைவதை முதற்பாடத்தில் மாணவர்கள் மனப்பாடம்செய்திருக்கிறார்கள். ஆகையால் இந்தப்பாடத்தில் உயிர்மெய்யெழுத்துக்கள் கோடுகளுக்குள் அமைவதை ஒவ்வொரு வரியாக மனப்பாடம்செய்யும்படி செய்க. க-முதல் கௌ-வரையிலுமுள்ள 12எழுத்துக்களில் க, கா, கூ, கை ஆகிய நான்குஎழுத்துக்கள் மூன்றுகோடுகளுக்குள்ளும்; கி, கீ, கெ, கே, கொ, கோ, கௌ ஆகிய ஏழுஎழுத்துக்கள் மேற்கோட்டைச்சேர்த்து நான்குகோடுகளுக்குள்ளும் அமைந்திருக்கின்றன. இதைப்போல, மற்றவரிகளிலும் எழுத்துக்கள் கோடுகளில் எவ்வாறு அமைந்திருக்கின்றனவென்பதைத்தெரிந்து அவற்றை மனப்பாடம்செய்யும்படி செய்க.

பாடம் 3.

இந்தப்பாடம் மிகமுக்கியமாகும். இதில் 143எழுத்துக்களில் ஒவ்வொருவரிசையும் ஒற்றைக்கோட்டில் அமைந்திருப்பதையும்; எழுத்துக்கள் கோட்டின்மேல் கோட்டைத்தொட்டுக்கொண்டிருப்பதையும்; ஆங்காங்கே நிறுத்தற்புள்ளிகள் போடப்பட்டிருப்பதையும் கவனிக்கும்படிசெய்க.

முதல்வரியில் ஆ, எ, ஒ, ஓ, ஔ ஆகிய எழுத்துக்களின்கீழ்ப்பாகங்கள்மட்டும் கோட்டிற்குக் கீழிருப்பதை நன்கு கவனிக்கும்படிசெய்க. இரண்டாவதுவரியில் கு-எழுத்தின் கீழ்ப்பாகமட்டும் கோட்டிற்குக் கீழிருப்பதைக் கவனிக்கும்படிசெய்க. மேலேகூறியவாறு மற்றவரிகளிலும் கோட்டிற்குக்கீழ்வரும் பாகங்களை நன்கு கவனித்து மனப்பாடம்செய்யும்படிசெய்க.

எழுத்துக்களின் ஒலிகளைக் கற்றுக்கொடுக்கும் விதம்.

கரும்பலகையில் ஒரு கோடுபோட்டுக்கொண்டு அதன்மேல் 3ஆம்பாடத்தின் முதல்வரியிலுள்ள அ, ஆ; இ, ஈ; உ, ஊ; எ, ஏ; ஐ ஆகிய ஒன்பதுஎழுத்துக்களைமட்டும் எழுதுக. எழுதும்போது பாடத்திலுள்ளபடி நிறுத்தற்புள்ளிகளைப்போடுக. எழுத்துக்கள் கோட்டைத்தொட்டுக்கொண்டிருக்கவேண்டும். கோட்டிற்குக்கீழ் வரவேண்டிய எழுத்துக்களின் கீழ்ப்பாகங்கள்மட்டும் கோட்டிற்குக்கீழ் வரவேண்டும். இவ்விதம் கரும்பலகையில் எழுதிப்போட்டு மாணவர்களை எழுத்துக்களை நன்கு கவனிக்கும்படி செய்துகொண்டு அ, ஆ, என்று இரட்டைஇரட்டையாகவும், குறிலைக்குறுக்கியும், நெடிலைநீட்டியும் ஆசிரியர் எழுத்துக்களைக்காட்டிக்கொண்டே சுத்தமாகச் சொல்லச்சொல்ல, பின் மாணவர்களும் அதன்படி சொல்ல வேண்டும். இரட்டைஇரட்டையாக என்றால் ஒரேதடவையில் இரண்டுஎழுத்துக்களையுமே சேர்த்துச்சொல்வதாம். ஆனால், ஐ-என்னும் எழுத்தைமட்டும் தனியாகச்சொல்லவேண்டும். குறிலெழுத்திற்குப்பின் கால்நிறுத்தற்புள்ளியும்; நெடிலெழுத்திற்குப் பின் அரைநிறுத்தற்புள்ளியும்; தனிநெடிலுக்குப்பின் முழுநிறுத்தற்புள்ளியும் போட்டு இரட்டைஇரட்டையாகவும், குறிலைக்குறுக்கியும், நெடிலைநீட்டியும் சொல்லிக்கொடுப்பதால் குறில், நெடில்

பிழைகள்ஏற்பட இடமில்லாமற்போவதுடன், எழுத்துக்களை விரைவில் சுலபமாகக்கற்றுக்கொடுத்தும்விடலாம்; கற்றதும் ஒருபோதும் மறக்காது.

ஆசிரியர் சொல்லச்சொல்ல, எல்லா மாணவர்களும் சேர்ந்து சொல்லத்தெரிந்தபின், ஒவ்வொரு மாணவருக்கும் தனித்தனியாகச்சொல்லத்தெரியவேண்டும்; பின்பு மனப்பாடமாகச்சொல்லத்தெரியவேண்டும். குறிப்பிட்டஎழுத்தினவடிவத்தையும், ஒலியையும் நன்கு தெரிந்துகொண்டார்களாவென்பதைப்பரீட்சித்துப்பார்க்கவேண்டும். பிறகு அதேவரியில் ஐ-க்குப்பின்னுள்ள ஒ, ஓ, ஔ, ஃ ஆகிய நான்கு எழுத்துக்களையும் எழுதிப்போட்டு முதல் ஒன்பதுஎழுத்துக்களின் ஒலியைக் கற்றுக்கொடுத்ததுபோலவே, கற்றுக்கொடுக்கவும். ஒ, ஓ ஆகிய எழுத்துக்களை இரட்டையாகவும், ஔ, ஃ ஆகிய எழுத்துக்களைத் தனித்தனியாகவும் சொல்லவேண்டும். இந்த நானகுஎழுத்துக்களையும் மனப்பாடமாகச்சொல்லத்தெரிந்தவுடன் ஒவ்வொரு மாணவனுக்கும் முதல்வரியிலுள்ள 13எழுத்துக்களையும் ஒரே தடவையில் மனப்பாடமாகச்சொல்லத்தெரியவேண்டும்.

அதன்பிறகு க-வரிஎழுத்துக்களை எழுதிப்போட்டு அவற்றின் ஒலிகளைக்கற்றுக்கொடுக்கவேண்டும். இவ்வாறே மற்றவரிகளையும் ஒன்றன்பின்ஒன்றாக எழுதிப்போட்டு அவற்றின் ஒலிகளைக்கற்றுக்கொடுக்கவேண்டும். ண-வரிஎழுத்துக்களை அழுத்திச்சொல்லவேண்டும். முதல்வரியிலுள்ள எழுத்துகளை இருபிரிவாகக்கற்றுக்கொடுத்ததுபோல மற்றவரிகளிலுள்ள எழுத்துக்களையும் இருபிரிவாகக்கற்றுக்கொடுக்கவேண்டுமென்பதில்லை. ஆனால் ஒவ்வொருவரியிலும் எழுத்துக்களுக்குப்பின் நிறுத்தற்புள்ளிகள்போட்டு எழுதியே கற்பிக்கவேண்டும். இதை மறந்துவிடக்கூடாது.

எல்லாவரிகளிலும் உயிரெழுத்துக்களின்ஒலியே சேர்ந்துவருவதால், உயிரெழுத்துக்களை நன்கு மனப்பாடமாகச்சொல்லத்தெரிந்துவிட்டால், மற்றவரிகளிலுள்ள எல்லாஎழுத்துக்களையும் உடனே எளிதாகச்சொல்லிவிடலாம். க, ங; ச, ஞ; ட, ண, த, ந; ப, ம ஆகிய பத்துஎழுத்துக்களை மட்டும் இரட்டைஇரட்டையாக மனப்பாடமாகச்சொல்லத்

தெரியவேண்டும். இப்படி இரட்டைஇரட்டையாகச்சொல்வதால், எழுத்துக்கள் உடனே மனப்பாடமாவதுடன் மறக்கவும் செய்யாது

ங-வரிஎழுத்துக்களின்ஒலி, தொண்டையில் க-வரி எழுத்துக்களின்ஒலி உண்டாகுமிடத்திலேயே உண்டாகின்றது. க-வரிஎழுத்துக்களை உச்சரிக்கும்போது நாக்கு வாயின்மேற்பாகத்தைத்தொடுவதுபோலவே ங-வரிஎழுத்துக்களை உச்சரிக்கும்போதும் நாக்கு வாயின்மேற்பாகத்தைத்தொடவேண்டும். ச-வரிஎழுத்துக்களை உச்சரிக்கும்போது நாக்கு மேல்வாயைத் தொடுவதுபோலவே ஞ-வரிஎழுத்துக்களை உச்சரிக்கும்போதும் தொடவேண்டும். ங-வரிஎழுத்துக்களைச்சரியாகஉச்சரிக்கத் தெரியாதவர்களை க-எனும்எழுத்தைப்பலதடவைஉச்சரிக்கச் செய்து அதன்பின் ங-வை உச்சரிக்கச்செய்யவேண்டும். அவ்வாறே ஞ-வரிஎழுத்துக்களைச்சரியாகஉச்சரிக்கத்தெரியாதவர்களை ச-எனும்எழுத்தைப்பலதடவைஉச்சரிக்கச்செய்து அதன்பின் ஞ-வை உச்சரிக்கச்செய்யவேண்டும்.

எழுத்துக்களின் வடிவத்தைக் கற்றுக்கொடுக்கும் விதம்.

மாணவர்களுக்கு எழுத்துக்களின் ஒலியைக்கற்பிக்கும்போதே அவைகளின்வடிவத்தையும் கற்பிக்கவேண்டும். ஒவ்வொருஎழுத்தையும் காட்டிக்கொண்டு அதன் ஒலியைச்சொல்லி அதன்படி சொல்லும்படிசெய்க. குறிப்பிட்ட எழுத்தின்ஒலியைச்சொன்னவுடன்அதன்வடிவத்தைக்காட்டவும், வடிவத்தைக் காட்டியவுடன் அதன் ஒலியைச்சொல்லவும் தெரியும்வரை ஒவ்வொருவரியாக எழுத்துக்களில் பயிற்சி கொடுக்கவேண்டும்.

3-ஆம்பாடத்தில்கண்டபடி 143எழுத்துக்களையும் கரும்பலகையில் ஒற்றைக்கோடுகளில் அழகாக எழுதிவைத்துக்கொண்டு தினமும் அவைகளைக்கற்றுக்கொடுத்துவரவேண்டும். தினமும் எழுத்துக்களைக்கற்றுக்கொடுப்பதற்கு அவைகளை கனத்த பெரிய சாணிநிறஅட்டையில் சாக்கட்டியால் கோடுபோட்டு எழுதிவைத்துக்கொள்ளவேண்டும். அவ்வட்டை

வளையாமலிருக்கும்பொருட்டு அதன் நான்குபக்கங்களிலும் சூடம்பலகைச்சக்கைகளை ஆணிகொண்டுஅடித்துவைத்துக்கொள்ள வேண்டும். இதுநீங்கலாக இதைப்போலவே, பெரியவெள்ளைத் தாளில் கோடுகள்போட்டு பெரியஎழுத்துக்களாகஎழுதி, தாளின் பின்புறம் மெல்லிய துணியைஒட்டி, கீழும்மேலும் அதிகக் கனமில்லாத சூடம்பலகைச்சக்கைகளை அறைந்துவைத்துக் கொள்ளலாம். இது சுருட்டிவைத்துக்கொள்ள வசதியாக இருப்பதுடன், நீண்டநாட்கள்வரை கெட்டுப்போகாமலும் இருக்கும். உச்சரிப்புவிளக்கப்படங்களுடன்கூடிய 247எழுத்துக்கள் கொண்ட அட்டைகள் எங்களிடம் சகாயமானவிலைக்குக் கிடைக்கும்.

எழுத்துக்களை எழுதக்கற்றுக்கொடுக்கும் விதம்.

சிலேட்டுக்குச்சியைக்கூர்மையாக்கிக் கொண்டு, சிலேட்டில் அடிக்குச்சியைவைத்து கோட்டிற்குக் கோடு தூரம் ஒன்றுபோலிருக்கும்படி 2ஆம்பாடத்தில்கண்டபடி ஐந்துகோடுகள் போடச்செய்யவேண்டும். இப்படி ஐந்துகோடுகளை பலதடவைகள் சரியாகவும், விரைவாகவும் போடப்பழக்குவது அழகியஎழுத்துஎழுத மாணவர்களுக்கு மிகமிக உதவியாகஇருக்கும். சிலேட்டில் அடிக்குச்சியைக்கொண்டு சரியாகக் கோடுகள்போடப்பழகியபின், ரூல்தடியைக்கொண்டும் கோடுகள் போடப்பழக்கவேண்டும். சிலேட்டில் பழகியபின்பு, தாளிலும் இவ்வாறே அடிக்குச்சியாலும், ரூல்தடியாலும் கோடுகள்போடப் பழக்கவேண்டும். இது தாளில் அழகிய எழுத்து எழுத உதவியாகஇருக்கும். இதுவே அழகியஎழுத்து எழுதப்பழகுவதற்குச் சிறந்தமுறையாகும்.

சிலேட்டில் 5கோடுகள்போட்டுப்பழகியவுடன், அவைகளில் 2ஆம்பாடத்தில்கண்டபடி முதல்வரியை எழுதும்படிசெய்க. சரியாக எழுதத்தெரியாதவர்களுக்கு எழுதிக்கொடுத்து அவ்வெழுத்துக்களின்மேல் கூர்மையானசிலேட்டுக்குச்சியால் எழுதச்செய்க. (ஆறுவயதிற்குக்கீழ்ப்பட்ட பிள்ளைகளுக்கு எதையும் எழுதக்கற்றுக்கொடுக்கக்கூடாது. கற்றுக் கொடுத்தால் கெடுதல்கள் ஏற்படும்.)

மாணவர்கள் முதல்வரியை எழுதக் கற்றவுடன், இரண்டாவது வரியை எழுதச்செய்யவேண்டும். இப்படியே மற்றவரிகளையும் எழுதச்செய்யவேண்டும்.

மேலேகூறியவாறு ஐந்துகோடுகளில் 143 எழுத்துக்களை எழுதக்கற்றுக்கொடுத்தவுடன், அவைகளை மேற்கோடும் கீழ்க்கோடுமின்றி மூன்றுகோடுகளில் எழுதக்கற்றுக்கொடுக்கவேண்டும்.

கடைசியில் மூன்ரும்பாடத்திலுள்ளபடி சிலேட்டில் சிலேட்டுக்குச்சியால் ஒருகோடுபோட்டு அதில் எழுதக்கற்றுக்கொடுக்கவேண்டும். சிலேட்டில் ஒருகோட்டில் எழுதக்கற்றவுடன் குடைக்கம்பியைக் கூர்மையாக்கிக்கொண்டு சிலேட்டில் சன்னமாக ஒற்றைக்கோடுகள் போட்டுக்கொடுக்க வேண்டும். கோட்டிற்குக்கோடு இடைவெளி $\frac{3}{8}$ அங்குலம் இருக்கவேண்டும்.

சிலேட்டில் ஒருகோட்டில் எழுதக் கற்றவுடன் மேற்கூறியபடியே கோடுகள்போடாததாளில் கோடுகள்போட்டு பென்சிலால் எழுத்துக்களை எழுதக்கற்றுக்கொடுக்க வேண்டும். தாளில் எழுதப்பழகியபின், அச்சிஞல் ஒருகோடு போடப்பட்டுள்ள நோட்டில் எழுதச்செய்யவேண்டும்.

எங்கள் தமிழ்கற்கும்முறையில் 22ஆம் பாடத்தில்கண்டபடி சொந்தத்தில்தான் சொற்களை எழுத வேண்டுமாகையால், 3ஆம்பாடத்தில்கண்டபடி 143எழுத்துக்களையும் சிலேட்டிலும், நோட்டிலும் தினமும் வீட்டிலிருந்து எழுதிவரும்படி செய்யவேண்டும். எழுத்துக்கள், வாக்கியத்தில் எழுதப்படுவதுபோல, சிறுசிறு எழுத்துக்களாக இருக்கவேண்டும். எழுத்துக்களை நிறுத்தற்புள்ளிகள்போட்டு எழுதவேண்டும். எங்கள்முறைப்படி எழுத்துக்களைத்தினமும் எழுதுவதஞல், தமிழைப்பிழையின்றிஎழுதமுடிவதுடன், அழகாகவும்எழுதஇயலும். எங்கள்முறை தமிழ்கற்பதில் ஒருபெரும்புரட்சியை உண்டாக்கக்கூடியதாகும்.

மெய்யெழுத்துக்களுடன் உயிரெழுத்துக்கள்சேர்ந்து உயிர்மெய்யெழுத்துக்களாகும்பொழுது மெய்யெழுத்துக்களின்மேலுள்ள புள்ளிகள் நீங்கிவிடும். மெய்யெழுத்துக்களுடன் ஆ-சேரும்போது மெய்யெழுத்துக்களின்மேலுள்ள புள்ளிகள் இல்லாமல் அவற்றின்பின்னால் ா என்னும் துணை எழுத்தைப்போடவேண்டும். ண்-உடன்மட்டும் அத்துணைஎழுத்தைப்போடக்கூடாது. அதை ணா என்று எழுதவேண்டும். ண-வரிஎழுத்துக்களை அழுத்திச்சொல்லவேண்டுமென்பதை நன்கு விளக்குக.

“மெய்யெழுத்துக்களுடன் எ-சேரும்போது புள்ளியை நீக்கிவிட்டு ெ என்னும் ஒற்றைக்கொம்பை எழுத்திற்குமுன்னால் போடவேண்டும். ஏ-சேரும்போது ே என்னும் இரட்டைக்கொம்பை எழுத்திற்குமுன்னால் போடவேண்டும். ஐ-சேரும்போது ை என்னும் விலங்குவடிவத்தை எழுத்திற்குமுன்னால் போடவேண்டும். ஆனால், ண்-என்றமெய்யெழுத்துடன்சேரும்போதுமட்டும் ணை என்று எழுதவேண்டும். ஒ-சேரும்போது புள்ளியை நீக்கிவிட்டு எழுத்திற்குமுன்னால் ெ இந்த அடையாளமாகிய ஒற்றைக்கொம்பையும், பின்னால் ா இந்த அடையாளமாகிய துணைஎழுத்தையும் போடவேண்டும். ஓ சேரும்போது புள்ளியை நீக்கிவிட்டு முன்னால் ே இந்த அடையாளமாகிய இரட்டைக்கொம்பையும், பின்னால் ா இந்த அடையாளமாகிய துணைஎழுத்தையும் போடவேண்டும். ண்-உடன் ஒ, ஓ சேரும்போதுமட்டும் முறையே ணொ, ணோ என்று எழுதவேண்டும்” என்ற முக்கியவிஷயங்களை நன்கு விளக்கி அவைகள் எல்லாவற்றையும் அவர்களை மனப்பாடம்செய்யும்படி செய்துவிட்டால், எழுத்துக்களை எழுதும்போது ஒருபிழைகூட விடமாட்டார்கள். இது மிகமிக முக்கியமாகும்.

பாடம் 4.

தமிழ்எழுத்துக்களில் ஒரேஒலியில் குறில், நெடில் எழுத்துக்களிருப்பதால், அவை சொற்களில் இடம்பெற்றுவரும்போது அவற்றின் ஒலிவித்தியாசத்தையும், வடிவவித்தியாசத்தையும் தெரிந்துகொள்ளாவிடில் அச்சொற்களில் குறில், நெடில்பிழைகள் ஏற்பட இடமுண்டு. இப்பிழைகள் ஏற்படாமல்செய்வதற்கு ஏற்படுத்தப்பட்ட பாடங்களே 4, 5, 6, 7 ஆகியவை.

4-ஆம்பாடத்தில் ஈரெழுத்துக்குறில்நெடில்சொற்கள்மட்டும் போட்டுள்ளோம். அவைகள் ஒவ்வொன்றிலும் முதலெழுத்துமட்டும் குறில் அல்லது நெடில்எழுத்தாகஇருக்கும்; இரண்டாவதுஎழுத்து இரண்டிலும் ஒன்றுபோலவே இருக்கும். எனவே, இந்தப்பாடத்திலுள்ள சொற்களை இரட்டைஇரட்டையாக உச்சரித்தால் அவ்வொலி முறையே குறில்நெடில்சொற்களின் ஒலியாகவே இருக்கும். இக்காரணம்பற்றியே இப்பாடத்தின் தலைப்பை இரண்டெழுத்துக் குறில்நெடில்சொற்கள் என்று எழுதியுள்ளோம்.

அடி, ஆடி; அணி, ஆணி; என்று சொற்களை ஆசிரியர், இரட்டைஇரட்டையாகச்சொன்னவுடன், மாணவர்களும் அவ்வாறே சொல்லவேண்டும் ஆடி என்பதை நீட்டிச்சொல்லவேண்டும். அதன்பின், அடி என்று சொன்னவுடன் அதன் நெடிலாகிய ஆடி என்ற சொல்லைச்சொல்லத் தெரியவேண்டும். ஆடி என்றசொல்லைச்சொன்னவுடன், அதன் குறிலாகிய அடி என்ற சொல்லைச்சொல்லத்தெரியவேண்டும். இப்படியே 4-ஆம்பாடத்திலுள்ள சொற்கள்முழுவதிலும் பயிற்சி கொடுக்கவேண்டும்.

சொற்களின்ஒலிமூலம், குறில், நெடில் சொற்களின் ஒலியைக்கற்றுக்கொடுத்தவுடன், அவைகளைக்கரும்பலகையில் எழுதிப்போட்டு, எழுத்துக்கூட்டிச்சொல்லும்படி செய்க். கடைசியில் புத்தகத்தைப்பார்த்து எழுத்துக்கூட்டி வாசிக்கும்படிசெய்க. நெடிலை அதிகமாக நீட்டிச்சொல்லும்படி செய்யவேண்டுவது மிகவும்முக்கியமானதாகும் பாடத்தைப் பார்த்து சிலேட்டிலோ, நோட்டிலோ எழுதச்சொல்லவேண்டுவதில்லை, எழுத்துக்கூட்டிமட்டும் வாசிக்கச்செய்யவேண்டும்.

பாடம் 5.

இந்தப்பாடத்தை, நான்காம்பாடத்தைப்போலவே, கற்றுக்கொடுக்கவேண்டும் மாணவர்கள் 4ஆம் பாடத்திலுள்ள ஈரெழுத்துச்சொற்களைக்கற்றிருப்பதால், இந்தப் பாடத்திலுள்ள மூவெழுத்துச்சொற்களை எளிதில் கற்றுவிடுவார்கள்.

பாடம் 6.

இந்தப்பாடமும் சொற்களில் குறில் நெடில்பிழைகள்ஏற்படாமல்செய்வதற்கே ஏற்பட்டதாகும். 4, 5ஆம்பாடங்களிலுள்ள சொற்கள் குறில், நெடில்ஒலிகளைக் கொண்டவையாம். ஆனால் இந்தப்பாடத்திலோ, சொற்களின் முதலெழுத்துக்கள்மட்டும் குறில் அல்லது நெடிலாகவும், மற்ற இரண்டெழுத்துக்கள் சொற்களின் ஒலிப்படி ம-வரிமுடியவுள்ள எழுத்துக்களுக்குள் எந்தஎழுத்துக்களாகவும் இருக்கும். இந்தப் பாடத்திலுள்ள சொற்கள் குறில்நெடில்சொற்களாக இல்லாத படியால், 4, 5ஆம்பாடங்களைப்போல், சொற்களின்ஒலியை இரட்டைஇரட்டையாகச் சொல்லவேண்டியதில்லை. ஆனால், சொற்களைக்கரும்பலகையில்எழுதிப்போட்டு, அவைகளை எழுத்துக் கூட்டிச்சொல்லும்படிசெய்யவேண்டும் எழுத்துக்கூட்டும்போது, நெடில்எழுத்துக்களை அதிகமாக நீட்டிச்சொல்லும்படி செய்வதை மறந்துவிடக்கூடாது. மாணவர்களுக்கு கரும்பலகையில் எழுதிப் போட்டசொற்களை எழுத்துக்கூட்டிச்சொல்லத்தெரிந்தவுடன், புத்தகத்தைப்பார்த்து எழுத்துக்கூட்டி வாசிக்கச்செய்யவேண்டும்.

பாடம் 7.

இந்தப்பாடத்தை 6ஆம்பாடத்தைப் போலவே, கற்றுக்கொடுக்கவேண்டும். இந்தப்பாடமும் சொற்களில் குறில், நெடில்பிழைகள்ஏற்படாமல்செய்வதற்கே ஏற்பட்டதாகும். மாணவர்கள் 6ஆம்பாடத்திலுள்ள மூவெழுத்துச் சொற்களை எழுத்துக்கூட்டிச்சொல்லப்பழகியிருப்பதால், இந்தப் பாடத்திலுள்ள நான்கெழுத்துச்சொற்களைச்சுலபமாக எழுத்துக் கூட்டிச்சொல்லிவிடுவார்கள்.

பாடம் 8.

இந்தப்பாடத்தில் 247எழுத்துக்களும் ஐந்துகோடுகளுக்குள் அமைத்துக்காட்டப்பட்டிருக்கின்றன. 2ஆம்பாடத்தில் 143எழுத்துக்கள்மட்டும் ஐந்துகோடுகளுக்குள் அமைந்திருப்பதை மாணவர்கள் மனப்பாடம் செய்ததுபோல், இந்தப்பாடத்தில் ய-வரிமுதல் ன-வரிமுடியவுள்ள 104 எழுத்துக்கள் ஐந்துகோடுகளுக்குள் அமைந்திருப்பதையும் மனப்பாடம் செய்யும்படி சொல்லவேண்டும்.

ய-வரியில் ய யா, யை ஆகிய மூன்று எழுத்துக்கள் மூன்றுகோடுகளுக்குள்ளும், யி, யீ, யெ, யே, யொ, யோ, யௌ ஆகிய ஏழுஎழுத்துக்கள் மேற்கோட்டைச் சேர்த்து நான்குகோடுகளுக்குள்ளும், யு, யூ ஆகிய இரண்டு எழுத்துக்கள் கீழ்க்கோட்டைச்சேர்த்து நான்குகோடுகளுக்குள்ளும் அமைந்திருக்கின்றன. இப்படிஅமைந்திருப்பதைக் கவனித்து அவற்றை மனப்பாடம்செய்யச்செய்வதுடன், இதைப் போல் மற்றவரிகளிலுள்ள எழுத்துக்களும் அவ்வாறே கோட்டிற்குள் அமைந்திருப்பதைக்கவனித்து அவற்றையும் மனப்பாடம் செய்யும்படி சொல்லவேண்டும்.

பாடம் 9.

இந்தப்பாடத்தில் 247எழுத்துக்கள் ஒற்றைக்கோடுகளில் அமைந்திருப்பது காட்டப்பட்டுள்ளது. 3ஆம்பாடத்தில் 143எழுத்துக்கள் ஒற்றைக்கோடுகளில் அமைந்திருப்பதை மாணவர்கள் முன்கூட்டியே மனப்பாடம்செய்திருக்கிறார்கள். திரும்பவும் அந்தஅமைப்புகளை மனப்பாடம் செய்யச் சொல்க; அவைகளை ஒற்றைக்கோடுகளில் எழுதும்படிசெய்க.

ய-வரிமுதல் ன-வரிமுடியவுள்ள எழுத்துக்களைக்கரும்பலகையில் ஒற்றைக்கோடுகளில் எழுதிப் போடுக. 3ஆம்பாடத்தில் கற்றுக்கொடுத்ததுபோலவே, முதலாவதாக எழுத்துக்களின்ஒலியையும்; இரண்டாவதாக அவற்றின்வடிவத்தையும்; மூன்றாவதாக அவற்றை அழகாக எழுதும் விதத்தையும் கற்றுக்கொடுக்கவேண்டும் மாணவர்கள் ய, ர, ல, வ, ழ, ள, ற, ன ஆகியஎழுத்துக்களை இரட்டைஇரட்டையாக மனப்பாடமாகச்சொல்லத்தெரிந்திருக்கவேண்டும்.

ய-வரிமுதல் ன-வரிமுடியவுள்ள எழுத்துக்கள், ஒரேஒலியில் குறில்நெடில்எழுத்துக்களையும் அழுத்தாமலும், அழுத்தியும் சொல்லவேண்டியஎழுத்துக்களையும் கொண்டவைகளாக இருக்கின்றன. ஏற்கெனவே 143எழுத்துக்களுக்குள்வரும் குறில், நெடில்எழுத்துக்களைக்கற்ற பழக்கமிருப்பதால் இந்த 104எழுத்துக்களுக்குள்வரும் குறில், நெடில் எழுத்துக்களை மாணவர்கள் எளிதில் கற்றுவிடுவார்கள். இந்த 104எழுத்துக்களுக்குள் ஒரேஒலியில் அழுத்தாமலும் அழுத்தியும்

சொல்லவேண்டிய எழுத்துக்களைமட்டும் நன்கு கற்றக்கொடுக்க வேண்டும். இவைகளை நன்கு கற்றுக்கொடுத்துவிட்டால், இந்தப்பிழைகள்வாரா. இதற்கு 10ஆம்பாடத்திலுள்ள உச்சரிப்பு விளக்கப்படங்களை உதவிக்குவைத்துக்கொள்ளவேண்டும்.

பாடம் 10.

தமிழ்கற்கும்போது, இந்தப்பாடத்திலுள்ள மூன்றுபடங்கள்தான் அவசியம்வேண்டும். வேறுபடங்களே தேவையில்லை. இந்த மூன்றுபடங்களும், ஒரேஒலியில் அழுத்தாமலும், அழுத்தியும், அதிகமாகஅழுத்தியும் சொல்லவேண்டியஎழுத்துக்களை நன்கு விளக்குவதற்காக வேண்டியதிருக்கின்றன. படங்களுடன் விளக்கமும் கொடுக்கப்பட்டிருப்பதால், அதைப்பின்பற்றி இந்தப்பாடத்தைக்கற்றக்கொடுக்கவும்.

பாடம் 11.

இந்தப்பாடமும், எழுத்துக்களை அழுத்தாமலும், அழுத்தியும், அதிகமாகஅழுத்தியும் சொல்லக் கற்றுக்கொடுப்பதற்காகவே ஏற்பட்டதாகும். இதை பாடத்தில் கூறியிருப்பதைப்போல் கற்றுக்கொடுக்கவும். இந்தப்பாடத்துடன் எழுத்தக்களைக்கற்பது முடிந்துவிடுவதால், இதன்கடைசியில் எழுத்தக்களில்பயிற்சிகொடுக்கப்பட்டுள்ளது. எழுத்தக்களில் மாணவர்கள் 100க்கு100மார்க்குகள் வாங்கும்வரை தினமும் திரும்பத்திரும்பப்பயிற்சிகொடுக்கவும் இவ்வாறு இதிலுள்ளபடி எழுத்துக்களைக்கற்கும்படிசெய்தால், அவைகளை விரைவாகவும், சுலபமாகவும் நன்கு கற்றுக்கொள்ளமுடிவதுடன், அங்ஙனம் கற்றவைகளை எப்பொழுதம் மறக்காமலிருக்கவும்முடிகிறது.

பாடம் 12.

இந்தப்பாடம் ன-வரிஎழுத்துக்களையும், ண-வரி எழுத்துக்களையும் சொற்களில்புகுத்தி, சொற்களின் ஒலியை முறையே அழுத்தாமலும், அழுத்தியும் சொல்லக் கற்றுக்கொடுப்பதற்காக ஏற்பட்டதாகும். இந்தப்பாடத்தைக் கற்றுக்கொடுக்கும்விதம் பாடத்துடன்சேர்த்து எழுதப்பட்டுள்ளது.

பாடம் 13.

இந்தப்பாடம் ர-வரிஎழுத்துக்களையும் ற-வரிஎழுத்துக்களையும் சொற்களில்புகுத்தி, சொற்களின் ஒலியை முறையே அழுத்தாமலும், அழுத்தியும் சொல்லக் கற்றுக்கொடுப்பதற்காக ஏற்பட்டதாகும். இந்தப்பாடத்தைக் கற்றுக்கொடுக்கும்விதம் பாடத்துடன்சேர்த்து எழுதப்பட்டுள்ளது.

பாடம் 14.

இந்தப்பாடம் ல-வரிஎழுத்துக்களையும், ள-வரிழுளத்துக்களையும், ழ-வரிஎழுத்துக்களையும் சொற்களில் புகுத்தி, சொற்களின்ஒலியை முறையே அழுத்தாமலும், அழுத்தியும், அதிகமாகஅழுத்தியும் சொல்லக்கற்றுக்கொடுப்பதற்காக ஏற்பட்டதாகும். கற்றுக்கொடுக்கும்விதத்தைப்பாடத்தில்பார்க்க.

பாடம் 15, 16.

இந்தப்பாடங்கள் ஒளவையாரின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகியவைகளைப்பின்பற்றி அமைக்கப்பட்டவையாம். ஆத்திசூடி, கொன்றைவேந்தன் ஆகியவை நீதிகளைப்போதிப்பதற்காக உபயோகப்படுத்தப்பட்டாலும்; உண்மையில், அவைகள் சொற்களை குறில், நெடில்பிழையின்றி வாசிப்பதற்கும், எழுதுவதற்குமே ஏற்பட்டவையாம். தமிழில் 247எழுத்தக்களிருந்தாலும் சொற்களில் முதலெழுத்தாகவரக்கூடியவை 103எழுத்துக்களே. ஏனையஎழுத்துக்கள் சொற்களுக்கு முதலில் வாரா.

இந்தப்பாடங்களில்கண்டசொற்களை, புத்தகத்தைப்பார்த்தே எழுத்துக்கூட்டிவாசிக்கும்படிசெய்க.

பாடம் 17.

இந்தப்பாடம் சொற்களிலும், சொற்றொடர்களிலும் ட், ற் ஆகிய இரண்டுமெய்யெழுத்துக்களுக்குப் பின், வேறொருமெய்யெழுத்து வரக்கூடாதென்பதையும், வந்தால் பிழையாகுமென்பதையும் காட்டுவதற்காக ஏற்பட்டதாகும்.

இப்பாடத்தில்கண்டசொற்களை எழுத்துக்கூட்டி வாசிக்கும்படிசெய்க.

பாடம் 18.

ந-வரிஎழுத்துக்களும், ன-வரிஎழுத்துக்களும் ஒலியில் அநேகமாக ஒன்றாகஇருக்கின்றன. சொற்களில் ஒலிப்படி எந்தவரிஎழுத்துக்களைப்போடுவதென்பது திட்டவட்டமாக இலக்கணத்தில் கூறப்படவில்லை. முன்வழக்கப்படி எழுதுவதொன்றே முறையாகும். இப்பாடத்தில்கண்ட சொற்கள் மூலமாக ஒருதிட்டமான புதியவழக்கத்தை ஏற்படுத்தவேண்டும். சிலசொற்களைப்பாடத்தில் கொடுத்துள்ளோம்; பார்த்துத் தெரிந்துகொள்க.

பாடம் 19.

இந்தப்பாடம் தமிழில்கலந்துவரும் 65கிரந்தஎழுத்தக்களைக்கற்றுக்கொடுப்பதற்காகஏற்பட்டதாகும். வழக்கத்தில் 65எழுத்துக்களும் சொற்களில்வாரா; சிலஎழுத்துக்களேவரும். அந்தச்சிலஎழுத்தக்களைத்தனித்தனியாகக் கற்பது கடினம்; நீண்டகாலமுமாகும். கிரந்தமெய்யெழுத்துக்கள் ஐந்துடன் தமிழ்உயிரெழுத்து ஒலிமுறையே சேர்ந்துவருவதால், 65எழுத்தக்களையும் உடனே கற்றுவிடலாம்; அவைகளை மறக்கவும்இயலாது. தமிழ்எழுத்துக்களின்ஒலி தனிஒலியாக இருப்பதால், இந்த 65கிரந்தஎழுத்துக்களின் ஒலியையும், வடிவத்தையும் கற்றிருப்பது பிறமொழிகளைக்கற்க உதவியாகஇருக்கும்.

தமிழ்உயிரெழுத்தக்கள் குறில், நெடில்ஒலிகளைக்கொண்டவைகளாகஇருப்பதால், இந்தப்பாடத்திலுள்ள குறில், நெடில்எழுத்துக்களையும் இரட்டையாகவும், நெடிலை நீட்டிச்சொல்லியும் கற்கவேண்டும். இந்தப்புத்தகத்தின் முதற்பாடத்தில் கிரந்தமெய்யெழுத்துக்கள்ஐந்தும், ஐந்துகோடுகளுக்குள் அமைத்துக்காட்டப்பட்டுள்ளன. அவைகளை, முதலில் ஐந்துகோடுகளிலும், மூன்றுகோடுகளிலும், பின் ஒரு கோட்டிலும் எழுதிப்பழகியபிறகு, 65எழுத்துக்களையும் ஒரு கோட்டில் எழுதக்கற்றுக்கொடுக்கவும்.

பாடம் 20.

இந்தப்பாடம், கிரந்தஎழுத்துக்களைச் சொற்களில் புகுத்திக்காட்டுவதற்காக ஏற்பட்டதாகும். இந்தப் பாடத்தில்கண்ட சொற்களை எழுத்தக்கூட்டிவாசிக்கும்படி செய்க.

பாடம் 21.

தமிழ்எழுத்துக்களைப்பிழையின்றிக் கற்றிருந்தால், எந்தத்தமிழ்ச்சொற்களையும், சொற்றொடர்களையும் அவைகளின்ஒலிப்படி பிழையின்றி வாசிக்கவும், எழுதவும்முடியுமென்றாலும், பிழையின்றி சொற்களின்ஒலியையும், சொற்றொடர்களின்ஒலியையும் தெரிந்திருக்கவேண்டும். நாம் பேசும்போது சொற்களின்ஒலியையும், சொற்றொடர்களின்ஒலியையும் பிழையாகவோ, கொச்சையாகவோ சொல்லிவிடுகிறோம். நாம் கொச்சையாகப்பேசுவதுபோலவேஎழுதிவிடக்கூடாது; வாசித்துவிடக்கூடாது. சொற்களின் சரியானஒலியையும், சொற்றொடர்களின் சரியானஒலியையும் தெரிவதற்கு வாக்கியங்களைப் பிழையின்றி வாய்விட்டுவாசித்துப்பழகவேண்டும். இப்படிப்பட்ட வாசிப்புப்பழக்கத்தினால்மாத்திரந்தான் இந்தப்பாடத்தில்கண்ட பிழைகளைப்போக்கமுடியும்.

பாடம் 22.

தமிழ்ச்சொற்களை எழுதும்போதும், வாசிக்கும்போதும் ஒருபிழைகூடஏற்படக்கூடாதென்பதற்காக, இதுவரை பாடங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன; ஆனால், இதுவரை சொற்களில்பயிற்சி கொடுக்கப்படவில்லை. இப்பாடத்தில்தான் சொற்களில்பயிற்சி கொடுக்கப்பட்டிருக்கின்றது. அதைப்பாடத்தின்கடைசியில்கண்டபடி பயிற்சிகளைச்செய்து தேர்ச்சிபெறச்செய்க. முழுத்தேர்ச்சி காட்டாவிட்டால், 4முதல் 21முடியவுள்ளபாடங்களில் 8, 9 ஆகியபாடங்கள்நீங்கலாக மற்றப் பாடங்களிலுள்ள சொற்களை எழுத்துக்கூட்டிவாசிக்கும்படிசெய்ய வேண்டும். இதுமுக்கியமாகும்.

பாடங்கள் 23, 24, 25, 26.

சொற்றொடர்களைப்பிழையின்றி எழுத வாசிக்கத்தெரிவதற்கு இப்பாடங்களில்காட்டியுள்ளபடிகற்பது போதுமானது.

பாடங்கள் 27, 28.

29ஆம்பாடத்தில்கண்ட பலவிகாரச் சொற்றொடர்களின்பொருளை எளிதில் தெரிந்துகொள்வதற்கும்,

பலவிகாரச்சொற்றொடர்களை இருசொற்களாகப்பிரிப்பதற்கும் இந்தப்பாடங்கள் எல்லோருக்கும் மனப்பாடமாகத்தெரிந்திருக்க வேண்டும்.

குருடர்கள், தமிழை எளிதில்கற்பதற்கும், பொது அறிவைப்பெறுவதற்கும் உயிரெழுத்து, மெய்யெழுத்து ஆகிய 30எழுத்துக்களைமட்டும்கொண்ட புத்தகங்கள் உண்டு. உயிர்மெய்யெழுத்துக்களுக்கு தனிஒலி இல்லாதபடியால் உயிர், மெய் ஆகியவைகளைக்கொண்டே சுருக்கெழுத்தும் (Shorthand) அமைக்கலாம்.

பாடம் 29.

இந்தப்பலவிகாரச்சொற்றொடரைக் கற்பது கடினமென்றும், அதைக்கற்பதற்கு சந்தியிலக்கணத்தைக்கற்றுத்தான் ஆகவேண்டுமென்றும் அநேகர் சொல்லக்கூடும். அவ்வாதம் சரியன்று. ஏனெனில், பலவிகாரச்சொற்றொடரையும் அதன் ஒலிப்படியே எழுதிவிடலாம்; வாசித்துவிடலாம்; பொருளையும்தெரிந்துகொள்ளலாம்

பலவிகாரச்சொற்றொடரை பிழையின்றி எழுதுவதற்கும், வாசிப்பதற்கும் சந்தியிலக்கணம் தெரியவேண்டுமென்பதில்லை. இலக்கணங்கற்கும்போது சந்தியிலக்கணத்தைக்கற்றுக்கொள்ளலாம்.

பாடங்கள் 30, 31, 32.

வாக்கியங்களைக்கற்கத்தொடங்குமுன், குறிப்பிட்டபெயர்ச்சொற்களுக்கு ஆண்பாலுக்குப்பெண்பாலும்; ஒருமைக்குப்பன்மையும், ஒரு பதத்திற்கு எதிர்ப்பதமும் சொல்லத்தெரிந்திருக்கவேண்டும்.

பாடம் 33.

இந்தப்பாடம் மிகவும்முக்கியமானதாகும். இந்தப்பாடத்திலுள்ள வேற்றுமையுருபுகளையும், சொல்லுருபுகளையும் நன்கு மனப்பாடஞ்செய்துகொள்ளவேண்டும். அப்படியானால்தான், பெயர்ச்சொற்களுடன் உருபுகளைச்சேர்த்து உடனே சொல்லமுடியும். சொந்தத்தில் வாக்கியங்களை எழுதுவதற்கும், சொல்வதற்கும் பெயர்ச்சொற்களுடன் உருபுகள்

சேர்த்துச்சொல்லத்தெரிந்திருக்கவேண்டியது மிகமிகமுக்கியமாகும்.

பாடம் 34.

ஏராளமானபெயர்ச்சொற்கள்இருந்தாலும், 34ஆம்பாடத்தில்கண்ட 31வகைபெயர்ச்சொற்களுடன் உருபுகளைச்சேர்த்துச்சொல்லத்தெரிந்தால்போதும்;எந்தப்பெயர்ச்சொல்லுடனும் உருபுகள்சேர்த்துச் சொல்லத்தெரிந்துவிடும். ஏனென்றால், எல்லாப்பெயர்ச்சொற்களுடனும் உருபுகள்சேரும்போது இந்தப்பாடத்தில்கண்ட உருபுகள்சேர்ந்துவருவதைப் போலவேதான் வரும்.

பாடம் 35.

34ஆம்பாடத்தில் எல்லாப்பெயர்ச்சொற்களும் விகாரமடையாமல் உருபுகள்சேர்ந்துவருவதைக் காட்டியுள்ளோம். இந்தப்பாடத்தில் சிலபெயர்ச்சொற்கள்மட்டும் விகாரமடைந்து அதாவது முற்றிலும்மாறி உருபுகள் ஏற்பதைக்காட்டியுள்ளோம். இதைத்தெரிந்துகொள்க.

பாடம் 36.

31வகைப்பெயர்ச்சொற்களுடன் உருபுகள்சேர்ந்துவருவதைத்தெரிந்துவிட்டால், எந்தப்பெயர்ச்சொல்லையும் உருபுகள்சேர்த்துச்சொல்லவும், எழுதவும்தெரிந்துவிடுவதுபோல, 34வகைவினைப்பகுதிகள் 27வகைவினைமுற்றுக்களாகமாறுவதை இந்தப்பாடத்தில் தெரிந்துகொண்டுவிட்டால், எந்தவினைப்பகுதியையும் 27வினைமுற்றுக்களாகச்சொல்லவும், எழுதவும் தெரிந்துவிடும். ஒருவாக்கியத்தை, இலக்கணப்பிழையின்றி எழுதுவதற்கு இந்தப்பாடம் முக்கியமாகும்.

பாடம் 37.

இந்தப்பாடத்தில் வினைமுற்றுக்களை வைத்து சிறுவாக்கியங்களைஉண்டாக்கி, அவைகளில் எழுவாய், பயனிலை, செயப்படுபொருள் ஆகியவைகளைத்தெரிந்துகொள்ளும் விதம் காட்டப்பட்டுள்ளது.

பாடம் 38.

வினைமுற்றுக்களைவைத்து விரிவான வாக்கியங்கள் உண்டாக்கும்விதம் இந்தப்பாடத்தில் காட்டப்பட்டுள்ளது. இதைப்பின்பற்றி ஏராளமான விரிவானவாக்கியங்களை உண்டாக்கும்படிசெய்க.

பாடம் 39.

இந்தப்பாடத்தில் பெயர்ச்சொல்லுடன் உருபுகளைச்சேர்த்து வாக்கியங்கள் உண்டாக்கிக்காட்டப்பட்டுள்ளன. இதைப்பின்பற்றி ஏராளமான வாக்கியங்களை உண்டாக்குப்படிசெய்க.

பாடம் 40.

இந்தப்பாடம் முக்கியமானதாகும். தமிழ்மரபுப்படி குறிப்பிட்டஎழுவாய்க்கு குறிப்பிட்டபயனிலை தான் போடவேண்டும். வேறு பயனிலையைப்போடுவது இலக்கணப்படி பிழையில்லாவிட்டாலும், மரபுப்படிபிழையாகும்.

பாடம் 41.

இருசொற்கள், அவற்றின்நெருங்கிய ஒலியின் காரணத்தால் ஒன்றற்கொன்று குழப்பம் ஏற்படக் காரணமாகி, அதனுல் பிழைஏற்படக்கூடும். அதற்கு இந்தப் பாடத்தில்கண்ட வாக்கியங்களைப்படித்து குழப்பமும், பிழையும் ஏற்படாமல் செய்துகொள்ளவேண்டும்.

பாடங்கள் 42, 43, 44, 45, 46.

இந்தப்பாடங்களில் சொந்தத்தில் கணக்கற்றவாக்கியங்கள்சொல்லவும், எழுதவும் வழிகாட்டியுள்ளோம். வாக்கியத்தைமட்டும் கொச்சையின்றியும், பிழையின்றியும் சொல்லும்படிசெய்யவேண்டும். அப்படிச்சொல்லச்செய்துவிட்டால் பிழையின்றிஎழுதிவிடலாம்; வாசித்துவிடலாம். இந்தப்பாடங்களில் சிலவாக்கியங்கள்மட்டும் அமைத்துக்காட்டியுள்ளோம். இந்தப்பாடங்களிலேயே இன்னும் ஏராளமான வாக்கியங்களை சொந்தத்தில் உண்டாக்கலாம். மேலும், முக்கியமான பொருள்களைவைத்தும் சொந்தத்தில் வாக்கியங்கள் உண்டாக்கவேண்டும்.

பாடங்கள் 47, 48, 49, 50, 51.

ஏற்கெனவே 42முதல்46ஆம்பாடங்கள்முடிய முக்கியபொருள்களைப்பற்றி சொந்தத்தில் வாக்கியங்கள்உண்டாக்கப்பயிற்சிகொடுக்கப்பட்டுள்ளது. ஆதலால், இந்தப்பாடங்களில் முக்கியபொருளைப்பற்றி 4, 5 கேள்விகளைக் கொடுத்து அவைகளுக்கு எளிதில் விடைகள்எழுதும்படி செய்யலாம்.

பாடம் 52.

சொந்தத்தில் வாக்கியங்கள் எழுதவும், சிறுகட்டுரைகள்எழுதவும் முடிந்தாலும், கடிதங்கள் எழுதும் முறையையும் நன்கு கற்றுக்கொடுத்தால்தான் அவைகளைத் திறம்பட எழுதமுடியும். இவைகளைப்பற்றி "கட்டுரைகளும், கடிதங்களும் எழுதும்வழி" என்ற தனியானபுத்தகத்தில்இன்னும் விளக்கமாகக் கூறப்படும். இந்தப்பாடத்தில் ஒருமாதிரிக்கடிதம் மாத்திரம் கொடுத்துள்ளோம்.

—::—

அனுபந்தம் 3.

இப்புத்தகத்திற்குரிய கேள்விகள்.

நிபந்தனைகள்.

1. விடைகளில் ஒருபிழைகூட இருக்கக்கூடாது.
2. பாலகுருகுல அழகியஎழுத்துமுறைப்படிதான் எழுத வேண்டும்.
3. எழுத்துக்களை பொடியாகவும், பருமனுகவும் கலந்து எழுதாமல் ஒரேசீராக பொடியாக எழுதவேண்டும்.

4. விடைகளை வெகுவிரைவில் எழுதிமுடிக்கவேண்டும்.

5. ஒவ்வொருவிடையையும் எழுதிமுடிக்கஏற்பட்ட நிமிடங்களைக்குறிப்பிடுக.

6. வாக்கியத்தில் கடைப்பிடிக்கவேண்டிய விதிகளைப்பின்பற்றியே எழுதவேண்டும்.

எழுத்து.

1. 9ஆம்பாடத்தைப்பின்பற்றி 247எழுத்துக்களையும் ஒருதாளில் பென்சிலால் சன்னமான ஒற்றைக்கோடுகள்போட்டு, அவற்றின்மேல் மையால் எழுதுக. கோட்டிற்குக்கோடு5/16 அங்குல தூரமிருக்கவேண்டும்.

2. கீழேகண்டஎழுத்துக்களில் நீட்டாமலும், நீட்டியும் சொல்லவேண்டிய எழுத்துக்களை தனித்தனியாக எடுத்தெழுதுக:—
பெ, வே, கூ, கெ, போ, மெ, கோ, டி, பூ, கை

3. கீழேகண்டஎழுத்துக்களில் அழுத்தாமலும், அழுத்தியும், அதிகமாகஅழுத்தியும் சொல்லவேண்டிய எழுத்துக்களை தனித்தனியாக எடுத்தெழுதுக:—
ரா, ஊ, லு, ழை, ரோ, ஞே, வி, ழு, ள, ளி, ளு, ழ, ணே, ரு, ரே, ஞே, லே, னு, ல.

4. ண், ற், ன்ஆகிய மெய்யெழுத்துக்களுடன் ஆ, ஒ, ஓ ஆகிய உயிரெழுத்துக்களைச்சேர்த்து உயிர்மெய்யெழுத்துக்களாக எழுதுக.

5. ண், ல், ள், ன் ஆகிய மெய்யெழுத்துக்களுடன் ஐ என்ற உயிரெழுத்தைச்சேர்த்து உயிர்மெய்யெழுத்துக்களாக எழுதுக.

சொல்.

1. 22ஆம்பாடத்தில் காட்டியுள்ளபடி 76எழுத்துக்களையும் எழுதி, ஒவ்வொன்றும் சொல்லுக்குமுதலில்வரும்படி சொந்தத்தில் 76சொற்கள் எழுதுக.

2. அந்த 76சொற்களையும் வாக்கியங்களில் அமைத்து சொந்தத்தில் 76வாக்கியங்கள் எழுதுக.

3. ட் என்னும் மெய்யெழுத்தைக்கொண்டுவந்துள்ள சொல் ஒன்றும், ற் என்னும் மெய்யெழுத்தைக்கொண்டுவந்துள்ள சொல்ஒன்றும் சொந்தத்தில் எழுதி, அச்சொற்கள் வாக்கியங்களில் வரும்படி இருவாக்கியங்கள் எழுதுக.

4. கீழேகண்டசொற்களை வாக்கியங்களில் அமைக்க:—
(i) ஒலி, ஒளி, ஒழி.
(ii) ஆனி, ஆணி.
பனி, பணி.
(iii) எரி, எறி.

சொற்றொடர்.

1. தோன்றல்சொற்றொடரில், இடையில் தோன்றக்கூடிய எட்டு மெய்யெழுத்துக்களையும், அவைகளைக்கொண்டஎட்டுச் சொற்றொடர்களையும், அவ்வெட்டுச்சொற்றொடர்களைக் கொண்ட எட்டுவாக்கியங்களையும் சொந்தத்தில் எழுதுக.

2. கெடுதல்சொற்றொடரில், இடையில் கெடும் மெய்யெழுத்துக்கள் மூன்றையும் எழுதி, அவைகள் கெட்டுவந்துள்ள சொற்றொடர்கள் மூன்றையும், அச்சொற்றொடர்களைக் கொண்ட வாக்கியங்கள்மூன்றையும் சொந்தத்தில் எழுதுக.

3. திரிதல்சொற்றொடரில், சொற்களுக்கிடையில் மாறுதலடையும் மெய்யெழுத்துக்களை எழுதி, அவை ஒவ்வொன்றிற்கும் ஒரு சொற்றொடர் எழுதி, அந்தச்சொற்றொடர்களைக் கொண்ட வாக்கியங்களையும் சொந்தத்தில் எழுதுக.

4. பலவிகாரச்சொற்றொடரில் பண்பு, திசை, எண் ஆகியவற்றில் வகைக்கு ஒரு சொற்றொடர் எழுதி ஒவ்வொன்றினையும் வாக்கியங்களிலும் அமைத்துக்கூறுக.

வாக்கியம்.

1. வேற்றுமைகளின் எல்லா உருபுகளையும், சொல்லுருபுகளையும் எழுதி, அவைகளை வாக்கியங்களில் அமைத்தும் காட்டுக.

2. எந்தப்பெயர்ச்சொல்லுடனும் உருபுகள் சேர்த்துச்சொல்வதற்கும், எழுதுவதற்கும் ஏதுவாயுள்ள 31வகைப் பெயர்ச்சொற்களை எழுதுக.

3. எந்த வினைப்பகுதியையும் 27 வினைமுற்றுக்களாக்கிச் சொல்வதற்கும், எழுதுவதற்கும் ஏதுவாயுள்ள 34வகை வினைப்பகுதிகளை எழுதுக.

4. நட என்ற வினைப்பகுதியைவைத்து 27வினைமுற்றுக்கள் எழுதுக. இந்த 27வினைமுற்றுக்களை 27சிறுவாக்கியங்களாக்கிக்கூறுக. "கற்றான்" என்ற வினைமுற்றை விரிவான வாக்கியமாக்கிக்காட்டுக.

5 "விருதுநகர்" என்ற தலைப்பைக்கொண்ட கட்டுரையைப் பின்பற்றி அவரவர்களின் சொந்த ஊரைப்பற்றிச் சொந்தத்தில் ஒருகட்டுரை எழுதுக.

6. உனக்குப்பிரியமான உறவினர் ஒருவருக்குக் கடிதம்எழுதுக.

குறிப்பு:- மேலேகண்ட கேள்விகளைப்பின்பற்றி அடிக்கடி கேள்விகள்கொடுத்து, அவைகளுக்கு விடைகள் எழுதும்படி செய்யவேண்டும். கேள்விகளுக்குரிய விடைகளை எழுதுவதற்கு பாடத்துடன் கொடுக்கப்பட்டிருக்கின்ற பயிற்சிகளை நன்கு செய்யும்படி பழக்கவேண்டும்.

—✷—

அச்சுப்பிழைகளும், திருத்தங்களும்.

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
௬	2	ர—வறி	ர—வரி
16	8	சொல்லுமபடியும்	சொல்லும்படியும்
26	8	76 எழூத்துக்களில்	76 எழுத்துக்களில்
30	34	வாட்பட்டை	வாட்படை
37	24	எழூத்து	எழுத்து
38	20	கடைசியில் ன்	கடைசியில் ள்
40	20	உயிர்மெய் யெழூத்துக் களை	உயிர்மெய் யெழுத்துக்களை
59	8	படிததார்கள்	படித்தார்கள்
62	10	வேகினறன	வேகின்றன
70	எண்		
	18	மாண்	காண்
90	25	தான்	தாம்
93	30–31	என்ற......மிகுந்தது	என்பதே சிவபக்தர்கள் கொள்கை
94	3	கீழ்க்ண்டவற்றில்	கீழ்க்கண்டவற்றை
,,	8	நூற்றுக்கு நூறுமார்க்கு	நூற்றுக்கு நூறு மார்க்குகள்
101	27	சிறு கட்டுரைகள்	சிறு கட்டுரை
,,	30	அவைகளை	அதை
108	1	முகம் கழூவி	முகம் கழுவி
112	25	தமிழ்க்கற்க	தமிழ்கற்க
122	25	திட்டக்	திட்ட
,,	26	வா.	வாக்

பாலகுருகுல வித்யாலயம். ★ விருதுநகர். ★

எங்கள் மலிவான சிறந்த வெளியீடுகள்

தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி

(நான்காம் பதிப்பு) 168 பக்கங்கள், தமிழ் வசனத்தைப் பிழையின்றி எளிதில் விரைவாகக் கற்க உதவக் கூடிய சிறந்த புத்தகம். விலை ரூ. 1 0 0

தமிழ் 247 எழுத்துக்கள் கொண்ட அட்டை

(பத்தாம் பதிப்பு) உச்சரிப்பு விளக்கப்படங்களுடன் எல்லா வகுப்புக்களுக்கும் உதவக்கூடியது. விலை ரூ. 0 1 0

சிறுவர் செய்யுட் கோவை

(2-ஆம் பதிப்பு) ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலக நீதி, நறுந்தொகை, மூதுரை, ஔவையார் தனிப்பாடல்கள் முதலியவைகளைக் கொண்டது. விலை ரூ. 0 1 6

பால குருகுல எண்சுவடி வாய்ப்பாடு

(3-ஆம் பதிப்பு) தமிழ் முறை வாய்ப்பாடுகளையும் ஆங்கில முறை வாய்ப்பாடுகளையும், நிறுத்தல், முகத்தல், நீட்டலளவை வாய்ப்பாடுகளையும் கொண்டது. விலை ரூ. 0 2 0

கலைமகள் வணக்கப் பாடல்களும் இதர பாடல்களும் (இலவசம்)

கி. பெ. சி. வ. பிரகாசம்,
நிர்வாகி,
பால குருகுல வித்யாலயம், விருதுநகர்.

குறிப்பு:- ரூபாய் ஒன்று அனுப்பினால் "தமிழ் வசனத்தை எளிதில் கற்கும் வழி" என்ற புத்தகம் நூல் அஞ்சல் மூலம் அனுப்பப்பெறும். அதிகப் பிரதிகளுக்கு முன் பணத்துடன் ஆர்டர் செய்தால் தக்க கமிஷன் கழித்து எங்கள் செலவில் ரயில்வே பார்சல் மூலம் அனுப்பப் பெறும். வி. பி. பி. யில் அனுப்புவதால் அதிகச்செலவு ஏற்படும்.

Jacket Printed at Neo Art Press, Madras-2.